விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது

Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 ஆவணி 05 செவ்வாய்க்கிழமை (21.08.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 246

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# வெற்றிக்களிப்பை நிறுத்துங்கள்!

# நல்லிணக்கத்தை ஏற்படுத்துங்கள்!

## இலங்கை அரசிற்கு நோபல் பரிசாளர் அறிவுரை



(கொழும்பு)

இலங்கை அரசாங்கம் வெற்றிக்களிப்பை கொண்டாடுவதை நிறுத்திவிட்டு நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை தொடங்க வேண்டும் என்று அமைதிக்கான நோபல் பரிசு பெற்றவரான லேமா ராபர்ட்டா குவோவீ அழைப்பு விடுத்துள்ளார்.

(20ஆம் பக்கம் பார்க்க)

## ஜி.எஸ்.பி.வரிச்சலுகை நீடிக்கப்பட மாட்டாது!

(கொழும்பு)

மனிதவுரிமை மீறல்களால் இலங்கைக்கு வழங்கப்படாது விடப்பட்ட ஜீ.எஸ்.பி. வரிச்சலுகை மீண்டும் நீடிக்கப்பட மாட்டாது என ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

ஒன்றியத்தின் இலங்கை மற்றும் மாலை தீவுக்கான பிரதிநிதி பெர்னாட் சாவேஜ் இதனைத் தெரிவித்துள்ளார். கடந்த சில மாதங்களுக்கு முன்னர் இலங்கையின் மனித வுரிமைகள் நிலைவரங்களைக் காரணம் காட்டி ஐரோப் (20ஆம் பக்கம் பார்க்க)


## ராதிகா சிற்சபேசனுக்கு இந்தியாவில் விருது

(புதுடில்லி)

கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர் ராதிகா சிற்சபேசனுக்கு இந்தியாவின் வி.கே.கிருஷ்ண மேனன் விருது அறிவிக்கப்பட்டுள்ளது. மனித வுரிமைகளுக்காக ஆற்றிய பணிக்காகவே, ராதிகா சிற்சபேசனுக்கு இந்த விருது வழங்கப்படவுள்ளது.

இந்தியாவில் ஜவகர்லால் நேருவின் அமைச்சரவையில் பாதுகாப்பு அமைச்சராக இருந்த (20ஆம் பக்கம் பார்க்க)

## மீண்டும் ஒரு யுத்தத்தை சம்பந்தன் உருவாக்கிறார்!



### மகிந்தானந்த அளுத்கமகே கண்டுபிடிப்பு

(மட்டக்களப்பு)

நாட்டில் மீண்டுமொரு யுத்தம் ஏற்பட்டு தமிழ் மக்கள் துயரப்பட வேண்டும் என்பதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனும் அக்கட்சியினரதும் தேவையாகும் என்று அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

இவ்வாறானதொரு நிலைமை காணப்பட்டாலேயே புலம்பெயர் தமிழர்களின் பெருந்தொகைப் பணம் (20ஆம் பக்கம் பார்க்க)

## திருக்கேதீஸ்வர திருப்பணிக்கு இந்தியா நிதியுதவி

(மன்னார்)

புத்தபெருமானின் கபிலவஸ்து சின்னங்களை இலங்கைக்கு எடுத்து வந்துள்ள இந்திய கலாசார அமைச்சர் குமாரி செல்யா மன்னாரில் உள்ள திருக்கேதீச்சரம் ஆலயத்திற்கும் நேற்று திங்கட்கிழமை விஜயம் செய்து அந்த ஆலயத்தின் மகா மண்டப திருப்பணி வேலைகளை ஆரம்பித்து வைத்திருக்கின்றார்.

இந்த ஆலயத்தின் கருவறையும் ஏனைய முக்கிய இடங்களும் கருங்கல்லினால் (20ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கில் படைகளை குறைப்பது தொடர்பிலான அரசாங்கத்தின் போக்கில் தமிழ்மக்கள் அதிருப்தி!

### அமெரிக்க தூதுவருக்கு யாழ் ஆயர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

வடக்கிலிருந்து படைத்தரப்பு குறைக்கப்படுவதாக அரசாங்கம் கூறிக்கொண்டாலும் அதில் தமிழ் மக்களுக்கு திருப்தி ஏற்படவில்லை என அமெரிக்க பிரதித் தூதுவரிடம் யாழ்.ஆயர் தோமஸ் சௌந்தர நாயகம் ஆண்டகை சுட்டிக்காட்டியுள்ளார்.

யாழ்.மாவட்டத்திற்கு நேற்று விஜயத்தை மேற்கொண்ட அமெரிக்கப்பிரதித்தூதுவர் வில்லியம்ஸ் வின்ரெயின் தலைமையிலான குழுவினர் யாழ்.ஆயரை அவர் இல்லத்தில் மாலை 4 மணியளவில் (20ஆம் பக்கம் பார்க்க)

## யசூசி அகாசி கொழும்பு விஜயம்

(கொழும்பு)

ஜப்பானின் இலங்கைக்கான விசேட பிரதிநிதி யசூசி அகாசி இன்றைய தினம் கொழும்புக்கு விஜயம் செய்யவுள்ளதாக



தெரிவிக்கப்படுகிறது.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு இறுதி அறிக்கை பரிந்துரை அமுலாக்கம் மற்றும் தேசிய செயற்றிட்டம் ஆகியன தொடர்பில் (20ஆம் பக்கம் பார்க்க)

## சரத்-இந்திய தூதுவர் இரகசியச் சந்திப்பு!

(கொழும்பு)


முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கும் இலங்கையிலுள்ள இந்திய உயர் தூதரகத்தின் உயர்மட்ட அதிகாரிகளுக்குமிடையில் இரகசிய சந்திபொன்று இடம்பெற்றுள்ளதாக செய்திகள் வெளிவந்துள்ளன. (20ஆம் பக்கம் பார்க்க)

## காணாமல் போனோர் தொடர்பில் ஆராய விசேட குழு யாழ் விஜயம்

(யாழ்ப்பாணம்)

யுத்தம் நடைபெற்ற காலத்தில் காணாமல் போனவர்கள் தொடர்பில் ஆராய்வதற்கு இலங்கை மனிதவுரிமை ஆணைக்குழுவின் விசேட குழுவொன்று யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளதாக மனிதவுரிமை ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய இணைப்பாளர் ரி.கனகராஜ் தெரிவித்துள்ளார்.

யுத்தம் நடைபெற்ற காலப்பகுதியில் பெருமளவானவர்கள் காணாமல் போயுள்ளனர். அதிலும் 2006ஆம் ஆண்டில் இது தொடர்பில் அதிக (20ஆம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஐ.நாவின் கண்காணிப்புக்குழு அவசியமானது

## த.தே.ம.முன்னணி வலியுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் யுத்தத்திற்கு பின்னரான காலப்பகுதியிலும் தமிழ் மக்கள் அன்றாடம் தமது வாழ்க்கையில் பல பிரச்சினைகளை எதிர் கொண்டு வருகின்றனர். இவற்றைத் தடுக்க ஐ.நாவின் கீழ் கண்காணிப்புக்குழு நியமிக்கப் பட வேண்டும் என இலங்கைக் கான அமெரிக்க பிரதித் தூதுவரிடம் தமிழ்த் தேசிய மக்கள் முன் னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன் னம்பலம் வலியுறுத்தியுள்ளார்.

யாழ். மாவட்டத்திற்கு நேற்று வருகை தந்த இலங்கைக்கான அமெரிக்க பிரதித் தூதுவர் வில்லியம்ஸ் வின்ரெயின் தலைமையிலான குழுவினர் பலதரப்பட்டவர்களையும் சந்தித்து சமகால நிலைவரம் தொடர்பாக கேட்டறிந்து கொண்டனர்.

இதில் யாழ் ரில்கோ ஹோட்டலில் முற்பகல் 10 மணியளவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் மற்றும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன், தேசிய அமைப்பாளர் மணிவண்ணன் ஆகி யோரை சந்தித்து கலந்துரையாடியிருந்தார் அமெரிக்க தூதுவர்.

இதன் போதே கஜேந்திரகுமார் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பு தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

அமெரிக்க பிரதித் தூதுவரிடம் இரண்டு விடயங்களை தெரிவித்திருந்தோம். ஒன்று யுத்தத்திற்கு பின்னரான காலப் பகுதியிலும் தமிழ் மக்கள் அன்றாடம் தமது வாழ்க்கை யில் எதிர்கொள்ளும் பிரச்சினை மற்றையது அரசியல் தொடர்பானது.

மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளில் பிரதானமானது இராணுவம் மேற்கொண்டு வரும் நிலப்பறிப்பு. அத்தோடு சிவில் நிர் வாகத்தில் இராணுவத் தலையீடு. இது தவிர இராணுவ முகாம் உள்ள பகுதிகளில் பௌத்த மதம் பரப்பும் நடவடிக்கைகள் தொடர்பில் குறித்துக் கூறினோம்.

இதில் மதம் சார் நடவடிக்கைகளினால் தமிழ் மக்களின் கலாசாரம், தனித்துவம் சீர ழிக்கப்படுகிறது எனவும் சுட்டிக்காட்டப் பட்டது.

இது ஒருபுறம் இருக்க பொருளாதார வசதி யிலும் பாரிய தாக்கத்தை சிங்களவர்கள் ஏற் படுத்தி வருகின்றனர்.

தென்னிலங்கையில் உள்ள பெரிய வர்த் தக நிறுவனங்கள் வடக்கில் போரினால் பாதிப் படைந்த நிலையில் வர்த்தகத்தில் ஈடுபட்டு வருபவர்களுக்கு போட்டியாக தமது நிறுவனக் கிளைகளை ஸ்தாபித்து வருகின்றன.

இவ்வாறு தமிழ் மக்களை எல்லாக் கோணத்திலும் அழிக்கும் நடவடிக்கைகள் சிங் களவர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதனைத் தடுக்க ஐ.நாவின் கீழ் கண் காணிப்புக்குழு நியமிக்கப்படவேண்டும்.

தமிழர்களுக்கு எதிராக மேற்கொள்ளப் படும் நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்த வேண்டும்.

ஆயுதப் போராட்டத்தை ஒடுக்க சர்வதேச சமூகம் இலங்கை அரசாங்கத்திற்கு துணை போனது. இதில் அமெரிக்காவுக்கும் இந்தியா வுக்கும் பெரும் பங்குண்டு.

எனவே எஞ்சியுள்ள தமிழ் மக்கள் தமது அன் றாட வாழ்க்கையில் எதிர் நோக்கும் பிரச்சினை களை தடுத்து நிறுத்த முன்வர வேண்டும்.

மேலும் தமிழ் தேசத்தை சர்வதேச நாடு கள் அங்கீகரிக்க வேண்டும். சிங்கள பௌத்த மயமாக்கலை தடுத்து நிறுத்த அந்த அங்கீ காரம் சிறுபான்மை இன மக்களான தமிழ் மக்களுக்கு அவசியம் என சுட்டிக் காட்டிய தாக அவர் மேலும் தெரிவித்தார். (ந-6)

# கீரிமலை இந்து மயானத்தில் இறுதிச்சடங்குகளிற்கு தடையா? கடற்படை காரணமா?

வலிகாமம் வடக்கு - கீரிமலை, செம்மண் காடு இந்து மயானத்தில் இறுதிச்சடங்குகளை மேற்கொள்ள கடற்படையினர் தொடர்ந்தும் அனுமதி மறுத்து வருவதாக பிரதேச மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர். கடந்த ஆண்டின் பிற்பகுதியில் குறித்த மயானத்தில் சடலங் களை எரியூட்ட கடற்படை அனுமதி வழங்கி யது. பின்னர் திடீரென அதற்குத் தடை விதிக் கப்பட்டது.

இதனையடுத்து கடந்த 1ஆம் திகதி கீரி மலை நகுலேஸ்வரர் ஆலய குருக்களின் மனைவியின் சடலத்தை தகனம் செய்ய கடற் படையினர் அனுமதி வழங்கியிருந்தனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் பிரதே சத்தில் உயிரிழந்த ஒருவரின் சடலத்தை குறித்த மயானத்தில் தகனம் செய்வதற்குக் கோரிக்கை விடுக்கப்பட்டது.

எனினும் கடற்படையினர் அதற்கு அனும திக்கவில்லை. இந்நிலையில் சடலத்தை மயானத்திற்கு அருகில் தனியார் காணியில் எரியூட்ட ஏற்பாடு செய்யப்பட்டது.

குறித்த மயானம் அப்பகுதியிலுள்ள மூன்றிற்கும் மேற்பட்ட கிராம மக்களால் பயன்படுத்தப்பட்டு வந்தது. சமய ஆசார ரீதி யாக முக்கியத்துவம் வாய்ந்த ஒருமயானமா கவும் நீண்டகாலம் விளங்கி வருகின்றது.

இந்நிலையில் இந்த மயானத்தை மக்கள் பயன்படுத்துவதற்கு பார்துகாப்புக் காரணங் களைக் காட்டி கடற்படையினர் தொடர்ந்தும் தடை விதித்து வருகின்றனர்.

எமது நிலத்தை அத்துமீறி ஆக்கிரமித் துள்ள படையினர் எமது உறவுகளின் இறுதிச் சடங்கைக் கூட செய்ய அனுமதி மறுத்து வரு வது அவர்களின் எதேச்சதிகாரப் போக்கைக் காட்டுவதாக அப்பகுதி மக்கள் குற்றம் சாட்டி யுள்ளனர். (ந-11)

# மொழித்திறன் பயிற்சி யாழில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

2011ஆம் ஆண்டு இலங்கை நிர்வாக சேவைக்கு புதிதாக தெரிவு செய்யப்பட்ட தென் னிலங்கையைச் சேர்ந்தவர்களுக்கு யாழ் மாவட்டத்தில் உள்ள கிராமங்களில் கலாசாரம் மற்றும் மொழித்திறன் போன்றவற்றை வளர்த்துக் கொள்வதற்கான பயிற்சிநெறி நேற்று வைபவரீதியாக ஆரம்பமாகியது.

இவ்வைபவமானது நேற்று யாழ் மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. சிங்கள மொழி மூலம் தெரிவு செய்யப்பட்ட 123 பேர் இப்பயிற் சிக்காக யாழ் மாவட்டத்திற்கு வருகை தந்துள் ளனர். அதன்படி ஒவ்வொரு பிரதேச சபை களுக்கும் எண்ணிக்கை அடிப்படையில் அமர்த்தப்படவுள்ளனர். இதன்படி மருதங் கேணி, நெடுந்தீவு, காரைநகர் ஆகிய பிரதேச சபைகளைத் தவிர மற்றைய பிரதேச சபை களுக்கு இவர்கள் இணைக்கப்பட்டுள்ளனர்.

அதன்படி நேற்றிலிருந்து எதிர்வரும் 14ஆம் திகதி வரை இவர்களது பயிற்சிகள் இங்கு மேற்கொள்ளப்படவுள்ளன. அதுபோல கடந்த வருடம் 140 பேருக்கு இப் பயிற்சி நெறி இங்கு நடைபெற்றது. அத்துடன் 2011 ஆம் ஆண்டு தெரிவானோர் பலர் கிளி நொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட் டங்களில் பயிற்சியை மேற்கொள்ளவுள்ளனர்.

இவ்வைபவத்தில் யாழ் மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், மேலதிக அரசாங்க அதிபர் ரூபினி வரதலிங்கம், இலங்கை நிர்வாக சேவையின் சிரேஷ்ட ஆலோசகர் சுஜன் நாணயக்கார மற்றும் யாழ் மாவட்ட பிரதேச சபைத் தலைவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ந-6)

**பெண் விற்பனையாளர் தேவை**

யாழ் நகரில் இயங்கும் எமது ஜவுளி நிறு வனத்திற்கு அனுபவமுள்ள பெண் விற் பனையாளர் தேவை.

நேரில் வரவும்.

**சிவகணேசன் ரெக்ஸ் ரைல்ஸ்**
**(மலாயன் கபே அருகில்)**
**41, பெரியகடை,**
**யாழ்ப்பாணம்.** (250)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 29 . 01 . 1926

விண்ணில் 01 . 09 . 2011



அன்பின் பிறப்பிடமே! அமைதியின் திருவுருவே!
பண்பின் இருப்பிடமே! பாசத்தின் ஒளிவிளக்கே!
ஊர் புகழ வாழ்ந்த உத்தமியே - நேசமுடன்
சீர் சிறப்பு செய்தெம்மை வாழவைத்த தெய்வமே!
காலமெல்லாம் எம் இதயத்தில்
ஒளி விளக்காய் திகழ்கின்றீர்
கணமும் மறவாது தினமும் உம்மையெண்ணி
நெஞ்சுருகி நின்று அஞ்சலி செய்கின்றோம்
உம் ஆத்மா சாந்திபெற பயிரிக்கூடல் முருகன்
பாதம் பணிந்து நிற்கின்றோம்

அமரர்
**ஆறுமுகம் சிவபாக்கியம்**
**(காரைநகர்)**

மில் வீதி, இடைப்பிட்டி,
காரைநகர்.

குடும்பத்தினர்.

(சி-797)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## நமக்குத் தெரியவில்லை

ஒரு உயரமான மரம். அந்த மரத்தின் உச்சியிலே ஒரு பறவை கூடு கட்டியிருந்தது. அது என்ன பறவையென்றால் ராஜாளிப்பறவை. அந்தக் கூட்டிலே ஒருநாள் அது தனது முட்டைகளை இட்டது.

ஒரு குரங்கு அந்த மரத்தின் கிளையிலே தாவித்தாவி குதித்துக் கொண்டிருந்தது. அவ்வேளையில் அந்தக் கூட்டிலே இருந்த முட்டை அதன் கண்ணிலே தென்பட்டது... அது பார்த்துவிட்டு சும்மா இருக்குமா? விளையாட்டாக ஒரு முட்டையை எடுத்தது.

குரங்கு கிறுகிறுவென மரத்தை விட்டு இறங்கியது; கீழே ஒரு குப்பை மேட்டிலே ஒரு கோழி சில முட்டைகளை இட்டு வைத்திருந்தது. குரங்கு தனது கையிலே இருந்த ராஜாளிப்பறவை முட்டையை அந்தக் கோழியின் முட்டைகளோடு வைத்து விட்டுச் சென்றது.

கோழி வந்து பார்த்து... அதற்கு எதுவிதமான வித்தியாசமும் தெரியவில்லை... தனது முட்டைகளுடன் சேர்த்து அந்த முட்டையையும் வைத்து அடைகாத்தது.

நாட்கள் செல்ல குஞ்சுகள் வெளிவர ஆரம்பித்தன. எல்லாம் முட்டையிலிருந்து வெளிவந்தது.

ராஜாளிப்பறவையினுடைய குஞ்சு... அந்தக் கோழிக்குஞ்சுகளோடு சேர்ந்து வளர்ந்தது.

ஏனைய கோழிக்குஞ்சுகள் போலவே இதுவும் குப்பையைக் கிளறி... புழு, பூச்சிகளைச் சாப்பிட்டது.

இப்படியாக சிறிது காலம் கடந்தது. குஞ்சுகள் அனைத்தும் வளர்ந்து பெரிதாகியது.

சில குஞ்சுகள் சேவல்களாக மாறியது... சில கோழிகளாக மாற்றமடைந்தது. அந்த ஒன்று மட்டும் ராஜாளியாக இருந்தது.

ஆனால், ஒரு விடயம் தான் ஒரு ராஜாளிப்பறவை என்பது அதற்குத் தெரியாது.

தன்னை ஒரு கோழியென்றே அது நினைத்துக் கொண்டது. அப்படி நினைத்துக்கொண்டு குப்பை மேட்டைக் கிளறிக்கொண்டு இருக்கும்.

ஒருநாள் மாலை நேரம் இந்த ராஜாளிப் பறவை கீழே வழக்கம்போல குப்பையைக் கிளறிக் கொண்டது.

அவ்வேளையிலே அண்ணார்ந்து வானத்தைப் பார்த்தது. வானத்திலே... உயரத்திலே... கூட்டம் கூட்டமாக ராஜாளிப் பறவைகள் உல்லாசமாக சிறகுகளை விரித்தவாறு வட்டமிட்டுப் பறந்து கொண்டிருந்தது. அந்தப் பறவைகளை இந்த சிறிய பறவை பார்க்கிறது...

இதற்கு மனதிலே ஏக்கம் ஏற்பட்டது. அப்போது இதற்கு ஆண்டவன் பேரிலே கோபம் வந்தது.

"ஆண்டவனுக்கு என் மேலே ஏன் இந்த ஓரவஞ்சனை? என்னையும் ஒரு ராஜாளியாகப் படைத்திருந்தால்... நானும் கூட இந்நேரம் ஆகாயத்தில் குதூகலமாக, சுதந்திரமாக பறந்து கொண்டிருப்பேனே" என்று தன்னுள் நினைத்து வருத்தப்பட்டது.

ஒரு வகையிலே பார்த்தால்... நாம் கூட இந்த ராஜாளிப் பறவை மாதிரிதான் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

நமது முழுமையான பலம் என்ன என்பதை நமக்கே தெரிவதில்லை.

ஒரு நபர் இருந்தான். அவனுக்குக் கோழியைக் கண்டால் பயம். ஏனென்றால் அவனது மனதில் தான் ஒரு புழு என்ற நினைப்பு.

புழுவைக் கண்டால் கோழி கொத்துமல்லே?...

அதனால் கோழி எதிரிலே வந்தால் இவன் நடுங்க ஆரம்பித்து விடுவான்.

ஒருநாள் அவன் மனநோய் வைத்தியரிடம் போனான்.

வைத்தியர் இவனை ஒருவார காலம் தங்க வைத்து வைத்தியம் கொடுத்தார்.

அதன்பின் "இனிமேல் நீ வீட்டிற்குப் போகலாம்... நல்லா ஞாபகம் வைத்துக் கொள்... இனிமேல் நீ 'புழு' இல்லை... மனிதன். தைரியமாகப் புறப்படு... போய்வா!" என்று சொல்லி வழியனுப்பி வைத்தார்.

அவன் புறப்பட்டுப் போனான். அரைவாசி தூரம் சென்றிருப்பான் எதிரிலே ஒரு கோழி வந்து கொண்டிருந்தது. அவ்வளவுதான் அவனது பாடு.

உடல் பூராகவும் நடுங்க ஆரம்பித்தது... திரும்பி ஓடி வந்துவிட்டான். வைத்தியர் கேட்டார்; "ஏன் திரும்பி ஓடி வந்து விட்டாய்" என்று.

"எதிரிலே ஒரு கோழி வந்து விட்டது" என்றான்.

"நான் தானே சொன்னேன்... நீ புழு இல்லை... மனிதன்... நீ ஒரு புழு இல்லை என்பது இன்னமும் உனக்குப் புரியவில்லையா?" என்றார் வைத்தியர்.

"நான் புழு இல்லை என்பது எனக்குத் தெரிந்துவிட்டது... ஆனால், கோழிக்குத் தெரியுமா?" என்று தெரியவில்லையே" என்றார்.

தென்கச்சி கோ சுவாமிநாதன்

# வேதனத்தை விரைவில் வழங்காவிட்டால் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவோம்

## இ.போ.ச. ஊழியர்கள் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.அரச போக்குவரத்து ஊழியர்கள் அடுத்தமாதம் 12ஆம் திகதி பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

இப்பணிப்புறக்கணிப்பு தமக்குத் தரவேண்டிய சம்பள நிலுவைகளை உடனடியாக வழங்கக்கோரியே மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பான கலந்துரையாடலொன்று நேற்று யாழ்.மத்திய பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள அரச போக்குவரத்து கட்டடத்தில் நடைபெற்றது.

குறித்த கலந்துரையாடல் 12 மணிக்கு ஆரம்பமாகும் என முதலில் அறிவிக்கப்பட்டபோதும் இரு தொழிற்சங்கத் தலைவர்களின் தாமதத்தினாலும் திட்டமிடலில்லாததன் காரணத்தினாலும் ஒரு மணிக்கே ஆரம்பமாகியது.

இக்கலந்துரையாடலில் வடமாகாண ஜனநாயக போக்குவரத்து ஊழியர் சங்கம், சுதந்திர போக்குவரத்து ஊழியர் சங்கம் ஆகியவற்றின் சங்கத் தலைவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது இரு சங்கங்களின் தலைவர்களும் சாரதிகளும் நடத்துநர்களும் கொடுக்கப்படவேண்டிய சம்பளத்தினைக் கொடுப்பதற்கு மேலும் ஒரு கால அவகாசத்தை நாம் டிப்போ நிர்வாகத்திற்கு வழங்குவோம் என தெரிவித்தனர்.

இதற்குக் கடும் எதிர்ப்பைத் தெரிவித்த ஊழியர்கள் இவ்வருடத்தில் 3ஆம் , 7ஆம் மாதம் ஆகிய இரு மாதங்களுக்குமான சம்பளம் எமக்கு முற்றாக வழங்கப்படாததோடு 5ஆம், 6ஆம் மாதங்களுக்கு உரிய சம்பளம் சில தொழிலாளர்களுக்கு வழங்கப்படவில்லை. இந்நிலையில் மேலும் எவ்வாறு நாம் அவர்களுக்கு காலஅவகாசத்தை வழங்கமுடியும்.

எமது டிப்போவில் 100 வரையான தொழிலாளர்களுக்கும் மொத்தமாக 28 இலட்சம் வரையிலான தொகை சம்பளம் வழங்கப்படாதுள்ளது.

இது தொடர்பாக பலரிடம் பல தடவை நாம் எழுத்து மூலமும் வாய்மூலமும் கூறியுள்ளோம்.

ஆனால் இதுவரையும் எமது தொழிற்சங்கங்க நிர்வாகமோ நடவடிக்கை எடுக்கவில்லை.

ஆகவே இனியும் நாம் கூட்டம் கூடிப்பேசிப்பலனில்லை. உடனடியாக தொழிற்சங்க நடவடிக்கை எடுப்பதுதான் சிறந்த முடிவாக இருக்கும் என தொழிலாளர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு கால அவகாசம் வழங்கும் நோக்குடனும் 3ஆம், 7ஆம், 8ஆம்மாத சம்பளங்கள் அடுத்த மாதம் 8 ஆம் திகதிக்குள் வழங்கப்படாவிட்டால் எதிர்வரும் 12 ஆம் திகதி பணிப் புறக்கணிப்பில் ஈடுபடுவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கலந்துரையாடலில் தாமதம் ஏற்பட்டதால் சாரதிகள் கடமைக்குச் செல்லத் தாமதமாகியது. இதனால் பயணிகள் சிறிது நேரம் தாமதித்தே பயணம் செய்யவேண்டியிருந்தது.

சில தொழிலாளர்கள் இக்கலந்துரையாடலில் கலந்துகொள்ளாமல் மதிய உணவு சாப்பிடுவதில் அக்கறையாக இருந்ததனையும் அவதானிக்கக் கூடியதாக இருந்தது. (அ-4)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 80 | 50 |
| உருளைக்கிழங்கு | 70 | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 60 | 80 | 100 |
| தக்காளி | 80 | 50 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 40 |
| கோவா | 60 | 80 | 70 |
| கரட் | 100 | 100 | 160 |
| பூசணி | 30 | 40 | 50 |
| புடோல் | 40 | 40 | 40 |
| வாழைக்காய் | 60 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 40 | 80 | 70 |
| பெரிய வெங்காயம் | 70 | 90 | 80 |
| பாகற்காய் | 60 | 110 | 60 |
| வெண்டிக்காய் | 40 | 60 | 40 |
| கருணைக் கிழங்கு | 100 | -- | -- |
| பயற்றங்காய் | 70 | 80 | 45 |
| லீக்ஸ் | 100 | 120 | 120 |
| பீற்றூட் | 60 | 60 | 60 |
| கறிமிளகாய் | 70 | 80 | 100 |
| முருங்கைக்காய் | 100 | 120 | 80 |
| போஞ்சி | 80 | -- | 90 |
| கத்தரிதம்புள்ள | 60 | 90 | -- |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 20 |
| தேசிக்காய் | 140 | 90 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 20 | 20 | 20-22 |

# இராசி பலன்

21.08.2012
(ஆவணி 05, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 6.05 மணிக்கு
சதுர்த்தி பிற்பகல் 4.45 மணிவரை
அத்தம் மாலை 6.25 மணிவரை
இராகுகாலம் 3.05-4.35 மணிவரை
சுபநேரம் 10.35-12.05 மணிவரை
சதுர்த்தி விரதம்.

**மேடம்** தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், கடன்களை வசூலிக்க எடுத்த முயற்சி வெற்றி பெறும், நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், உறவினர் வருகையுண்டு.

**இடபம்** பிள்ளைகள் வழியில் சுப செலவுகள் ஏற்படலாம், கல்யாணக் கனவுகள் நனவாகலாம், அரசு வழியில் அனுகூலமுண்டு, பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, கௌரவமான நாள்.

**மிதுனம்** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள்,பொதுக் காரியங்களில் நாட்டம் காட்டுவீர்கள்,தொலைபேசி மூலம் பொன்னான தகவல்கள் வந்து சேரலாம்,வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும்.

**கடகம்** கனிவான பேச்சுக்களால் காரியம் சாதித்துக் கொள்ள வேண்டிய நாள், பாசத்தோடு பழகியவர்களின் எண்ணிக்கை கூடும், பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள்.

**சிங்கம்** மதிப்பும் மரியாதையும் உயரும், விலையுயர்ந்த பொருட்கள் வீடு வந்து சேரலாம், சான்றோர் சந்திப்புண்டு, குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும், பேச்சில் இனிமை பிறக்கும், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**கன்னி** குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும், பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்கு செல்ல வேண்டிய நாள், சுப செய்திகள் வந்து சேரும்.

**துலாம்** புண்ணிய காரியங்களுக்காக சிறிது செலவு செய்து மகிழ்வீர்கள், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், ஒரு சில வேலைகளுக்காக நீண்டநேரம் காத்திருக்க வேண்டி வரலாம், சயன சுகக் குறைவான நாள்.

**விருச்சிகம்** வியக்கும் செய்திகள் வீடு வந்து சேரும், தொலைபேசி வழியில் மகிழச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், விருந்தினர் வருகையுண்டு, வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும், சகோதர வழி நன்மையுண்டு.

**தனுசு** வீட்டை அழகாக வைத்திருப்பதில் அக்கறை காட்டுவீர்கள், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், தொழில் ரீதியாக புதிய முதலீடுகள் செய்யும் எண்ணம் உருவாகும், பிறர் உதவியுண்டு.

**மகரம்** போட்டியாக இருந்தவர்கள் மனம் மாறுவர், மாற்றினத்தவர்கள் மூலம் மகிழ்ச்சியான செய்திகள் வந்து சேரலாம், திடீர் பயணங்களால் பலனுண்டு, மருத்துவச் செலவுகள் குறித்து மனநிம்மதியைக் கொடுக்கும்.

**கும்பம்** துயரங்கள் தீர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், மற்றவர்களிடம் பேசும் போது நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது, குடும்பத்தில் சிறு சிறு மனக்கசப்புகள் இடம் பெறலாம்.

**மீனம்** களஷ்திர நன்மையுண்டு, இனசன வருகையுண்டு, காரியங்கள் எளிதில் கைகூடும், தொழில் மேன்மையுண்டு, விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, கௌரமான நாள்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழக மீனவர்கள் மீதான தாக்குதலுக்கு தமிழக அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்

## பா.ம.க.நிறுவுநர் ராமதாஸ் கோரிக்கை

தமிழக மீனவர்கள் மீதான இலங்கை கடற்படைத் தாக்குதலை தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பவை வருமாறு,

வங்கக் கடலில் கடந்த சனிக்கிழமையன்று மீன்பிடிக்கச் சென்ற நாகை மாவட்டம் வெள்ளப்பள்ளம் பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் மீது நடுக்கடலில் சிங்கள கடற்படையினர் மிகக் கொடூரமான தாக்குதலை நடத்தியுள்ளனர்.

இந்தியக் கடல் எல்லைக்குட்பட்ட பகுதியில் தமிழக மீனவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது அங்கு வந்த இலங்கை கடற்படையினர், கயிறு, கட்டை உள்ளிட்ட பொருட்களைக் கொண்டு தாக்குதல் நடத்தியுள்ளனர். சில மீனவர்கள் கத்தியாலும் குத்தப்பட்டுள்ளனர்.

இத்தாக்குதலில் படுகாயமடைந்த 9 மீனவர்கள் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். மீனவர்களிடமிருந்து மீன்கள், டீசல் போன்றவற்றை கொள்ளையடித்துச் சென்ற இலங்கைப்படையினர், கடலில் விரிக்கப்பட்டிருந்த வலைகளையும் அறுத்து சேதப்படுத்தியுள்ளனர்.

தமிழக மீனவர்கள் மீதான படையினரின் தாக்குதல் 30 ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இதுவரை 600 இற்கும் மேற்பட்ட மீனவர்கள் இலங்கைப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டு இருக்கின்றனர்.

இலங்கை அரசுடன் இந்திய அரசு பெயரளவில் பேச்சு நடத்துவதும், அதைத் தொடர்ந்து மீனவர்கள் தாக்கப்படமாட்டார்கள் என்று இலங்கை அரசு உறுதியளிப்பதும், அடுத்த சில நாட்களில் மீனவர்கள் மீது மீண்டும் தாக்குதல் நடத்தப்படுவதும் வழக்கமான ஒன்றாகிவிட்டது.

இலங்கைப்படையினரின் இந்தத் தாக்குதலை இந்தியா மீது தொடுக்கப்பட்ட போராகவும், இந்திய இறையாண்மை மீது நடத்தப்பட்ட தாக்குதலாகவும் மத்திய அரசு பார்க்க வேண்டும்.



மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தப்படும் போதெல்லாம் அதை தடுத்து நிறுத்த வேண்டும் என்று பிரதமருக்கு கடிதம் எழுதுவதுடன் கடமை முடிந்து விட்டதாக தமிழக முதலமைச்சர் கருதக்கூடாது என்றுள்ளது. (அ-2)

# காட்டுப்பகுதியில் தீ பரவுகிறது

(அனுராதபுரம்)

நக்கிள்ஸ் மலைத்தொடர்,யஹன்கல பிரதேசப்பகுதியில் காட்டுத்தீ ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

காட்டுத்தீ நேற்று முன்தினம் தொடக்கம் பரவி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

பிரதேசத்தில் வீசும் கடுமையான காற்றின் காரணமாக தீ தொடர்ந்தும் பரவுவதாக கசலக்க பொலிசார் தெரிவித்தனர்.

இதுவரையான காலப்பகுதியில் 5 ஏக்கர் வரையான பூமி தீக்கிரையாகியுள்ளது.

எனினும் தீயை அணைப்பதற்கு உரிய அதிகாரிகள் இதுவரையில் நடவடிக்கை எடுக்கவில்லை என கசலக்க பொலிசார் குற்றஞ்சுமத்தியுள்ளனர்.

இதேவேளை அநுராதபுர மாவட்டம், மகவில்லாச்சிய, பலுகஸ்வெவ பிரதேச காட்டில் தீப்பரவல் ஏற்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

தீயை அணைப்பதற்கு முகாமைத்துவ மத்திய நிலையத்தைச் சேர்ந்த பணியாளர்கள் தொடர்ந்தும் செயற்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)

# வெளிநாடுகள் தலையிடாமல் இருக்க தமிழர் உரிமைகளை உறுதிப்படுத்துங்கள்

## அரசைக்கோருகிறார் விஜித ஹேரத்

(கொழும்பு)


தென்னாபிரிக்காவோ, அமெரிக்காவோ, இந்தியாவோ. இலங்கை விவகாரங்களில் தலையிடாமல் இருக்க அரசாங்கம் உடனடியாகத் தமிழ் மக்களின் உரிமைகளை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் விடுதலை முன்னணியின் பிரசார செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்துக்கும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்க உதவ தயாராக இருப்பதாக தெரிவித்துள்ளதாக வெளிவரும் தகவல்கள் குறித்து கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது நாட்டுப் பிரச்சினையில் மற்றொரு நாடு தலையிடக்கூடாது என்ற எமது நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்படவில்லை. அந்த நிலைப்பாட்டில் நாங்கள் உறுதியாக இருக்கின்றோம். ஆனால், வெளிநாடுகள் தலையிடும் அளவுக்கு எமது பிரச்சினையை இழுத்தடிக்கக்கூடாது என்பதையும் வலியுறுத்துகின்றோம்.

குறிப்பாக தென்னாபிரிக்கா, அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகள் எமது தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களில் தலையிடக் கூடிய வகையில் அரசாங்கத்தின் செயற்பாடுகள் அமையக்கூடாது.

எனவே, தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து அவர்களின் உரிமைகளை உறுதிப்படுத்த விரைவாக அரசாங்கம் நடவடிக்கை எடுத்தால் இவ்வாறான வெளியாரின் தலையீடுகளுக்கு அவசியம் ஏற்படாது. (அ-2)



நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக கடந்த 14 வருடங்களாக படையினரால் மக்களின் பாவனைக்கு தடை செய்யப்பட்டிருந்த பருத்தித்துறை இறங்கு துறைமுகம் நேற்று முன்தினம் மீண்டும் தொழில்சார் நடவடிக்கைகளுக்காக திறந்து வைக்கப்பட்டது.

இத்திறப்பு விழா நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா மற்[illegible] தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க ஆகியோர் [illegible] இறங்கு துறையை திறந்து வைப்பதைப் படத்தில் காணலாம்.

# இந்தியாவால் தோற்கடிக்கமுடியாத புலிகளை தோற்கடித்தவர் மகிந்த

## அமைச்சர் மைத்திரிபால புகழாரம்

(அனுராதபுரம்)

ஒரு இலட்சம் இந்தியப்படையினரால் தோற்கடிக்க முடியாத பயங்கரவாதத்தை தோற்கடித்தவர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச. அவர் ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னரே நாடு பல மாற்றங்களைக் கண்டுள்ளது என ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் செயலாளர் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

அனுராதபுரத்தில் நடைபெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முதலாவது தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கட்சிக்குள்ளேயே ஒற்றுமையில்லாத நிலையில் கட்சியை நிர்வகிக்க முடியாத நிலையில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உள்ளார். அவரால் மக்களுக்கு எதுவும் செய்ய முடியாது (அ-2)

# ஐ.ம.சு.கூ. வேட்பாளர்களால் பொலிஸாருக்கு அழுத்தம்

## பவ்ரல் அமைப்பு குற்றச்சாட்டு

(கொழும்பு)

மாகாணசபை தேர்தல்கள் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 8 ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில் ஆளும் கட்சி அரசியல்வாதிகளின் பாரிய அழுத்தத்துக்கு பொலிஸ் அதிகாரிகளும் தேர்தல் அதிகாரிகளும் முகங்கொடுக்க வேண்டியுள்ளது என தேர்தல் அவதானிகள் கூறியுள்ளனர்.

தேர்தல் நடைபெறவுள்ள பகுதிகளில் கடமையிலுள்ள சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் அரசியல் தலையீடின்றி தமது கடமையை செய்ய அனுமதிக்கப்படுவதை உறுதி செய்யுமாறு கோரி அவர்கள் பொலிஸ்மா அதிபர் என். கே. இலங்கக்கோனுக்கு கடிதம் எழுதியுள்ளனர்.

ஐ.ம.சு. கூட்டமைப்பின் பிரசாரத்தில் பயன்பட்ட வாகனம் ஒன்றிலிருந்து தேர்தல் பிரசார ஸ்டிக்கர் ஒன்றை அகற்றிய இரத்தினபுரி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியை ஆளும் கட்சி சிரேஷ்ட அரசியல்வாதியொருவர் பயமுறுத்தியதாக பவ்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் றோஹன ஹெட்டியாராச்சி கூறினார்.

நாம் இந்த சம்பவத்தை பொலிஸ்மா அதிபருக்கு அறிவுறுத்தியுள்ளோம். பொலிஸாரின் செயலின்மை பற்றி முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. ஆயினும் தேர்தல் சட்டங்களை மீறுவோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க தயாராக உள்ள சில பொலிஸ் அதிகாரிகளும் உள்ளனர். இவர்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என ஹெட்டியாராச்சி கூறினார்.

அரச வளங்களின் பயன்பாடு, சட்டத்துக்கு புறம்பான கட் அவுட்டுகள், அனுமதிக்கப்படாத இடங்களில் சுவரொட்டி ஒட்டுதல் என்பன அநேகமாக காணப்படும் தேர்தல் சட்ட மீறல்களாக உள்ளன. (அ-2)

# இடையூறு ஏற்பட்டால் 1911 இற்கு முறையிடலாம்

தேர்தல் பிரசாரங்களால் க.பொ.த. உயர்தர பரீட்சைகளுக்கு இடையூறு ஏற்பட்டால் பரீட்சைகள் திணைக்களத்திடம் உடனடியாக முறைப்பாடு செய்யுமாறு பரீட்சை ஆணையாளர் டபிள்யூ.ஜே.எம். புஷ்பகுமார மக்களை கோரியுள்ளார்.

அனுராதபுரத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஐ.ம.சு. கூட்டமைப்பின் முதலாவது பிரசாரக் கூட்டத்தின் போது பரீட்சார்த்திகளுக்கு இடையூறு ஏற்பட்டமை குறித்து பரீட்சைகள் ஆணையாளர் கூறுகையில், 1911 எனும் அவசர சேவை இலக்கத்திற்கு அல்லது பரீட்சைகள் திணைக்களத்திற்கு முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டால் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள முடியும் எனத் தெரிவித்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்

## கேள்வி அறிவித்தல்

தவிசாளர், பெறுகைக்குழு, மாவட்ட செயலகம் சார்பாக அரசாங்க அதிபர்/ மாவட்ட செயலரால் கீழ்க்குறிப்பிடப்படும் நிர்மாண வேலைகளுக்கான தகைமையுடையோரிடம் இருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக்கேள்விகள் கோரப்படுகின்றன.

1.விலைக் கேள்வியானது தேசியபோட்டி விலைக்கேள்வியின் மூலம் நடத்தப்படும்.

2.தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

3.ஆர்வமுள்ள தகமையுடைய விலைக்கேள்வியாளர்கள் மாவட்ட பொறியியலாளர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் (தொலைபேசி இல. 021 3211657) அவர்களிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெறலாம் என்பதுடன் பொறியியற் பிரிவு, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் 22.08.2012 தொடக்கம் 30.08.2012 ஆம் திகதி வுரை காலை 9 மணியிலிருந்து மாலை 3 மணி வரை விலைக்கேள்வி ஆவணங்களைப் பரிசோதனை செய்வதுடன் ஆர்வமுள்ள விலைக்கேள்வியாளர்களினால் விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை பொறியியலாளர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து மேற்குறிப்பிடப்பட்ட காலப்பகுதியில் மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

4.மூடி சீல் வைக்கப்பட்ட விலைக்கேள்விகள் யாவும் தவிசாளர், பெறுகைக்குழு, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 03.09.2012 திகதியன்று 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ இரு பிரதிகளில் ஒப்படைத்தல் வேண்டும். நேரடியாக ஒப்படைப்பவர்கள் பிரதம கணக்காளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடுதல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலையின் பெயர் மற்றும் கேள்வி இலக்கத்தை தபாலுறையின் இடது மேல்மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். அன்றைய தினம் பி.ப.3 மணிக்கு கேள்விகள் யாவும் மேல் குறிப்பிடப்பட்ட முகவரியில் நேரடியாக வருகை தர விரும்பும் விலைக்கேள்வியாளர்கள் அல்லது பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.

5.கேள்விகளை ஏற்றுக் கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைச் சபையின் இறுதித் தீர்மானத்திற்கு அமைவானதாகும்.

6. கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட விலைக்கூறல் பிணையானது கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதியிலிருந்து 90 நாட்களுக்கு செல்லுபடியாகும் விதத்தில் இருத்தல் வேண்டும்.

7.கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறு கேள்விப் பிணைப் பொறுப்பு இலக்கமிடப்பட்டிருத்தல் வேண்டும். பிணைப் பொறுப்புக் காலம் கேள்வி முடிவுத் திகதியிலிருந்து 90 நாட்கள் இருத்தல் வேண்டும்.

| கேள்வி இல | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) | ஒப்பந்த காலம் (மாதம்) | தேவையான தரம் | கேள்வி பிணைத் தொகை (ரூ) | மீளளிக்கப்படாத தொகை (ரூ) |
|---|---|---|---|---|---|---|
| JK /ADM 05/24(I) | யாழ்.பிரதேச செயலக நிர்மாண வேலை கட்டடம்–II | 10.0 | 04 மாதம் | C 6 | 100,000.00 | 1,000.00 |
| JK/ ADM 05/24(II) | சண்டிலிப்பாய் பிரதேச செயலக நிர்மாண வேலை கட்டம்–VI | 10.0 | 04 மாதம் | C 6 | 100,000.00 | 1,000.00 |
| JK/ ADM 05/24(III) | 04 மாடி கட்டட நிர்மாண வேலை யாழ்.மாவட்ட செயலகம் கட்டடம்–II | 5.0 | 03 மாதம் | C 7 | 50,000.00 | 500.00 |

சுந்தரம் அருமைநாயகம்
அரச அதிபர்,
மாவட்டச் செயலாளர்,
யாழ்ப்பாண மாவட்டம்.

(சி–798)

# காணாமற்போனோர் தொடர்பில் சர்வதேச மாநாடு?

## மனோ கணேசன் அறிவிப்பு

காணாமற்போன மற்றும் அரசியல் கைதிகள் தொடர்பில் சர்வதேச மாநாடு ஒன்றை நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாக ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 30 ஆம் திகதி சர்வதேச காணாமற்போனோர் தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது. இந்தத் தினத்தை ஐக்கிய நாடுகள் சபையும் ஏற்றுக் கொண்டுள்ளது.

வடக்கை மையமாகக் கொண்டு காணாமற் போனோர் மற்றும் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் தொடர்பான தினமொன்றை அனுஷ்டிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

சிவில் கண்காணிப்புக் குழுவும் ஏனைய சிவில் அமைப்புக்களும் இணைந்து இந்த தினத்தை அனுஷ்டிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடத்தப்பட்டோர் மற்றும் காணாமற்போனோர் தொடர்பில் நாட்டில் பல தடவைகள் குரல் எழுப்பிய போதிலும் இதுவரையில் உரிய பதில் எதுவும் கிடைக்கவில்லை.

கடத்தப்பட்டோரின் உறவினர்கள், காணாமற்போனோரின் உறவினர்கள் மற்றும் அரசியல் கைதிகளின் உறவினர்கள் உள்ளிட்ட பலரும் இந்த நிகழ்வில் பங்கேற்பார்கள் எனவும் மனோ கணேசன் தெரிவித்துள்ளார். (அ–2)


# பதவி வெற்றிடம்

- கணக்காளர் (இருபாலாரும்)
- அலுவலக செய்தியாளர் மற்றும் பயிலுநர்கள் (இருபாலாரும்)
- கணனி தமிழ் தட்டச்சு தெரிந்தவர்கள் மற்றும் பயிலுநர்கள் (பெண்கள்)
- ஒப் செட் இயந்திரம் இயக்குநர்கள் மற்றும் பயிலுநர்கள் (ஆண்கள்)
- பாதுகாப்பு உத்தியோகத்தர் (ஆண்கள்)
- களஞ்சிய காப்பாளர் (ஆண்கள்)

பொருத்தமான தகுதியுடையவர்கள் தாம் தெரிவு செய்யும் பதவியைக் குறிப்பிட்டு சுய விபரம் அடங்கிய விண்ணப்பப்படிவத்தில் தொலைபேசி இலக்கத்தை தெளிவாக குறிப்பிட்டு 25.08.2012 இற்கு முன்னதாக அனுப்பி வைக்கவும்.

குறிப்பு:- யாழ்ப்பாண நகரத்தில் இருந்து 7Km தூரத்தில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

மனிதவள முகாமையாளர்,
வலம்புரி,
இல.03, 2ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

## மணமகள் தேவை — கல்யாண மாலை — மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:- 1982 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-திருவோணம் 3<br>உயரம்:-5'4"<br>கி.பா:-9.45<br>தொழில்:-அரச ஒப்பந்தகாரர்<br>B/301 | பிறப்பு:- 1984 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- திருவாதிரை 2<br>உயரம்: 5'<br>கி.பா:-47<br>தொழில்:-MBBSடாக்டர்<br>G/165 |
| பிறப்பு:- 1976 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-மூலம் 3<br>உயரம்:-5'6"<br>கி.பா:-32, 8 இல் செவ்<br>தொழில்:-அரச அங்கீகார ஒப்பந்தக்காரர்.<br>B/318 | பிறப்பு:- 1982 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- சுவாதி 4<br>உயரம்: 5'4"<br>கி.பா:-19.5, 7 இல் செவ்<br>தொழில்:-பட்டதாரி NGO நிர்வாக உத்தியோகத்தர்<br>G/333 |
| பிறப்பு:- 1982 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-பூரம் 2<br>உயரம்:-5'5"<br>கி.பா:-34, 7 இல் செவ்<br>தொழில்:-கணக்காளர் டுபாய்<br>B/320 | பிறப்பு:- 1973 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- அச்சுவினி 3<br>உயரம்: 5'2"<br>கி.பா:- 51, 1 இல் செவ்<br>தொழில்:- பட்டதாரி நடன ஆசிரியை<br>G/325 |
| பிறப்பு:- 1978 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-மூலம் 1<br>உயரம்:-5'11"<br>கி.பா:-45.75, 12 இல் செவ்<br>தொழில்:-தனியார் நிறுவன முகாமையாளர்<br>B/321 | பிறப்பு:- 1979 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- பரணி 3<br>உயரம்: 5'3"<br>கி.பா:-26, 12 இல் செவ்<br>தொழில்:-MBBS பல் டாக்டர்<br>G/173 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல.144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E.mail:-kalyanamalai.jaffna@gmail.com

ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழக மீனவர் தாக்குதலை தடுக்க மண்டபத்தில் கடற்படை முகாம் தேவை

## மத்திய அரசை வலியுறுத்துகிறார் கருணாநிதி

தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படை தாக்குவதை தடுக்க தனுஷ்கோடி அல்லது மண்டபம் முகாமில் இந்திய கடற்படை தளம் ஒன்றை இந்திய அரசு நிறுவவேண்டும் என தி.மு.க. தலைவர் மு.கருணாநிதி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது, கோடியக்கரை அருகே கடந்த 18 அம் திகதி இரவு மின்பிடித்துக்கொண்டிருந்த வேதாரண்யம் பகுதிமீனவர்களை இலங்கை கடற்படையினர் கடுமையாக தாக்கியிருக்கின்றனர். மீனவர்கள் வைத்திருந்த மீன்கள், டீசல் உள்ளிட்ட பொருட்களை கைப்பற்றி சென்றுள்ளனர்.

தமிழக மீனவர்கள் மீது தாக்குதல் நடைபெற்ற இந்த நிகழ்ச்சிக்கு என்னுடைய கடும் கண்டனத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

அண்மையில் நடைபெற்ற டெசோ மாநாட்டின் தீர்மானத்தின்படி இலங்கை கடற்படையினால் இந்திய மீனவர்கள் மீது தொடுக்கப்படும் கொடுமைகளிலிருந்து அவர்களை பாதுகாப்பது நமது இன்றியமையாத கடமையாகிறது.

இந்த கொடுமைக்கு ஒரு முடிவு கட்ட கச்சதீவை இந்தியா மீண்டும் தனது ஆளுகையின்கீழ் கொண்டு வருவதோடு தனுஷ்கோடி அல்லது மண்டபம் முகாமில் இந்திய கடற்படை தளம் ஒன்றை இந்திய அரசு நிறுவ வேண்டும் என்று இம்மாநாடு வலியுறுத்தி கேட்டுக்கொண்டது என்று சொல்லியிருக்கிறோம்.

இனியொருமுறை இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் தாக்கப்படாமல் இருப்பதற்கு உறுதியானதொரு நிரந்தர வழி வகையைக் காண வேண்டுமென்று மத்திய அரசை தி.மு.க. கழகத்தின் சார்பில் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நிலையில் தமிழக முதல்வர் ஜெயலலிதா இந்திய பிரதமருக்கு இவ்விவகாரத்தை குறிப்பிட்டு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். (அ-2)

# 160 குளங்களை ஆழமாக்கி ஒரு இலட்சம் ஏக்கரில் நெல் உற்பத்தி

## அரசாங்கம் உத்தேசம்

வவுனியா, புத்தளம், அநுராதபுரம் மற்றும் பொலநறுவை மாவட்டங்களில் 160 குளங்கள் ஆழமாக்கும் நடவடிக்கைகள் ஆரம்பமாக்கப் பட்டுள்ளன. இதன் மூலம் ஒரு இலட்சம் ஏக்கர் நெல் உற்பத்தியை புதிதாக மேற்கொள்ள அரசாங்கம் உத்தேசித்துள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் வழிகாட்டலின் கீழ் மேற்படி நான்கு மாவட்டங்களிலும் 160 குளங்கள் சேறு அகற்றப்பட்டு புனரமைப்பு செய்யப்படுவதுடன் மேலும் ஆயிரம் நடுத்தர மற்றும் சிறு அளவிலான குளங்கள் சேறு அகற்றப்பட்டு சுத்தப்படுத்தப்படும் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஜனாதிபதியின் பணிப்புரைக்கு அமைய பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் தலைமையில் குளங்களில் சேறு அகற்றி ஆழப்படுத்தும் நடவடிக்கைகள் கடந்த 3 ஆம் திகதி ஆரம்பமாகின.

அநுராதபுரம் மாவட்டத்தில் ஒரு இலட்சத்து பத்தாயிரம் ஹெக்ரேயர் வயல் காணிகள் பாரிய நீர்ப்பாசன திட்டங்கள் மூலம் நெல் உற்பத்தி செய்யப்படுவதுடன் சிறு குளங்களின் பங்களிப்புடன் மேலும் ஒரு இலட்சத்து 20 ஆயிரம் ஹெக்ரேயர் வயல் காணிகள் நெல் உற்பத்திக்கு தயார்ப்படுத்தப்பட்டுள்ளன.

குளங்கள் புனரமைப்பு திட்டங்கள் மூலம் மேற்படி சகல மாவட்டங்களிலுமுள்ள விவசாயிகள் இரண்டு போகம் நெல் உற்பத்தியை மேற்கொள்ள நீர்ப்பாசன வசதிகள் செய்து கொடுக்கப்படும் என கமநலசேவைகள் அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்தார். (அ-2)



காரைநகரில் புதிதாக அமைக்கப்பட்ட மாவுதனைக்குளம் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் நேற்று முன்தினம் திறந்து ௵வக்கப்பட்டதை படத்தில் காணலாம்.

# கஞ்சா பொதியுடன் மூவர் கைதாகினர்

(வீரவில)

வாதுவ தல்பிட்டிய பகுதியில் கஞ்சா பொதியுடன் சைக்கிளில் சென்ற சந்தேக நபர் ஒருவரை வாதுவ பொலிஸார் கைது செய்துள்ளனர். சந்தேக நபரிடமிருந்து 2 கிலோ 470 கிராம் நிறையுடைய கஞ்சா பொதி பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைதானவர் வீரவில பகுதியை சேர்ந்த இராணுவத்தில் கடமையாற்றியவர் எனவும் குறித்த நபரை பாணந்துறை மஜிஸ்திரேட் நீதிமன்றில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். மேலும் ஹெரோயின் வைத்திருந்த இருவர் கல்கிஸை பிரதேசத்தில் வைத்து இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினமிரவு மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் ருவன் வணிகசூரிய தெரிவித்தார். கைதுசெய்யப்பட்டவர்களிடமிருந்து 39 கிராம் ஹெரோயின் மீட்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளுக்காக சந்தேக நபர்கள் கல்கிஸை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (அ-2)

# பட்டாசு வெடித்ததில் 3 1/2 இலட்சம் இழப்பு

(கல்பிட்டி)

கல்பிட்டி கோட்டக்கல்விப் பிரிவிற்குட்பட்ட நுரைச்சோலை முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் வகுப்பறை கட்டடமொன்று கடந்த சனிக்கிழமை இரவு தீயினால் எரிந்து சேதமடைந்துள்ளது.

நோன்புப் பெருநாளை வரவேற்று பட்டாசு கொளுத்தி கொண்டிருந்த சமயம் அப்பட்டாசுகளில் ஒன்று ஓலையினால் வேயப்படிருந்த குறித்த வகுப்பறை கட்டடத்தில் விழுந்ததினால் அவ்வகுப்பறை தீயினால் எரிந்து சேதமடைந்ததாக பிரதேச வாசிகள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக கருத்து தெரிவித்த கல்பிட்டி பிரதேச சபை தலைவர் தீயினால் எரிந்த வகுப்பறை கட்டடம் மற்றும் அங்கிருந்த தளபாடங்களுக்கு ஏற்பட்ட நட்டம் சுமார் 3.5 இலட்சம் ரூபாவாகும். குறித்த கட்டடம் தரம் 4 வகுப்புக்குரியது என்று தெரிவித்தார். (அ-2)

# மண்டேலா கொலைமுயற்சி; 5 பேர் போர்க்குற்றவாளிகள்

## அந்நாட்டு நீதிமன்றம் அறிவிப்பு

தென்னாபிரிக்க முன்னாள் ஜனாதிபதி மண்டேலாவை கொல்ல முயன்ற வழக்கில் 5 பேர் குற்றவாளிகள் என நீதிமன்றம் தெரிவித்துள்ளது. தென்னாபிரிக்க முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலா. இவரை கடந்த 2002 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் சொவீட்டோ நகருக்கு வந்த போது குண்டு வீசி தாக்குதல் நடத்தி கொல்ல திட்டமிட்டனர்.

இது தொடர்பாக போயர் போர்ஸ் படை என்ற அமைப்பை சேர்ந்த 20 பேர் மீது குற்றம் சாட்டப்பட்டது. இதில் போயர்மாக் அமைப்பின் தலைவர் மைக் டியூ டாயட் என்பவர் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டார். இக்கொலை முயற்சி தொடர்பான ஜோஹன்ஸ்பர்க்கின் வடக்கு கௌன்டாங்க உயர்நீதி மன்றில் நடந்து வருகிறது.

இது தொடர்பாக நேற்று முன்தினம் நடந்த விசாரணையில் மேலும் 5 பேர் மண்டேலாவை கொல்ல அப்பகுதியில் மின்சாரத்தை துண்டிக்க செய்து சதித்திட்டம் தீட்டியதும் விசாரணையில் தெரிய வந்ததால் அவர்கள் குற்றவாளிகள் என அறிவித்து நீதிபதி இபென் ஜோர்டான் தீர்ப்பளித்தார். இதன் மூலம் மொத்தம்19 பேர் குற்றவாளிகள் என அறிவிக்கப்பட்டுள்ளனர். தண்டனை பின்னர் அறிவிக்கப்படவுள்ளது. (அ-2)

# பிராந்திய வலய நாடுகள் இணைந்து காபன் வெளியீட்டை தடுக்க வேண்டும்

## வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் அழைப்பு

சூழல்மாசடைதல் தொடர்பில் அபிவிருத்தி அடைந்த நாடுகள் மீது குற்றம் சுமத்துவது பொருத்தமற்றது என வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் குற்றம் சுமத்தியுள்ளார். எகோ ரிவலியூஷன் 2012 என்னும் சர்வதேச மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அபிவிருத்தி அடைந்த நாடுகளே அதிகளவில் சுற்றாடல் மாசடைவதற்கு பங்களிக்கின்றன. அபிவிருத்தி அடைந்த நாடுகளே அதிகளவில் காபனை வெளியிட்டு வருகின்றன. காலநிலை மாற்ற பிரச்சினைக்கு இலங்கையினால் மட்டும் தீர்வு வழங்கப்பட முடியாது. பிராந்திய வலயத்தின் அனைத்து நாடுகளும் கூட்டாக இணைந்து காபன் வெளியீட்டை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர் வேண்டுகோள் விடுத்தார். (அ-2)

# குடியிருப்புக்களை சேதப்படுத்தும் யானைகளை கட்டுப்படுத்த நடவடிக்கை

## வனஜீவராசிகள் திணைக்களம் தெரிவிப்பு

மனிதர்களுக்கும் யானைகளுக்குமிடையிலான மோதலை தடுக்க வனஜீவராசிகள் திணைக்களம் தொடர்ந்தும் முயற்சிகளை முன்னெடுத்துள்ளதாக திணைக்களத்தின் செயற்பாட்டு பணிப்பாளர் எச்.டி.ரத்நாயக்க தெரிவித்தார்.

மனிதர்களுக்கும் யானைகளுக்குமிடையிலான யுத்தம் வடமத்திய வலயத்திலேயே அதிகமாக காணப்படுவதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இவ்வருடத்தின் முதல் ஆறுமாதங்களில் மாத்திரம் 117 யானைகள் உயிரிழந்திருப்பதாக வனஜீவராசிகள் திணைக்களம் கூறுகின்றது. இதே காலப்பகுதிக்குள் 30 பொதுமக்கள் யானைகளால் தாக்கப்பட்டு உயிரிழந்துள்ளனர்.

யானைகளுக்கும் மனிதர்களுக்குமிடையிலான மோதல்களை தவிர்ப்பதற்கென வனஜீவராசிகள் திணைக்களம் எல்லை கிராமங்கள் மற்றும் வயல்களை அண்டிய பகுதிகளிலுள்ள மக்களுக்கு வெடிகள் வழங்கியிருப்பதுடன் யானைகள் கிராமங்களுக்குள் நுழைவதை தடுக்க மின்சார வேலிகள் அமைக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் கிராமங்களுக்குள் புகுந்து அட்டகாசம் செய்யும் யானைகளை பாதுகாப்பாக பிடித்து அவற்றுக்கென தனியான சரணாலயங்களை அமைத்து பராமரிப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆவணி மாத இராசி பலன்

## 17.08.2012 - 16.09.2012



## தனுசு

**மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்**

**வருமானம் திருப்தி தரும் நேரம்!**

**நட்புக்கு முக்கியத்துவம் கொடுத்து அற்புதமான வாழ்க்கையை அமைத்துக் கொள்ளும் தனசு இராசி நேயர்களே!**

## வாசமலராக உங்கள் வாழ்க்கை மலரும் அச்சமில்லாத எதிர்காலம் அமையும்

எப்பொழுதும் சுறுசுறுப்பாக இருப்பவர்கள் நீங்கள். ஏற்றங்களும், மாற்றங்களும் உங்களுக்கு வந்து கொண்டே இருக்கும். கூட்டு முயற்சியை அதிகம் விரும்புபவர்கள் நீங்கள். குடியிருக்கும் வீட்டிலோ அல்லது சொந்தவீட்டிலோ கொஞ்சமோனும் பிரச்சினைகளைச் சந்திப்பவர்களும் நீங்கள்தான். இருந்தாலும், குருவின் ஆதிக்கம் உள்ள வீடாக உங்கள் இராசி அமைவதால் மலைபோல் வந்த துயர் பனிபோல் விலகும்.

உங்களுக்கு இந்த ஆவணி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்திலேயே அஷ்டமாதிபதி அஷ்டமத்தில் சஞ்சரித்தாலும், 9 க்கு அதிபதி சூரியன் பலம் பெறுவதால், ஒளிமயமான எதிர் காலத்திற்கு உறுதுணை புரியும் விதத்தில் இருக்கிறது. புதிய பொறுப்புக்களும், பதவிகளும் வந்துசேரும் செவ்வாய் பலத்தாலும், அதன் பார்வையாலும் சொல்லும் சொற்கள் வெல்லும் சொற்களாக மாறும்.

தேசப்பற்றோடு, தெய்வப்பற்றும் உங்களுக்கு சேரும்பொழுது, வாசமலராக உங்கள் வாழ்க்கை மலருகிறது. ஆசைப்பட்டவற்றை அடையும் வாய்ப்பும், அருகில் இருப்பவர்களின் அனுசரிப்பும் இனிக்கிடைக்கும். மாதக் கடைசியில் சனிப்பெயர்ச்சியாகி, உச்சம் பெறும் சனிபகவான் உங்களுக்கு அச்சமில்லாத வாழ்க்கையை அமைத்துக்கொடுக்கப் போகிறார்.

எதிரிகள் உதிரிகளாகவும், எடுத்த காரியத்தில் எளிதில் வெற்றி கிடைக்கவும், இராகு- கேதுக்குரிய வழிபாடும், அங்காரக பரிகாரம் யோக பலம் பெற்ற நாளில் செய்வது நல்லது. குருவின் பார்வை தன ஸ்தானத்தில் பதிவதால், பணத்தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும்.

**பொன்னான புதனின் பெயர்ச்சி!**

ஆகஸ்ட் 24 ஆம்திகதி சிம்ம இராசியில் புதன் சஞ்சரிக்கப்போகிறார். அதன் பிறகு செப்ரம்பர் 10 ஆம் திகதி கன்னி இராசியில் உச்சம் பெற்போகிறார். இந்த இரு நிகழ்வுகளும் உங்களுக்கு மேலும் நற்பலன்களை வழங்கும். தொழில் ஸ்தானத்தில் புதன் உச்சம் பெறுவதால், தொழில் வளர்ச்சி கூடும். தொகை எதிர்பார்த்த இடத்தில் இருந்து வந்து சேரும். இதுவரை விவாதம் செய்தவர்கள் இனி நேசக் கரம் நீட்டுவர். வெளிவட்டாரப் பழக்க வழக்கம் விரிவடையும். செல்வாக்கு மிக்கவர்களின் பட்டியலில் முதல் இடம்பிடிக்கப்போகிறீர்கள்.

**கடக சுக்கிரனின் சஞ்சாரம்**

ஆகஸ்ட் 31 ஆம் திகதி கடக இராசியில் சுக்கிரன் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக, ஆடம்பரப் பொருட்கள் முதல் அத்தியாவசியப் பொருட்கள் வரை வாங்கிச் சேர்ப்பீர்கள். நூதன கருவிகள், புதிய வாகனங்கள் வாங்கும் சூழ்நிலை அமையும். மாற்றினத்தவர்களின் ஒத்துழைப்போடு மகத்தான வெற்றிகளைக் காண்பீர்கள். பிள்ளைகளால் வந்த பிரச்சினை அகலும்.

**உச்ச சனியின் சஞ்சாரம்**

செப்ரம்பர் 12 ஆம் திகதி துலாம் இராசியில் சனி உச்சம் பெறுகிறார். 2,3 க்கு அதிபதியான சனிபகவான் 11 இல் உச்சம் பெறுவது யோகம்தான், தானாதிபதி இலாபஸ்தானத்தில் உச்சம்பெறும் இந்தநேரத்தில் தன இலாப விருத்தி ஏற்படும். தைரியமும், தன்னம்பிக்கையும் கூடும். சமுதாயத்தில் உயர்ந்த அந்தஸ்த்தில் உள்ளவர்கள் உங்களோடு பழக்கம் வைத்துக்கொள்ளப்பிரியப்படுவர். விழாக்களிலும், விருந்துகளிலும் கலந்து கொண்டு மகிழச்சி அடைவீர்கள். வழக்குகளில் வெற்றி கிட்டும்.

இம்மாதம் சனிக்கிழமை தோறும் சனீஸ்வர வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். வைரவர் வழிபாடும் இராகு கேது பரிகாரமும் உங்கள் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும்.

இம்மாதம் உங்களுக்கு எடுத்த காரியங்களில் வெற்றிகிடைக்கும் மாதமாக அமைகிறது. திடீர் திருப்பங்கள் தித்திக்க வைக்கும். உறவினர் பகை மாறும். உதாசீனப்படுத்தியவர்கள் உங்களைத் தேடி வந்து உதவி கேட்பர். இடமாற்றம் செய்ய நினைப்பவர்கள் யோசித்துச் செய்வது நல்லது. பிள்ளைகளில் வழியில் பெருந் தொகை ஒன்று செலவாகலாம். சொத்துக்கள் வாங்கப்போட்ட திட்டம் நிறைவேறும். குருவழிபாடு குதூகலம் வழங்கும்.

## ஜோதிடக் கலைமாமணி சிவல்புரி சிங்காரம்



## மகரம்

**உத்தராடம் 2, 3, 4, ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதம்**

**தொழில் வளர்ச்சி மேலோங்கும் நேரம்!**

**நேரம் காலம் அறிந்து செய்தால் நினைத்ததை சாதிக்கலாம் என்று அறிந்து சொல்லும் மகர இராசி நேயர்களே!**

## பொருளாதார நிலை உயரும் புதிய வாய்ப்புகள் வந்து சேரும்

பாடுபட்டால்தான் பலனடைய முடியும் என்று சொல்பவர்கள் நீங்கள். பக்கபலமான இருப்பவர்களில் மாற்றினத்தவர்களே உங்களுக்கு அதிகம் இருப்பர். குடும்ச் சுமை உங்களுக்குக் கூடுதலாகவே இருக்கும். கூடப்பிறந்தவர்கள் எல்லாம் உங்களுக்கு உதவிக்கரம் நீட்டுகிறார்களோ, இல்லையோ அவர்களுக்கு நீங்கள் உதவிக்கரம் நீட்ட முன்வருவீர்கள். நிதானத்தைக் கடைப்பிடிப்பதன் மூலம் நிம்மதியை வரவழைத்துக் கொள்ளலாம் என்ற தத்துவத்தை எல்லோருக்கும் எடுத்துரைப்பீர்கள்.

உங்களுக்கு இந்த ஆவணி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பாரக்கும்பொழுது, இராசிநாதன் சனி குருவால் பார்க்கப்படுவதால் பொருளாதார நிலை உயரும். புதிய வாய்ப்புக்கள் வந்துசேரும். அருளாளர்களின் ஒத்துழைப்பும், அருகில் இருப்பவர்களின் ஒத்துழைப்பும் கிடைத்து மகிழ்ச்சி காண்பீர்கள். அஷ்டமத்தில் சூரியன் சஞ்சரிப்பதால் ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவது நல்லது. அடிக்கடி சிறுசிறு தொல்லைகள் ஏற்பட்டு அகலும்.

மாதத்தொடக்கத்தில் ஆறுக்கு அதிபதி புதன் உங்கள் இராசியைப் பார்க்கிறார். பதினொன்றாம் இடத்திற்கு அதிபதி செவ்வாயும் உங்கள் இராசியைப் பார்க்கிறார். எனவே, வாங்கல்- கொடுக்சல்களை ஒழுங்கு செய்து கொள்வீர்கள். சொத்து விற்பனையால் கிடைத்த தனலாபத்தைக்கொண்டு வேறொரு சொத்து வாங்கும் சூழ்நிலை உருவாகலாம்.

அரசு வழி எதிர்ப்புக்களையும் அந்நிய இனத்தாரின் எதிர்ப்புக்களையும் சமாளிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஒரு சிலருக்கு ஏற்படும். வீடுமாற்றங்கள் விரும்பத்தக்கதாக இருக்கும். மாதக்கடைசியில் சனி செவ்வாயோடு இணையப்போவதால் சனீஸ்வர வழிபாட்டை மேற்கொள்வதோடு, காகத்திற்கு தினமும் எள் கலந்த சாதத்தை வைப்பதும் நல்லது.

**பொன்னான புதனின் பெயர்ச்சி!**

உங்கள் இராசிக்கு 6,9 க்கு அதிபதியான புதன் ஆகஸ்ட் 24 ஆம் திகதி எட்டாமிடத்தில் சஞ்சரிக்கப் போகிறார். எனவே, விபரீத ராஜயோக அடிப்படையில் சில நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வரலாம். சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவிற்கு வரும். கடன் சுமை குறையும். வாங்கல்- கொடுக்கல்களை ஒழுங்கு செய்து கொள்வீர்கள். புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு மகிழும் வாய்ப்பு கிட்டும். செப்ரம்பர் 10 ஆம் திகதி கன்னி இராசியில் புதன் உச்சம் பெறப் போகிறார். இதன் விளைவாக குடும்பத்திற்கு தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். மாமன் வழி ஒத்துழைப்பு கிட்டும். பாங்காளி பகைமாறும்.

**கடக சுக்கிரனின் சஞ்சாரம்!**

ஆகஸ்ட் 31 ஆம் திகதி சப்தம ஸ்தானத்தில் சுக்கிரன் சஞ்சரிக் கப் போகிறார். இந்த பெயர்ச்சி குடும்ப வாழ்க்கையை குதூகலமாக அமைத்துக் கொடுக்கும். கல்யாணக் கனவுகள் நனவாகும். குழந்தைகளின் கல்வி நலன் கருதி எடுத்த முயற்சிகளில் ஒரு தொகையைச் செலவிடும் சூழ்நிலை உருவாகும். தொழில் வளர்ச்சி கூடும். பெண் வழி ஆதரவு பெருகும்.

**சந்தோஷம் தரும் சனிப்பெயர்ச்சி!**

சனி பகவான் துலாம் இராசியில் உச்சம் பெற்று செப்ரம்பர் 12 ஆம் திகதி சஞ்சரிக்கப்போகிறார். இராசிநாதன் உச்சம் பெறுவது யோகம் தான். ஆசைப்பட்டவைகளை அடையும் வாய்ப்புடன், அடுத்தவர் நலன் கருதி எடுத்த முயற்சிகளில் ஆதாயமும் கிடைக்கும். சனிக்கவசம் பாடி சனீஸ்வரர் வழிபாட்டை மேற்கொண்டால் மேலும் நற்பலன்களை அடையலாம்.

(தொடரும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை

## 2012 (ஆகஸ்ட்) மாதிரி வினாத்தாள் - 01


திருமதி. T.D. அல்பிறட் Bed, ஆரம்பக்கல்வி
யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்

1) ஒவ்வொரு வினாவுக்கும் உரிய சரியான விடையைத் தரப்பட்டுள்ள மூன்று விடைகளிடையே தெரிந்தெடுத்து. அதன் கீழ்க் கோடிடுக.
முதல் உருவிற்குச் சமமான உருவைத் தெரிவு செய்க




1) 2) 3)

2)



1) 2) 3)

3) தரப்பட்டுள்ள இரு உருக்களையும் ஒன்றின் மீது ஒன்று வைக்கும்போது கிடைக்கும் உருவைத் தெரிவு செய்க.




1) 2) 3)

4) பின்வரும் ஆங்கில எழுத்துக்கள் ஏதோ ஒரு விதத்தில் ஒற்றுமையுடையன. வேறுபட்ட எழுத்து யாது?

1) V 2) A 3) X

5) வெற்றுக் கூட்டில் வரவேண்டிய எண் யாது?




1) 24 2) 23 3) 28


கீழே காணப்படும் ஒவ்வோர் வினாவிலும் தரப்பட்டுள்ள ஐந்து சொற்களில் நான்கு சொற்கள் ஏதோ ஒரு விதத்தில் தொடர்புபட்டுள்ளன. அத்தகைய சொற்களில் தொடர்பற்ற சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.

6) 1)துககம் 2)மகிழ்ச்சி 3)கோபம் 4)பயம் 5)அழுதல்

7) 1)நீளம் 2)உயரம் 3)கிளை 4)தடித்த 5)கட்டையான

8) 1)கண் 2)நகம் 3)நாக்கு 4)காது 5)தோல்

9) ஒவ்வொன்றும் 1சதுர சென்ரிமீற்றர் பரப்பளவுள்ள 16 சதுரங்களைப் பின்வரும் உரு கொண்டுள்ளது.




இதில் நிழற்றப்பட்டுள்ள பகுதியின் பரப்பளவு எத்தனை சதுர சென்ரி மீற்றர்?

1) 8 2) 9 3) 12


10) இதில் நிழற்றப்பட்டுள்ள பகுதியின் பரப்பளவு மொத்தப் பரப்பளவில் என்ன பின்னம்?
1) 9/16 2) 7/16 3) 8/16

11)




இவ்வுருவில் காணப்படும் முக்கோணிகளின் எண்ணிக்கை
1) 6 2) 8 3) 2

12)





இவ் எண்கள் கொண்ட அட்டையினால் உருவாக்கக் கூடிய திண்மம் எது?




1) 2) 3)

13)




இந்த முக்கோண வடிவக் காணியின் மூன்று பக்கமும் சமமானவை இந்தக் காணியைச் சுற்றி எட்டு மீற்றருக்கு ஒருதூண் வீதம் தூண்கள் நடப்பட்டது எனின தேவையான தூண்களின் எண்ணிக்கை யாது?

1) 30 2) 27 3) 10

14) மண்சரிவின் போது தெருவில் விழுந்த பாறாங்கல்லை ஒருவர் தனியாக உருட்டி விட முயற்சி செய்தார் ஆனால் முடியவில்லை அவ்வழியால் வந்த சிலர் ஒன்றாகச் சேர்ந்து பாறாங்கல்லை மிக இலகுவாக புரட்டிவிட்டனர் இதனை விளக்கும் பழமொழி


1) ஆழம் அறியாமல் காலைவிடாதே

2) அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு

3) சிறு துளி பெரு வெள்ளம்.

15) கடையொன்றில் தோடம்பழங்கள் அடுக்கப்பட்டிருக்கும் கோலங்களைக் கொண்ட உருக்கள் தரப்பட்டுள்ளன

A B C D




மேலே தரப்பட்டுள்ள கோலங்களை விளக்கி வெற்றுப் பெட்டியினுள் அடுகி வைக்கப்பட்டிருக்கும் தோடம்பழங்களின் எண்ணிக்கை யாதாக இருக்கக் கூடும்.

1) 21 2) 23 3) 25

16) தெனனை குரும்பை போல பனை
1) பழம் 2)சுளை 3)நுங்கு

17) யானை பிளிரும் என்பது போல மயில்
1)ரீங்காரமிடும் 2)அகவும் 3)உறுமும்

18) கருத்து பிழையுள்ள வாக்கியங்கள் கொண்ட விடையின் கீழ்க் கோடிக.


1)இலங்கையிலுள்ள நதிகளில் மிக நீளமானது மகாவலிகங்கை
2)புராதன இலங்கையின் தலைநகரங்களில் பொலநறுவையும் ஒன்று
3)மண்ணெண்ணெய், டீசல், பெற்றோல் போன்றன இலங்கையில் பெறப்படும்

19) 1)வாழை ஒரு மரமாகும். இது இலங்கையில் பயிரிடப்படுகிறது
2)மனிதனுக்கு கேளாத சிறு சத்தங்கள் கூட நாய் கேட்கும் ஆற்றல் உள்ளது.
3)வௌவால் ஒரு முலையூட்டி இவை இரவு வேளையில் உணவு தேடி அலையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வரலாறு

16



குடும்பி மலையில் அமைந்துள்ள விகாரை

## சேனன், குத்திகன், எல்லாளன் தமிழ் மன்னர்களின் ஆட்சி

தேவநம்பியதீசன் காலத்தில் தமிழ் சிற்றரசர்கள் திறை செலுத்தி வந்தனர் என ஊகிக்கலாம். இம்மன் னனது கட்டளைக்குக் கீழ்ப்படிந்து இருந்த கதிர்காமம், சந்தானகமம், சைத்திரிய மன்னர்கள் தேவநம்பிய தீசனின் கட்டளையை ஏற்று, புனித அரச மரக் கிளையை நாட்டல் விழாவில் கலந்து கொண்டுள்ளனர். அரச மரக்கன்றுகளை தத்தமது அரசுகளிலும் நாட்டியுள்ளனர். கல்யாணப் பிரதேசச் சிற்றரசு, தேவநம்யிதீசனின் சகோதரன் உத்தியன் என்பவனால் கைப்பற்றப் பட்டது. ஒரு கட்டத்தில் கஜரகாமம், சந்தானகமம் சிற்றரசுகளை தேவநம்பியதீசனின் இன்னொரு சகோதரன் மகாநாகன் கைப்பற்றித் தன்னாட்சியை நிறுவிக் கொண்டான். நாகதீவு இம்மன்னனின் ஆதிக்கத்தை ஏற்றிருந்த போதிலும் உத்திரதேசத்தின் குறுநிலமன்னர்களில் சிலர் அதனால் வெறுப்படைந்திருக்க வேண்டும். அனுராதபுரமன்னின் ஏகாதிபத்தியச் செருக்கும், அதற்கு மேலாக இந்துக்காளாக விளங்கிய உத்திரதேசத்து மக்களின் ஒரு பகுதியினரை பௌத்தராக்கியமையும் வெறுப்பினை ஏற்படுத்தியிருக்க வேண்டும். இந்துவாக ஆரம்பத்தில் விளங்கிய தேவநம்பிய தீசனின் வல்லாதிக்கத்தை ஏற்ற இக்குறுநில மன்னர்களால் பௌத்த தேவநம்பியதீசனின் வல்லாதிக்கத்தை ஏற்க முடியாது போனது. அவ்வாறு கிளர்ந்தவர்களில் சேனன், குத்திகன் எனற இரு சிற்றரசர்கள் குறிப்பிடத்தக்கவர்களாக இருந்திருக்க வேண்டும்.

4.2 தமிழ் மன்னர்கள்

கி.மு. 3 ஆம் நூற்றாண்டுக்கும் (கி.மு.250) கி.மு. 1 ஆம் நூற்றாண்டுக்கும் (கி.மு.47) இடைப்பட்ட 200 ஆண்டுக்கால அனுராதபுர அரசின் வரலாற்றை நோக்கினால் அக்கால எல்லைக்குள் ஆட்சிபுரிந்த 23 மன்னர்களுள் 10 தமிழ் மன்னர்கள் 82 வருடங்களுக்கு மேல் ஆட்சி புரிந்தமையைக் கண்டுகொள்ளலாம். ஆயினும் இக்கால வரலாற்றைப் பல அத்தியாயங்களில் கூறும் மகாவம்சம் தமிழ் மன்னர்களின் ஆட்சியை சில செய்யுள்களில் மட்டுமே கூறி முடிக்கின்றது. அனுராதபுர அரசியலில் ஏற்பட்ட தமிழரின் ஆதிக்கமும் பௌத்த சிங்கள வரலாற்றை எழுதிய பௌத்த பிக்குகளிடையே இங்கிருந்த தமிழர்கள் மீதும் பண்பாட்டில் ஒன்றுபட்டிருந்த தமிழ் நாட்டின் மீதும் வெறுப்புணர்வை ஏற்படுத்தியது. அதனால், அவர்களால் எழுதப்பட்ட பாளி நூல்களில் பௌத்த சிங்கள வரலாறு மிகைப்படுத்தப்பட்டு தமிழருடைய வரலாறும் பண்பாடும் மறைக்கப்பட்டும், திரிவுபடுத்தப்பட்டும் கூறப்பட்டுள்ளன என்பார் புஸ்பரத்தினம்.

கி.மு.3 ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் இலங்கையின் வடபிரதேசத்தில் சிற்றரசுகள் இருந்துள்ளன என்பதைப் பிராமிச் சாசனங்களும் இலக்கிய ஆதாரங்களும் மெய்ப்பிக்கின்றன. கி.மு. 6 ஆம் நூற்றாண்டிலேயே வடக்கேயிருந்த அரசை மணிமேகலை, நாகநாடு எனக் குறித்துள்ளது. வல்லிபுரத்தில் கிடைத்த பொற்சாசனம் வடக்கில் ஓரரசு இருந்தது என்பதை நிருபிக்கின்றது. அண்மையில் பூநகரிப்பிரதேசத்தில் கிடைத்த மட்பாண்டச் சாசனங்கள் இப் பிரதேசத்தில் பலமான அரசொன்று இருந்தமைக்குச் சான்றாகின்றன. வடக்கிலிருந்து அனுராதபுரத்தின் மீது காலத்துக்குக் காலம் நிகழ்ந்த படையெடுப்புகளைத் தென்னிந்தியாவிலிருந்து தமிழர்கள் படையெடுத்துவந்தனர் எனப் பாளி சிங்கள நூல்கள் குறிப்பிட்டுள்ளன. உத்தரதேசத்திலிருந்து தமிழர்கள் தண்டெடுத்து வந்தனர் எனக் கூறவிரும்பாத பாளி நூல்கள் தென்னிந்தியாவிலிருந்து தமிழர் படையெடுத்தன எனக் குறிப்பிட்டுள்ளன என புஸ்பரத்தினம் விரிவாக ஆராய்ந்து தெரிவித்துள்ளார். இது தமிழர் சார்பாக இலங்கையில் கிடைத்து வரும் தொல்லியற் சான்றுகளுக்கு முரணாக அமைகின்றதென்பது அவரின் கருத்தாகும்.


4.3 சேனன், குத்திகன்


தேவநம்பியதீசனின் மரணத்தின் பின்னர் பல தசாப்தங்களாக வடவிலங்கையைத் தம்மாதிக்கத்தில் வைத்திருக்க சிங்கள மன்னர்களால் முடியவில்லை. மௌரிய சாம்ராஜ்யத்தின் மாமன்னன் அசோகனின் படைப்பலமும் செல்வாக்கும் தேவநம்பியதீசனுக்கு இருந்தமையால் தேவநம்பியதீசன் காலத்து உத்திரதேசக் குறுநில மன்னர்களும் உருகுணைப் பிரதேசக் குறுநில மன்னர்களும் அனுராதபுர மன்னனின் ஆணையை ஏற்றிருந்தனர். தேவநம்பிய தீசனின் மரணத்தின் பின்னர் இந்நிலையில் மாற்றம் ஏற்பட்டது. தேவநம்பியதீசனின் பௌத்த மதப் பரவலுக்கு விகாரைகளைக் கட்டுவதில் தன் செல்வத்தில் பெரும் பகுதியைச் செலவிட்டான். இராணுவப் படைப் பலத்தைப் பெருக்குவதில் கவனம் செலுத்தவில்லை. அதனால் இம் மன்னனின் மறைவின் பின்னர் உத்தரதேசத்துத் தமிழ் மன்னர்கள் அனுராதபுர அரசின் ஆணையை ஏற்காததோடு அனுராதபுரத்துக்கு எதிராகத் தண்டெடுக்கவும் தலைப்பட்டனர்.

அனுராதபுரத்தின் மீது முதன் முதல் படையெடுத்த தமிழர்களாக சேனன், குத்திகன் என்ற இருவரை மஹாவம்சம் குறிப்பிடுகின்றது. இவர்களைக் குதிரை வியாபாரிகள் என மஹாவம்சம் குறிப்பிடுகிறது. சேனனும் குத்திகனும் அரச பரம்பரையைச் சேர்ந்தவர்கள் அல்லர் எனத் தெரிகின்றது. அவ்வேளை அனுராதபுரத்தினைச் சூரதீச மன்னன் ஆண்டுவந்தான். சேனன்-குத்திகன் படையெடுப்பை இரண்டுவரிகளில், சூரதீசன் காலத்தில் சேனன், குத்திகன் என்ற இரு தமிழ்க் குதிரை வியாபாரிகள் படையுடன் வந்து சூரதீசனை வெற்றி கொண்டு இருபத்திரண்டு வருடங்கள் அனுராதபுரத்திலிருந்து அரசாண்டனர் என மஹாவம்சம் குறிப்பிட்டுள்ளது. 22 ஆண்டுகள் இலங்கையை ஆட்சிபுரிந்த ஒரு மன்னனைப் பற்றி இருவரிகளில் மஹாவம்சம் கூறிச் செல்கின்றமைக்குக் காரணம் அவர்கள் இருவரும் தமிழர்கள் என்பதனாலாகும்.

(தொடரும்)

குடும்பிமலையின் தோற்றம்





இது தேவநம்பியதீசனால் அமைக்கப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எத்தனைமுறை கைதானாலும் ஆஸி. செல்லும் முயற்சி தொடரும்

## கைதான அகதிகள் திட்டவட்டம்

எத்தனைமுறை கைது செய்யப்பட்டாலும் மீண்டும் மீண்டும் அவுஸ்திரேலியா செல்ல முயற்சிப்போம் என அவுஸ்திரேலியா செல்ல முற்பட்ட நிலையில் இலங்கை கடற்படையின ரால் கைது செய்யப்பட்ட அகதிகள் தெரிவித் துள்ளனர்.

அண்மையில் மேலும் 50 பேருடன் கைது செய்யப்பட்ட இரண்டு சகோதரர்கள் இதனை தெரிவித்துள்ளனர். கைது செய்யப்பட்டு சிறை யில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் அவர்கள் இருவரும் பிணையில் விடுவிக்கப் பட்டனர்.

உடப்பு பகுதியை சேர்ந்த அவர்களின் வழக்கு இன்னும் நிலுவையில் உள்ளது. எவ்வாறாயினும் சில நாட்களின் பின்னர் மீண்டும் அவுஸ்திரேலியா செல்ல முயற் சிக்கப் போவதாக அவர்கள் தெரிவித்துள் ளனர். இலங்கையில் தங்களுக்கு எதிர் காலம் இல்லை எனவும் வறுமையில் இருந்து வெளியில் வரவேண்டுமாக இருந் தால் தாங்கள் அவுஸ்திரேலியா செல்ல வேண்டும் எனவும் அவர்கள் தெரிவித்துள் ளனர்.

இந்நிலையில் தமிழ்நாட்டு முகாம்களில் தங்களுக்கு எதிர்காலம் இல்லை என்ற நிலை யிலேயே தாங்கள் அவுஸ்திரேலியா செல்ல முற்படுவதாக தமிழகத்தில் உள்ள இலங்கை அகதிகள் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் 61 இலங்கை அகதிகள் அவுஸ்திரேலியா செல்ல முற்பட்ட நிலையில் விசாரணை பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் தற்போது காஞ்சிபுரம் பகுதியில் உள்ள கல்யாண மண்டபம் ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இந்த மண்டபத்தில் இருந்து பேசிய அகதிப்பெண் ஒருவர் தமது கணவர் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன் னர் தமிழகத்தில் இருந்து அவுஸ்திரேலியா விற்கு அகதியாக சென்றதாகவும் இதுவரை யில் அவர் குறித்த எந்த தகவலும் இல்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் தாங்கள் அவர் உயிரு டன் இருந்தால் அவுஸ்திரேலியாவில் ஒன்றி ணைவதாக தெரிவித்துள்ள அவர் ஒருவேளை மரணித்திருந்தால் மரணத்தின் பின்னர் ஒன்றிணைவதாகவும் தெரிவித்துள்ளார்.

புழல் அகதிமுகாமில் தடுத்து வைக் கப்பட்டுள்ள அவர் சிறப்பங்காடி ஒன்றில் தொழில்புரிவதாகவும் அதில் கிடைக்கின்ற பணம் குடும்ப செலவுக்கு போதுமானதாக இல்லை எனவும் தெரிவித்துள்ளார். (அ-2)

## வைத்தியரின் வீட்டின் முன்னால் மலர்வளையம்

(பதுளை)

பதுளை வைத்தியசாலையின் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் தலைவ ரது வீட்டிற்கு முன்னால் மலர் வளையம் வைக்கப்பட்டமை தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

வீட்டிற்கு முன்னால் நேற்று முன்தினம் இந்த மலர்வளையம் வைக்கப்பட்டதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹண குறிப்பிட்டு ள்ளார்.

இதேவேளை, நேற்றுமுன்தினமிரவும் நேற்று அதிகாலையும் அநாமதேய தொலை பேசி அழைப்புக்கள் விடுக்கப்பட்டதாக பதுளை பொது வைத்தியசாலையின் வைத் தியர் டாக்டர் பாலித்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

இதனைத்தவிர வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் உறுப்பினர் ஒருவருக்கும் தொலை பேசியூடாக கொலை அச்சுறுத்தல் விடுக் கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவங்கள் தொடர் பான விசாரணைகளை பதுளை பொலி ஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)

# உடன்படிக்கையை இ.மி.சபை அதிகாரிகள் மீறியுள்ளனர்

## இ.மி.ச. தொழிற்சங்கம் குற்றச்சாட்டு

தம்முடன் கைச்சாத்திட்ட உடன்படிக் கையை இலங்கை மின்சாரசபையின் கட்டுப் பாட்டு அதிகாரி மீறியுள்ளதாக மின்சார சபை யின் தொழிற்சங்க கூட்டமைப்பின் நடவடிக் கைக்குழு உறுப்பினர் ரஞ்சன் ஜயலால் குற் றம் சுமத்தியுள்ளார். இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தொழில் ஆணையாளரின் தலைமை யில் கடந்த 16 ஆம் திகதி இடம்பெற்ற கலந்து ரையாடலில் மின்சார சபையின் கட்டுப்பாட்டு அதிகாரியுடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட உடன்படிக்கையை அடுத்து தமது பணிப் பகிஷ்கரிப்பு கைவிடப்பட்டது. அந்த உடன் படிக்கையின் பிரகாரம் ஊழியர்களுக்கு அச்சு றுத்தல் விடுத்தல், இடமாற்றங்கள் வழங்கப் படுதல் மற்றும் பயமுறுத்தல் போன்ற நடவ டிக்கைகளை நிறுத்துமாறு தொழில் ஆணை யாளர் மின்சாரசபையின் கட்டுப்பாட்டு அதிகா ரிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

எனினும் தொழில் ஆணையாளரினால் வழங்கப்பட்ட ஆலோசனைகள் பின்பற்றப் படாது அதனை மீறும் செயற்பாடுகள் தொட ர்ந்து இடம்பெற்று வருகின்றது.

அத்துடன் பணிப்பகிஷ்கரிப்பு நடத்தப் பட்ட நாட்களுக்கான சம்பளத்தை இல்லாது செய்வதற்கான நடவடிக்கைகளும் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

எனினும் இந்த விடயம் தொடர்பில் தொழில் ஆணையாளரை தெளிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதே வேளை, தொழிற்சங்கத்துடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்படிக்கை மீறப்படவி ல்லை என மின்சார சபையின் உபதலைவர் அநுர விஜேபால தெரிவித்துள்ளார். (அ-2)

# பூந்தமல்லி சிறப்பு முகாம் இன்று முற்றுகையிடப்படும்

## வைகோ அறிக்கை

(தமிழகம்)

ஈழத்தமிழர்களை விடுவிக்கக்கோரி இன்று செவ்வாய்க்கிழமை பூந்தமல்லி சிறப்பு முகாமை முற்றுகையிட்டுப் போராட்டம் நடத் தப்போவதாக ம.தி.மு.க. பொதுச் செயலா ளர் வைகோ அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக நேற்று முன்தினம் அவர் வெளியிட்ட அறிக்கையிலேயே மேற்கண்ட வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வறிக் கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ள விடயங் கள் வருமாறு,

இலங்கை அரசால் பாதிக்கப்பட்ட ஈழத் தமிழர்கள் தமிழகத்திலும் நிம்மதியாக இல்லை. பொலிஸ் விசாரணை என்ற பெயரால் துன் புறுத்தப்படுவதும் விடுதலைப்புலிகள் மீதான தடையை நியாயப்படுவத்துவதற்காக பொய் வழக்குகள் புனையப்பட்டு முகாம் சிறைக ளில் அடைக்கப்படுகின்றனர்.

இதனைக் கண்டித்தும் சிறைகளில் உள்ள அனைவரையும் திறந்தவெளி முகா மில் வைக்க வலியுறுத்தியும் செங்கல்பட்டு சிறப்பு முகாமில் ஈழத்தமிழர் செந்தூரன் 21 நாட்கள் உண்ணாவிரதம் இருந்தார். அரசு அனைவரையும் விடுவிப்பதாக கூறியதை யடுத்து உண்ணாவிரதத்தை கைவிட்டார். ஆனால், அரசு உறுதியளித்ததற்கு மாறாக அவர்கள் அனைவரையும் செங்கல்பட்டு சிறப்பு முகாமில் இருந்து சென்னையை அடுத்த பூந்தமல்லி சிறப்பு முகாமில் அடை த்தனர். இதனைக்கண்டித்து நேற்றைய தினம் முதல் உண்ணாவிரதப் போராட்டத் தில் செந்தூரன் ஈடுபடுகிறார்.

அவர் உயிருக்கு ஊறு நேர்ந்தால் தமிழக அரசுதான் பொறுப்பு. ஈழத்தமிழர் களை சிறப்பு முகாம்களில் இருந்து விடு வித்து திறந்தவெளி முகாம்களில் வைக்க வலியுறுத்தி இன்று செவ்வாய்க் கிழமை பூந்த மல்லி சிறப்பு முகாமை முற்றுகையிட்டு போராட்டம் நடத்த உள் ளோம் என்று அவர் கூறியுள்ளார். (அ-2)


# புலிகளின் தலைவர் பிரபாகரன் குறித்து தவறாகப் பேசவில்லை

## தி.மு.கவினர் விளக்கம்

விடுதலைப்புலிகள் இயக்கத்தலைவர் பிரபாகரன் தொடர்பாக தவறாக உரையாற்ற வில்லை. சகோதர யுத்தம் தொடர்பாகவே பேசினோம் என்று கருணாநிதியிடம் தி.மு.க வினர் நேற்று முன்தினம் விளக்கம் அளித் துள்ளனர். ஈழத் தமிழர்களை கொன்றவர் பிரபாகரன் என்று ஈரோடு மாவட்ட தி.மு.க. செயலாளர் என்.கே. கே.பி.ராஜாவும் தி.மு.க. தலைமைக்கழகப் பேச்சாளர் வி.பி.ராஜனும் பொதுக்கூட்டத்தில் உரையாற்றியதாக பத்தி ரிகை ஒன்றில் செய்தி வெளியானது.

இந்தக் கருத்து தி.மு.கவுக்கு உடன்பாடா னது இல்லை என்று தி.மு.க. தலைமைக் கழகம் ஓகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி அறிக்கை வெளியிட்டதுடன் இருவரிடம் விளக்கம் கேட் டும் நோட்டீஸ் அனுப்பியது. இந்த நிலையில் என்.கே.கே.பி.ராஜாவும் வி.பி.ராஜனும் ஞாயி ற்றுக்கிழமை காலை அறிவாலயத்துக்கு வந்து கருணாநிதியை சந்தித்தனர். அப்போது இரு வரும் கருணாநிதியிடம் விளக்கக்கடிதமும் கொடுத்தனர். அதில் சகோதர யுத்தம் தொடர் பாகவே உரையாற்றினோம். பிரபாகரன் தொடர்பாக தவறாக எதுவும் பேசவில்லை. பத்திரிகையில் தவறாக செய்தி வெளியிடப்ப டுள்ளது என்று கூறியுள்ளனர்.

விளக்கத்தை பெற்றுக்கொண்ட கருணா நிதி ஈழப்பிரச்சினை தொடர்பாக தலைமைக் கழ கத்தின் கருத்தை மீறி எதுவும் பேசக் கூடாது என்று எச்சரித்ததாக தெரியவருகிறது. (அ-2)




வெற்றித்தேர்வு வெளியீட்டகத்தால் நாடளாவிய ரீதியில் எதிர்வரும் 26 ஆம் திகதி நடைபெறவுள்ள தரம் 5 புலமைப்பரிசில் மாணவர்களுக்கான செயலமர்வு அண்மையில் யாழ்ப்பாணம், திருகோணமலை, மூதூர், பட்டிருப்பு, போரதீவு, பண்டாரவளை ஆகிய இடங்களில் நடைபெற்ற போது...... (படங்கள்:- உ.சாளீன்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சரத் பொன்சேகாவை விசாரித்த இராணுவ நீதிமன்ற நீதிபதி மரணம்



(கண்டி)

இலங்கையின் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை விசாரிக்க நியமிக்கப்பட்ட முதலாவது இராணுவ நீதிமன்ற நீதிபதியும் இலங்கை இராணுவத்தின் மூத்த அதிகாரிகளில் ஒருவரான மேஜர் ஜெனரல் அருண ஜெயதிலக புற்றுநோயால் மரணமாகியுள்ளார்.

இவர் மரணமாகும் போது இலங்கை இராணுவத்தின் தொண்டர் படைகளின் தளபதி மற்றும் சிங்கப் படைப்பிரிவின் தளபதியாக இருந்து வந்தார். 54 வயதான மேஜர் ஜெனரல் அருண ஜெயதிலக புற்றுநோயால் பாதிக்கப்பட்டு கடந்த 18 ஆம் திகதி மரணமானார்.

34 ஆண்டுகள் இலங்கை இராணுவத்தில் பணியாற்றியுள்ள அவர் இந்தியா, அமெரிக்கா, பிரித்தானியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் பயிற்சிகளைப் பெற்றவர்.

விடுதலைப்புலிகளுக்கு எதிரான போரில் கிழக்கிலும் வடக்கிலும் தீவிரமாக ஈடுபட்டவர். யாழ்ப்பாணத்தில் நீண்ட காலம் பணியாற்றிய அவர் வன்னியில் விடுதலைப்புலிகளுக்கு எதிரான போரின் இறுதிக் கட்டத்திலும் பங்கேற்றவர்.

போர் முடிவுக்கு வந்த பின்னர் இலங்கையின் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை விசாரிக்க நியமிக்கப்பட்ட முதலாவது இராணுவ நீதிமன்றிலும் இவர் நீதிபதியாக நியமிக்கப்பட்டிருந்தார். மேஜர் ஜெனரல் அருண ஜெயதிலகவின் இறுதிச் சடங்கு நேற்றைய தினம் கண்டியில் இடம்பெற்றுள்ளது. (அ-2)

# தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் தாக்கவில்லை

## இந்திய மத்திய அரசு மறுப்பு

தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் தாக்குதல் நடத்துவதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொள்ள முடியாது என இந்திய மத்திய அரசின் மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் ரவீந்திரன் தெரிவித்துள்ளார். இந்த வழக்குவிசாரணைகளில்கலந்துகொண்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

குறிப்பாக இந்திய கடல் எல்லையில் தமிழக மீனவர்கள் மீது தாக்குதல் நடத்துவதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை.

இவ்வாறு இலங்கைக் கடற்படையினர் இந்திய கடற்பரப்பிற்குள் அத்துமீறி பிரவேசித்தால் அது யுத்த முனைப்பாகவே கருதப்பட வேண்டும்.

தமிழக மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தப்படுவதாக தெரிவித்து உயர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்திய கடல் வளங்கள் அதிகளவில் பயன்படுத்தப்பட்டு உள்ளதாகவும் இலங்கையில் யுத்தம் காரணமாக சில தசாப்தங்களாக மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபடவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# தகவல் தொ.நு.கல்வியை மேம்படுத்த நடவடிக்கை

## கல்வி அமைச்சின் செயலர் தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் இரண்டு வருட காலப் பகுதியினுள் தகவல் தொழில்நுட்ப கல்வியினை மேம்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

சார்க் நாடுகளின் ஆசிரியர்கள் சம்மேளனத்தினால் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்யப்பட்ட கருத்தரங்கில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையின் தகவல் தொழில்நுட்ப கல்வி யினை சர்வதேச தரத்திற்கு கொண்டு வர முடியும் என நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் ஆரம்பமான இந்த மாநாட்டில் சார்க் நாடுகளைச் சேர்ந்த சுமார் 200 பேர் கலந்து கொண்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# சிறுவர் பாதுகாப்பு பிரகடனத்தில் இணைந்து கொண்ட இலங்கை

உலகம் முழுவதும் உள்ள சிறுவர்களுக்கு பாதுகாப்பை வழங்கும் ஐக்கிய நாடுகள் சபையின் புதிய கொள்கை பிரகடனத்தில் இலங்கை இணைந்து கொண்டுள்ளது.

இதற்கான கொள்கை பிரகடனம் ஐக்கிய நாடுகள் அமைப்பின் பிரதிநிதிகளினால் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவிடம் கடந்த வாரம் கையளிக்கப்பட்டதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

10 வருடங்களுக்கு முன்னர் ஐக்கிய நாடுகள் சபை மாநாட்டின் போது இதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. எமது பிள்ளைகளை பாதுகாப்பதற்கான உறுதியை புதுப்பிப்போம் என்ற தொனிப்பொருளின் கீழ் இந்த கொள்கை பிரகடனம் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# 2012.08 21 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★1770-கப்டன் ஜேம்ஸ் குக் கிழக்கு அவுஸ்திரேலியாவில் தரையிறங்கி அதனை பெரிய பிரித்தானியாவுக்குச் சொந்தமாக்கி அதற்கு நியூ சவுத் வேல்ஸ் எனப் பெயரிட்டான்.

★1821-ஜார்விஸ் தீவு கண்டுபிடிக்கப்பட்டது.

★1831-கறுப்பின அடிமைகளுக்குத் தலைமை தாங்கி நாட்டர்னர் கிளர்ச்சியைத் தொடங்கினார்.

★1842-டாஸ்மானியாவின் தலைநகர் ஹோபார்ட் நகரம் அமைக்கப்பட்டது.

★1863-அமெரிக்க உள்நாட்டுப் போர்: கூட்டமைப்புத் தீவிரவாதிகளின் தாக்குதலில் கன்சாஸ் மாநிலத்தில் லோரன்ஸ் நகரம் அழிக்கப்பட்டது.

★1911-லியனார்டோ டாவின்சியின் ஓவியமான மோனாலிசா பாரிசின் லூவர் அருங்காட்சியகத்தில் இருந்து திருடப்பட்டது.

★1920-சேர் ஏ.கனகசபை இலங்கையின் அரசியல் நிர்ணய சபைக்கு தமிழ்ப் பிரதிநிதியாகத் தெரிவானார்.

★1942-இரண்டாம் உலகப் போர்: ஸ்டாலின்கிராட் போர் ஆரம்பமானது.

★1945-இரண்டாம் உலகப் போர்: சாலமன் தீவுகள் தொடர் சமர் முடிவடைந்தது.

★1959-ஹவாய் ஐக்கிய அமெரிக்காவின் 50 ஆவது மாநிலமாக இணைக்கப்பட்டது.

★1963-தெற்கு வியட்நாமின் குடியரசு இராணுவத்தினர் நாட்டின் பௌத்த தலங்களை அழித்து நூற்றுக்கணக்கானோரைக் கொன்றனர்.

★1968-சோவியத் தலைமையிலான வார்சா ஒப்பந்த நாடுகளின் படையினர் செக்கோஸ்லவாக்கியாவைக் கைப்பற்றினர்.

★1969-அவுஸ்திரேலியனான மைக்கல் டெனிஸ் ரொஹான் என்பவன் ஜெருசலேமின் அல் அக்சா மசூதிக்குத் தீ வைத்தான்.

★1983-பிலிப்பைன்ஸ் எதிர்க்கட்சித் தலைவர் பெனீனோ அக்கீனோ மணிலாவில் கொலை செய்யப்பட்டார்.

★1986-கமரூனில் நியோஸ் ஆற்றில் காபனீரொட்சைட்டு வளிமம் கசிந்ததில் ஆயிரத்து 800 பேர் வரையில் கொல்லப்பட்டனர்.

★1991-லாத்வியா சோவியத் ஒன்றியத்திடம் இருந்து விடுதலையை அறிவித்தது.

★1991-சோவியத் தலைவர் மிக்கைல் கொர்பச்சோவ் மீதான ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சி தோல்வியடைந்தது.

★2007-சூறாவளி டீன் மெக்சிகோவை 165 மைல்/மணி வேகத்தில் தாக்குதலை ஆரம்பித்தது.

**பிறப்புக்கள்**

★1906-ப.ஜீவானந்தம், பொதுவுடைமைவாதி (இ.1963)

★1917-லியோனிடு ஹுர்விக்ஸ், ரஷ்யப் பொருளியல் அறிஞர் (இ.2008)

★1936-வில்ட் சேம்பர்லென், அமெரிக்கக்கூடைப்பந்து ஆட்டக்காரர் (இ.1999)

★1986-உசேன் போல்ட், ஜமேக்காவைச் சேர்ந்த தடகள ஆட்டக்காரர்


**இறப்புக்கள்**

★1901-அடோல்ஃப் ஃபிக், தொடுவில்லையைக் கண்டு பிடித்தவர் (பி.1829)

★1940-லியோன் ட்ரொட்ஸ்கி, ரஷ்யப் புரட்சியாளர் (பி.1879)

★1995-சுப்பிரமணியன் சந்திரசேகர், இந்திய வானியல்- இயற்பியலாளர், நோபல் பரிசு பெற்றவர் (பி.1910)

★2006-உஸ்தாத் பிஸ்மில்லாஹ் கான், இந்திய ஷெனாய் இசைக் கலைஞர் (பி.1916)



சுப்பிரமணியன் சந்திரசேகர்

சுப்பிரமணியன் சந்திரசேகர் வானியல்-இயற்பியலாளர் ஆவார். இவர் பிரித்தானிய இந்தியாவில் லாகூரில் பிறந்தவர். ஐக்கிய அமெரிக்கா, சிக்காகோவில் தனது வாழ்நாளின் பெரும் பகுதியைக் கழித்தவர். விண் மீன்கள் பற்றிய இவரது ஆய்விற்காக இவருக்கும் வில்லியம் ஃபௌலருக்கும் 1983 இல் இயற்பியலுக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது.

1937 இலிருந்து 1995 இல் இறக்கும் வரை சிக்காகோ பல்கலைக்கழகத்தில் பணியாற்றினார். இவர் 1953 இலிருந்து ஐக்கிய அமெரிக்கக் குடிமகனாவார்.

**வாழ்க்கைக்குறிப்பு**

சி.சுப்பிரமணியன் ஐயருக்கும் சீதாலட்சுமி அம்மையாருக்குப் பிறந்தவர் சந்திரசேகர். இவருடன் கூடப் பிறந்தவர்கள் ஆறு சகோதரிகளும் (ராஜலட்சுமி, பாலபார்வதி, சாரதா, வித்யா, சாவித்திரி மற்றும் சுந்தரி) மூன்று சகோதரர்களும் (விசுவநாதன், பால கிருஷ்ணன் மற்றும் ராமநாதன்) லாகூரில் ஐந்து வருடங்களும் லக்னோவில் இரண்டு வருடங்களும் வாழ்ந்தபின் அவரது குடும்பம் சென்னை வந்தடைந்தது. அவரது ஆரம்பப் படிப்பு வீட்டில் தொடங்கியது.

பதினோராம் வயதில் அவர் திருவல்லிக்கேணியிலுள்ள இந்து உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்தார். மாநிலக்கல்லூரியில் மேல்நிலைப்படிப்பு முடிந்ததும் 1927 இல் இளங்கலை (B.A.Honours) இயற்பியல் படிப்பை அதே கல்லூரியில் தொடர்ந்தார்.

1930 ஆம் ஆண்டு இந்திய அரசாங்கத்தின் பரிசும் பண உதவியும் பெற்று சந்திரசேகர் மேல்படிப்புக்காக கேம்ப்ரிட்ஜ் பல்கலைக்கழகத்திற்குப் பயணித்தார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கிழக்கு மாகாண மக்கள் விருப்பம்

# தனியாட்சியா...? கூட்டாட்சியா...?



கிழக்கு மாகாண சபைத் தேர்தலுக்கான பரபரப்புகள் இப்போது வேகம் கொள்ள ஆரம்பித்துள்ளன.

இரண்டு பிரதான சிங்களக் கட்சிகளைவிட, தமிழ்பேசும் மக்களின் இரண்டு கட்சிகளுமே தேர்தலின் முக்கிய பங்குதாரர்களாக பார்க்கப்படுகின்றன.

மூன்று மாகாணங்களுக்கான தேர்தல் செப்ரெம்பர் 8 ஆம் திகதி நடைபெற உள்ளது. ஆனால், சகல மொழி ஊடகங்களும் கிழக்கு மாகாண சபைத் தேர்தலையே முன்னிலைப்படுத்தி நிற்கின்றன.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தேர்தலில் போட்டியிடுவதே இதற்கான அடிப்படைக்காரணம்.

எவ்வழியாயினும் கூட்டமைப்பு கிழக்கின் ஆட்சியைக் கைப்பற்ற விடக்கூடாது என்பதில் அரசாங்க தரப்பு மட்டுமே அக்கறையாக இருக்கின்றது.

முஸ்லிம் காங்கிரஸ் பெறுகின்ற ஆசனங்களோடு தங்களது அசனங்களையும் இணைத்து ஆட்சியமைக்க முடியுமென ஆரம்பத்திலிருந்தே அரசாங்கம் சொல்லி வருகின்றது.

மகிந்தராஜபக்சவும் அவரது அமைச்சர்களும் பகிரங்கமாக இன்றும் இதனைத் தெரிவித்து வருகின்றனர்.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் இப்போதும் மகிந்த அரசில் அமைச்சராக இருப்பதால், அவர்கள் அரசாங்கத்துடன் இணைந்தே ஆட்சியமைக்க வேண்டும் என்கின்ற நியதி அங்குள்ளது.

இது நடைபெறத் தவறுமானால், முஸ்லிம் காங்கிரஸ் அரசிலிருந்து வெளியேறும் அல்லது வெளியேற்றப்படும் நிலை உருவாகும். அமைச்சர் பதவிகளை இழந்து அதனூடாகக் கிடைக்கும் சலுகைகளைப் பறிகொடுக்க முஸ்லிம் காங்கிரஸ் தயாரில்லை.

முஸ்லிம்கள் மூன்று அணிகளாக தேர்தலைச் சந்திக்கின்றனர். ஏற்கனவே கிழக்கு மாகாண அமைச்சராக உள்ள அதாவுல்லா இன்றும் ரவூப் ஹக்கீமின் பரம விரோதியாக இயங்கி வருகின்றார்.

கடந்தவாரம் அட்டாளைச்சேனையில் இவர்கள் இரு தரப்புக்குமிடையில் பாரதூரமான கைகலப்பு இடம்பெற்றது. பொலிசார் அதாவுல்ல தரப்புக்கு சாதகமாக நடந்ததாக முஸ்லிம் காங்கிரஸ் குற்றஞ்சாட்டியுள்ளது.

**தற்போதைய நிலைமையைப் பார்க்கும்போது, தேர்தல் நீதியாக நடைபெறுமா? என்று கேள்வி எழுப்பியுள்ளார் ரவூப் ஹக்கீம். இலங்கையின் நீதியமைச்சராக இருப்பவருக்கே தேர்தல் நீதியாக நடைபெறுமா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது.**

**பனங்காட்டான்**

மன்னார் நீதிவானுடன் பிரச்சினைப்பட்டு பிரபல்யமடைந்திருக்கும் அமைச்சர் ரிஷார்ட் பதியுர்தின் இங்கு போட்டியிடும் அடுத்த முஸ்லிம் குழுவின் தலைவர்.

முஸ்லிம் காங்கிரசின் கோட்டை என்று கருப்படும் கிழக்கின் வாக்குகளைப் பிளவுபடுத்துவதற்காகவே ரிஷார்ட் பதியுர்தினை மகிந்த தரப்பு போட்டியில் நிறுத்தியுள்ளது.

இந்த நிலவரங்களின் ஊடாக அவதானிக்கக் கூடியதாக இருப்பது ஒன்று மட்டுமே. முஸ்லிம் காங்கிரசை சிதறடித்து இனிவரும் தேர்தல்களில் முஸ்லிம்களின் தலைமைக் கட்சி என்று பேரம் பேசும் இடத்தை இல்லாமற் செய்வதே.

இதனால், ஆத்திரமடைந்த ரவூப் ஹக்கீம் பிக்குகளின் அடாவடித்தனத்தைக் கண்டித்து காவி உடை தரித்த பயங்கரவாதம் என்று மொழிந்தபின் -ஏற்பட்ட நெருக்கடிகளால், கூச்சமில்லாமல் அதனை வாபஸ் பெற்றுக்கொண்டார்.

இங்கு இடம்பெற்ற பள்ளிவாசல் தீவைப்பையும் ஹக்கீமின் காவியுடை தரித்த பயங்கரவாதம் என்ற தாக்குதலுடன் இணைத்தே பார்க்கவேண்டும்.

ரவூப் ஹக்கீம் அட்டாளைச்சேனைக்கு வருவதானால், தமது மையத்தை (சடலம்) கடந்தே வரவேண்டும் என்று அதாவுல்லா சவால் விடுமளவிற்கு இருவருக்கு மிடையே விரோதம் அதிகரித்துள்ளது.

அதாவுல்லாவின் செயற்பாடு பிள்ளையான் குழுவுக்கு சாதகமாகலாம் என்ற அச்சம் முஸ்லிம்களிடம் இல்லாமலில்லை.

கடந்த மாகாணசபைத் தேர்தலில் முதலமைச்சர் பதவியை இலக்குவைத்து அரசாங்க தரப்புக்கு அதிரடித் தாவல் மேற்கொண்டவர் அதாவுல்லா. இந்த தேர்தலிலாவது அந்தக் கனவை நனவாக்க நேரடி மோதலில் இறங்கியுள்ளார்.

**இந்தத் தேர்தலோடு முஸ்லிம் காங்கிரசின் கதையை முடித்துவிட வேண்டும் என்று விரும்பும் மகிந்த ராஜபக்ச முஸ்லிம்களுக்கிடையிலான பிளவை மேலும் ஊக்குவித்து வருகின்றார்.**

ஐ.தே.க., தமிழ் தேசியக் கூட்டமைப்பு, சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஆகியனவும் தங்கள் பட்டியலில் முஸ்லிம்களுக்கு இடமளித்துள்ளன. இதனைவிட சுயேட்சைக் குழுக்களும் தாராளமாக களமிறக்கப்பட்டுள்ளன.

கடந்த வடமாகாண நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு, டக்ளசின் ஈ.பி.டி.பி. மற்றும் ஐ.தே.க. சார்பில் திருமதி மகேஸ்வரன் ஆகியோர் தமிழர் வாக்குகளை பிரித்ததால், கூட்டமைப்பிடமிருந்த வாக்குக் கட்டுமானம் சிதறடிக்கப்பட்டது அண்மைக்கால வரலாறு.

அவ்வாறான ஒரு நிலைமை கிழக்கில் இந்த மாகாண சபைத் தேர்தலில் 'முஸ்லிம்களுக்கு ஏற்படலாமென்று பரவலாக எதிர்வு கூறப்படுகின்றது.

வித்தியாசமான ஓர் அரசியல் நெருக்கடி இங்கு உருவாகியிருப்பதால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இம்முறை போட்டியிடுவதை முஸ்லிம் காங்கிரஸ் வரவேற்றுள்ளது.

பிள்ளையான் குழு, தமிழரின் வாக்குகளை கள்ளமாக பாவித்து ஊழல் வழியாக முன்னைய காலங்களில் வாக்குகளைச் சேகரித்த வாய்ப்பு, கூட்டமைப்பு போட்டியிடுவதால் இம்முறை இல்லாமல் போகும் என இவர்கள் எதிர்பாக்கின்றனர்.

இதனால், பிள்ளயையான் தரப்புக்குக் கிடைக்கும் ஊழல் வழியான வாக்குகள் தடுக்கப்படும் போது முஸ்லிம்களின் வாக்கு வங்கியை தம்மால் முழுமையாகப் பெறமுடியும் என ரவூப் ஹக்கீம் கணித்துள்ளார்.

அரசாங்க ஆதரவும் அடாவடித்தனமும் ஆயுதக் கலாசாரமும் பிள்ளையான் பக்கமிருப்பதால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் முஸ்லிம் காங்கிரசும் தங்களுக்கு அனுகூலமாக நினைப்பது சாத்தியமாகும் என்று இப்போது சொல்ல முடியாது.

நான்குமுனைப்போட்டி இம்முறை இடம்பெறுவதால், வெற்றி வாய்ப்பு தங்களுக்கு அதிகமிருப்பதாக கூட்டமைப்பு நம்புகிறது. கள நிலவரங்களை அவதானிக்கும் அரசியல் நோக்கர்களும் இதனையே சொல்கின்றனர்.

இதனால், கூட்டமைப்பினர் பல்வேறு அறிவிப்புகளை வெவ்வேறு தேர்தல் களங்களில் தெரிவித்து வருகின்றனர். இவற்றில் நான்கு முக்கியமானவை.

1. கிழக்கு மாகாண ஆட்சியை கூட்டமைப்பு கைப்பற்றியபின் வடமாகாணசபைத்தேர்தலிலும் வெற்றிபெற்று இருமாகாண சபைகளையும் ஒன்றாக்கமுடியும்.

2. கிழக்கு மாகாணத் தேர்தலில் வெற்றிபெற்றால், காணி அதிகாரம், காவற்துறை அதிகாரம் ஆகியனவைகளை பெறுவதற்கு மத்திய அரசாங்கத்துடன் போராடுவோம்.

3. ஆட்சியமைக்கும் அறுதிப் பெரும்பான்மை கிடைக்காவிட்டாலும், தனித்து ஆகக் கூடிய ஆசனங்களை கூட்டமைப்பு பெறுமானால், முஸ்லிம் காங்கிரசுடன் இணைந்து ஆட்சியமைப்போம்.


4. கிழக்கிலுள்ள தமிழர்களில் 85 வீதமானவர்கள் வாக்களிப்பார்களானால் மட்டக்களப்பில் எட்டும் திருகோணமலையில் ஐந்தும் அம்பாறையில் மூன்றுமாக மொத்தம் பதினாறு ஆசனங்கள் கூட்டமைப்புக்கு கிடைக்கும். இதனுடன் போனசாகவும் இரண்டு ஆசனங்கள் கிடைக்கும் என்று இரா.சம்பந்தன் தமது அதீத நம்பிக்கையை வெளிப்படுத்தி வருகின்றார்.

இதற்கிடையில், கூட்டமைப்புடன் இணைந்து மாகாண அரசை ஐ.தே.க. அமைக்கப்போவதாக அதன் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க அறிவித்துள்ளார்.


முஸ்லிம் காங்கிரசும், தமிழ் தேசியக் கூட்டமைப்பும் மையப் புள்ளியிலிருந்து நகர்த்தும் இந்தத் தேர்தலில் தனியாட்சியா, அல்லது கூட்டாட்சியா உருவாகும் என்பதையும் அதன் மறுபக்கத்தையும் பொறுத்திருந்து பார்ப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20)அருகிலுள்ள உருவில் அதிகளவில் காணப்படும் கேத்திர கணித தளவடிவம் எது?
1) முக்கோணி 2)சதுரம் 3)வட்டம்



21) அருகில் தரப்பட்டுள்ள உருவில் காணப்படும் செங்கோணங்களின் எண்ணிக்கை யாது?
1) 6 2) 7 3) 8



22) தரம் 5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சைக்கான நேர அளவைக் காட்டும் அட்டவணை

| பாடம் | நேரளவு |
|---|---|
| வினாப்பத்திரம் 1 | 45 நிமிடங்கள் |
| இடைவேளை | 30 நிமிடங்கள. |
| வினாப்பத்திரம் 11 | 1 மணி 15 நிமிடங்கள் |

புலமைப் பரிசில் பரீட்சை மு.ப 8.30 மணிக்கு ஆரம்பமாகும் எனில் பரீட்சை நிறைவடையும் நேரம் என்ன?
1) மு.ப 10.45
2) மு.ப 11.00
3) மு.ப 11.15


23) பின்வரும் தகவல்களின் அடிப்படையில் விடை தருக

| 2பேனா 3பென்சில் | 1பேனா 2பென்சில் | 2புத்தகம் 2பேனா |
|---|---|---|
| ரூபா 42.00 | ரூபா 23.00 | ரூபா 270.00 |

1) புத்தகத்தின் விலை எவ்வளவு?
1)ரூபா 110 2)ரூபா 120 3)ரூபா 130

2) 2பென்சில் 2பேனாக்களின் விலை எவ்வளவு?
1)ரூபா 10 2)ரூபா 32 3) ரூபா 38


25)



உருவில் காணப்படும் உருளை வடிவமுள்ள ஒரு திண்மத்தை புள்ளிக் கோடு வழியே வெட்டும் போது கிடைக்கும் முகத்தின் உருவம்
1) செவ்வகம்
2)வட்டம்
3) முக்கோணி

26) குறித்த ஒருலீப் வருடத்தில் மார்ச மாதம் 9ந் திகதி திங்கட்கிழமை ஆகும். அவ்வருடம் பெப்ரவரி மாதம் 22ம் திகதி என்னகிழமை ஆகும்.
1) திங்கட்கிழமை 2)ஞாயிற்றுக்கிழமை 3)சனிக்கிழமை

27.கீழே உள்ளஉருக்களில் சமச்சீர் அச்சைக் கொண்டுள்ளது எது?



தொடர்பு இல்லாத கட்டத்தை தெரிவு செய்க

28)

| தாத்தா அப்பா மகன் | நாடு மாகாணம் மாவட்டம் | ஆசிரியர் மாணவர் மாணவி |
|---|---|---|


29) அடுத்து வரும் தெரிவு செய்க

T A M...............
P S Z Y
I II III IV

30) மைதானமொன்றில் நிறுத்தப்பட்டுள்ள கார் மோட்டார் சைக்கிள் என்பவற்றின் தொகை 22 ஆகும். அவற்றில் உள்ள சில்லுகளின் எண்ணிக்கை 74ஆகும். மைதானத்தில் உள்ள கார்கள் தொகை எவ்வளவு?
1) 10 2) 25 3)15

31) மோட்டார் சைக்கிள்களின் தொகை எவ்வளவு?
1) 8 2) 9 3) 7

33) இந்த உருவில்உள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை



1) 6 2) 10 3) 12

34) 400 இன் அரைவாசியின் 1/4 உடன் 7ஐக் கூட்டும்போது கிடைக்கும் எண் யாது?
1) 50 2) 57 3)107

34) வெற்றிடங்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

வெற்றியினல்..............................அடைந்த இரசிகர்கள் ..................................
1) மகிழ்ச்சி - கைதட்டினர்
2) களைப்பு - வாழ்த்தினர்
3) இன்பம் - கண்ணீர் விட்டனர்.

35) அட்டவணையில் உள்ள தகவல்களுக்கேற்ப விடை எழுதுக.

| நாள் | யூன் 30 | யூலை 31 | ஆகஸ்ட் 31 | செப் ரெம்பர் 30 | அக் டோபர் 31 |
|---|---|---|---|---|---|
| எண்ணிக்கை | 31 | 62 | ........... | 123 | 154 |

ஆகஸ்ட் மாதம் 31 ஆந் திகதிக்குப் பொருத்தமான எண் யாது?
1) 90 2) 93 3) 153


36) இன்று திங்கட்கிழமை நேற்று முன்தினத்துக்கும் கடந்த செவ்வாய்க்கிழமைக்கு மிடையே எத்தனை நாட்கள் இருந்தன?
1) 1 2) 2 3) 3

37) பாதையொன்றில் எப்பொழுதும் இருப்பது
1) தாரும் கால்வாயும்
2) மனிதர்களும் வாகனங்களும்
3) அகலமும் நீளமும்

38) கடிகாரமொன்றில் மணித்தியால முள் ஒருமுறை சுற்றினால் நிமிடமுள் சுற்றும் தடவைகளின் எண்ணிக்கை ?


1) 6சுற்று 2) 4சுற்று 3) 12சுற்று

39) பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் காணப்படும் உருக்களுள் மூன்று ஏதோ ஒரு வகையில் சமனானதாகும் அதன்படி சமனற்ற உருவைத் தெரிவு செய்து அதன் கீழ்க கோடிடுக.



1) 2) 3) 4)

40)



1) 2) 3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சிறுவர் அரங்கம்

197

## அதிசய பாறை... அசத்தல் ஆர்தர்!

முற்காலத்தில் இங்கிலாந்தை ஆள்வதற்கு அப்போது ராஜா யாரும் இல்லை. ஊர்ப்பெரியவர்கள் சேர்ந்துதான் ஒவ்வொரு பிரதேசத்தையும் நிர்வாகம் செய்து வந்தார்கள்.

தங்களுக்கு ஒரு



வலிமையான ராஜா வேண்டும் என்று மக்களுக்குத் தோன்றியது. வலிமையாக இருந்தால் மட்டும் போதாது. அறிவாளியாகவும் நேர்மையானவராகவும் மக்கள் நலனில் அக்கறை உடையவராகவும் இருக்கவேண்டும்.

அப்படிப்பட்ட ஒருவரை எப்படிக் கண்டுபிடிப்பது என்று மக்கள் ஆலோசனை செய்தார்கள்.

இதற்கிடையே ஒருநாள் நகர மையத்தில் ஒரு பாறை திடீரெனக் காட்சியளித்தது. இதுவரை யாரும் பார்த்திராத பாறை அது.

அந்தப்பாறையில் ஒரு வாள் ஊன்றப்பட்டு இருந்தது. அந்த வியப்பான பாறையைக் காண்பதற்கு மக்கள் கூட்டம் கூட்டமாக வந்தார்கள்.

இந்தப் பாறை மிகவும் அதிசயமாக இருக்கிறதே! ஒருவாள் வேறு இருக்கிறதே! இங்கே எப்படி வந்தது? என்று ஒருவரை ஒருவர் கேட்டுக்கொண்டார்கள்.

அந்த வாளை எடுப்பதற்கான முயற்சி செய்தார்கள். ஆனால் அது மிகவும் வலுவாகப் பாறையில் ஊன்றப்பட்டிருந்தது. நமக்கான ராஜாவைத் தேர்ந்தெடுப்பதற்காக கடவுளே இந்தப் பாறையையும் வாளையும் உருவாக்கியிருக்க வேண்டும் என்று மக்கள் நினைத்தார்கள்.

பாறையில் ஊன்றப்பட்டிருக்கும் வாளை இழுத்தெடுப்பவரே அரசர் ஆவதற்குத் தகுதியானவர் என்றும் முடிபு செய்தார்கள். இந்தச் செய்தி நாடெங்கும் பரவியது. ராஜா ஆகும் எண்ணத்துடன் வாளை உருவப் பலரும் முயன்றார்கள். ஆனால் எவ்வளவுதான் முயன்றாலும் வாளை அசைக்கக்கூட முடியவில்லை.

பலசாலிகளான பலரும் முயற்சி செய்தும் பயன் எதுவும் ஏற்படவில்லை. பாறையும் பாறையில் இருக்கும் வாளும் எல்லோருக்கும் சவால் விட்டபடி நகரின் மத்தியில் பல மாதங்களாக இருந்தன.

இந்தச் சமயத்தில் ஆர்தர் என்னும் பெயருடைய சிறுவன் ஒருவன் அங்கே வந்தான். ஆர்தரின் அண்ணன் ஒரு படைவீரன். வாளைப்பார்த்தபோது ஆர்தர் மகிழ்ச்சியடைந்தான். அந்தவாளைப் பாறையில் இருந்து பிடுங்கி எடுத்தால் ராஜா ஆகிவிடலாம் என்பது அவனுக்குத் தெரியவே தெரியாது. அவன் எண்ணம் எல்லாம் வேறு ஒன்றாக இருந்தது.

அடடா! எவ்வளவு அருமையான வாள்! இதை எடுத்துச்சென்று அண்ணனுக்குப் பரிசாக அளிக்கலாம். போருக்குப் போகும்போது அண்ணனுக்கு இந்த வாள் மிகவும் உபயோகப்படும் என்று நினைத்தான்.

ஆர்தர் வாளைப் பிடித்து ஒருமுறைதான் இழுத்தான். மிகச்சுலபமாக அவன் கையோடு அது வந்துவிட்டது.

ஹா...ஹா...ஹா... பிரமாதம்! திடீரென்று அங்கே வெடிச்சிரிப்பு கேட்டது. மந்திரவாதி மெர்லினுடைய சிரிப்புத்தான் அது. தன் மந்திரவித்தையால் பாறையையும் வாளையும் அங்கே உருவாக்கியது மெர்லின்தான்.

மந்திரவாதி சொன்னான், சிறுவனே! நான்தான் இவற்றை இங்கே ஸ்தாபித்தேன். நீ இப்போது செய்த செயலின் மூலமாக இந்த நாட்டுக்கு ராஜாவாக ஆகியிருக்கிறாய். நீதான் இந்த நாட்டை ஆள்வதற்குத் தகுதியானவன். வா! நான் எல்லா வித்தைகளையும் உனக்குக் கற்றுக் கொடுக்கிறேன் என்றான்.

ஆர்தர் மெர்லினுடன் சென்றான். மெர்லினும் ஆர்தருக்கு எல்லாக் கலைகளையும் கற்றுக்கொடுத்தான். திறமை மிகுந்த சிறுவனான ஆர்தர் அனைத்தையும் வெகுவிரைவில் கற்றுக்கொண்டான். சீக்கிரமே அவன் இங்கிலாந்தின் அரசனாக முடிசூட்டிக்கொண்டான்.


ஆர்தரின் ஆட்சி தர்ம நியாயத்தின்படி இருந்தது. அவன் ஆட்சியில் மக்கள் எல்லா நலன்களுடன் வாழ்ந்தார்கள்.

நான் ராஜாவாகவும் நீங்கள் குடிமக்களாகவும் இருந்தாலும் நீங்கள் எல்லா விடயங்களிலும் என்னுடன் துணை இருங்கள்.

நாம் நாட்டுக்காக ஒன்றிணைந்து செயற்படுவோம் என்று மக்களிடம் அடிக்கடி சொல்வான் ஆர்தர். புதிய ராஜாவை மக்களுக்கு மிகவும் பிடித்துவிட்டது. எதிரிகளின் ஆக்கிரமிப்பை எதிர்ப்பதற்கு வலிமைவாய்ந்த ஒருபடை வேண்டும் என்று ஆர்தருக்குத் தோன்றியது.

உடனே அவன் வலிமையும் துணிவும் உள்ள ஆட்களைக் கொண்டு ஓர் அமைப்பை உருவாக்கினான். நாட்டை எதிரிகளிடம் இருந்து காப்பாற்றுவது மட்டுமல்ல கஷ்டப்படுபவர்களுக்கு உதவுவதும் அந்த அமைப்பின் நோக்கம். அந்தப் படைவீரர்கள் ராஜாவின் எல்லாக்கட்டளைகளையும் உடனடியாக நிறைவேற்றினார்கள்.

ஆர்தர் ராஜாவின் வீரப் போராளிகள் என்று புகழ் பெற்ற இவர்களுக்குத் தளபதி என்று எவரும் இல்லை. எல்லோருக்கும் சமமான பதவிகள் அளிக்கப்பட்டு இருந்தன. போர்க்காலத்தில் ராஜாவும் இவர்களில் ஒருவனே. நாட்டைக் காக்கிற ஒரு படைவீரன்.



ஆர்தர் எதிரிகளைத் துரத்தி அடித்தான். துன்பத்தில் இருப்பவர்களுக்கு உதவி செய்தான். மக்களின் விருப்பத்துக்கு ஏற்றபடி அவன் வெகுகாலம் ஆட்சிசெய்தான்.


இங்கிலாந்தை ஆட்சி செய்தவர்களில் மிகச்சிறந்த ராஜா அவன்தான். நாட்டுக்கு ஆபத்து ஏற்படும்போது மக்களைக் காப்பாற்றுவதற்காக ஆர்தர் ராஜாவும் அவன் வீரர்களும் இப்போதும் வருவார்கள் என்று மக்கள் நம்புகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரத்தத்தை சுத்தமாக்கக்கூடிய ஆரோக்கியமான உணவுகள்

மனித உடம்பில் இரத்தமானது சக்தி கடத்து பொருளாக செயற்படுகிறது. இரத்தம் தான் நாம் உண்ணும் உணவில் இருந்து சத்துக்களை கிரகித்து ஒட்சிசனாக மாற்றி மூளைக்கும் இதயத்திற்கும் அனுப்புவதோடு மனித நடமாட்டத்திற்கு தேவையான சக்தி யையும் அளிக்கிறது. இரத்தம் சுத்தமா னதாக இருந்தால்தான் நம்மால் ஆரோக் கியமாக நடமாட முடியும்.

அசுத்தக் கலப்பில்லாமல் இரத்தத்தை சுத்திகரிக்கும் சக்தி அன்றாடம் உண்ணும் உணவுப்பொருட்களிலேயே உள்ளது.



உணவியல் நிபுணர்கள் கூறும் அவற்றை சாப்பிட்டு பாருங்களேன்.

**எலுமிச்சை**

இரத்தத்தில் உள்ள அசுத்தங்களை சுத் திகரித்து அவற்றை கழிவுகளாக வெளியேற் றும் சக்தி எலுமிச்சைக்கு உண்டு. தினசரி காலை நேரத்தில் வெதுவெதுப்பான நீரில் எலுமிச்சை சாறுடன் தேன் கலந்து சாப்பிட இரத்தத்திற்கு புத்துணர்ச்சி கிடைக்கும். ஒரு வாரம் இதை முயற்சித்துப் பாருங்களேன். உங்களின் உடலில் கிடைக்கும் அபிரிமித மான சக்தியை நீங்களே உணர்வீர்கள்.

**நோய் எதிர்ப்பு சக்தி மிளகு**

உணவுப் பொருட்களில் சுவைக்காக நாம் சேர்த்துக்கொள்ளும் மிளகு சிறந்த இரத்த சுத்திகரிப்பானாக உள்ளது. எனவே, உணவுகளில் மிளகு சேர்த்துக் கொள்வதன் மூலம் உடல் ஆரோக்கியம் அதிகரிக்கும்.

**பசுமை காய்கறிகள்**

பச்சை நிறமுடைய காய்கறிகள், கீரைகள் உடல் சக்தியை அதிகரிப்பவை என்பது அனை வரும் அறிந்ததே. இதில் உள்ள குளோரோ பில் மனிதர்களுக்குத் தேவையான சக்தியை இரத்தத்திற்கு அளிக்கிறது.

நமக்குத் தேவையான சக்தி கிடைக்க அன்றாட உணவுகளில் பச்சைக் காய்கறி சலட்களை அதிகம் உட்கொள்ள வேண்டும் என்கின்றனர் உணவியல் நிபுணர்கள்.

**கண்ணிற்கு ஒளி தரும் கரட்**

கரட்டில் உள்ள கரோட்டின் சத்து கண் ணிற்கும் சருமத்திற்கும் நன்மை தரக் கூடி யது. நமது உணவில் கரட் அதிகம் சேர்த்துக் கொள்வதன் மூலம் இரத்தத்தில் உள்ள மாசு க்கள் சுத்திகரிக்கப்படுகின்றது. சமைத்து உட் கொள்வதை விட கரட் ஜுஸ் பருகுவது ஆரோ க்கியத்திற்கு ஏற்றது.

**வெள்ளைப்பூண்டு**

உடல் ஆரோக்கியத்தைக் காப்பதில் வெள் ளைப்பூண்டு சிறந்த உணவாகும். இதில் இரத்தத்தில் உள்ள தேவையற்ற கொழுப் புகளை அகற்றுகிறது. இரத்ததிற்கு புத்துணர் ச்சி அளிக்கிறது. இது இறந்து போன செல் களை நீக்குவதோடு புதிய செல்களை இரத் தத்தில் விரைந்து உற்பத்தி செய்கிறது. எனவே, வெள்ளைப்பூண்டினை அதிக அளவில் உண வில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று உண வியல் நிபுணர்கள் பரிந்துரைக்கின்றனர்.


இந்த உணவுகளை உட்கொள்வதன் மூலம் இரத்தம் சுத்திகரிக்கப்படுவதோடு உடலு க்குத் தேவையான சக்தி எளிதில் கடத்தப் படும். இதனால் உடலும் உற்சாகமடையும் என்பது அவர்களின் அறிவுரையாகும்.

# நீரிழிவு நோயாளர்களுக்கான சிறந்த உணவு முறைகள்

நீரிழிவு நோயானது உண்ணும் உணவி ற்கு நேரடியாக தொடர்புடையது.

அதனால் பொருத்தமான உணவுகளை மட்டுமே உண்ண வேண்டும். ஒவ்வொரு நோயாளியும் அவரது நோயின் தன்மைக் கும் பின் விளைவுகளுக்கும் ஏற்ப உணவுக் கட்டுப்பாட்டை கடைப்பிடிக்க வேுண்டும்.

இட்லி, தோசை, வடை மற்றும் இது போன்ற பிற அரிசி உணவுகள் அனைத்தி லுமே மாப்பொருட்கள் உள்ளன. இவை




இரத்தத்தில் சீனியின் அளவை அதிகப் படுத்தக் கூடியவை என்பதால் தவிர்த்து விடு தல் நலம்.

வெண்டிக்காய், முட்டைக்கோஸ், புடோல ங்காய், சுரைக்காய், வெங்காயம், கொத்த மல்லி, நெல்லிக்காய், நூல்கோல், முள்ள ங்கி, வாழைத்தண்டு, வெண்பூசணி, பேரிக் காய், இளநீர் போன்றவற்றில் ஏதேனும் ஒன்றை சமைக்காமல் சாப்பிட்டு ஏனைய இரண்டு வேளைகளிலும் உணவு உட்கொள் ளலாம்.

பப்பாளி, தக்காளி, மாதுளை, நாவல், அதிகம் பழுக்காத கொய்யா, பிளம்ஸ், நுங்கு,தோடம்பழம், அன்னாசி, அத்திப் பழம் ஆகியவற்றில் ஏதேனும் ஒரு வகையை ஐஸ் கலக்காமல் சாப்பிடலாம்.

கோதுமை, மக்காச்சோளம், பட்டாணி, சோயா பீன்ஸ் முதலியவற்றை அவசியம் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

இவை உடலில் இன்சுலினை அதிகரிக் கச் செய்யும். இவ்வுணவுகள் சீனியினால் ஏற்படும் பக்க விளைவுகளையும் பார் வைக் குறைவு, சிறுநீரகக் கோளாறு, இத யப் பாதிப்பு, இரத்தக்குழாய் பாதிப்பு, எலு ம்புகள், நரம்புகள் பாதிப்பு ஆகியவற்றை தடுக்கின்றன.

வெந்தயக் கஞ்சியை காய்ச்சி காலை யில் வெறும் வயிற்றில் சாப்பிட்டு வர செரி த்தல் வேலை செம்மையாக நடைபெறும். உடலுக்கு இன்சுலினுக்கு இணை யான மருந்து கிடைக்கும். காய்கறிகளை மசாலா குறைந்த கூட்டாக தயாரித்து உட்கொள்ள வேண்டும்.

முட்டைக்கோஸ், வெங்காயம், வெள்ள ரிக்காய், முள்ளங்கி, ஆவியில் வேக வைத்த பசளைக்கீரை, புதினா, வெங்கா யத் தழை ஆகியவற்றை பச்சடியாகச் செய்து நிறைய உட்கொள்ள வேண்டும். நீர் கல ந்த எலுமிச்சம் பழச்சாறினை சீனி சேர்க்க மால் அருந்தலாம்.

உடல் களைப்புத் தீர காய்கறிகளை அல்லது வெள்ளாட்டுச் சிவப்பு எலும்பு சூப் வைத்து இடைவேளை நேரத்தில் அருந் தலாம். உணவை மூன்று வேளை பெரிய உணவாகவும் இரண்டு வேளை சிற்று ண்டியாகவும் பிரித்து வரிசைப்படுத்தி மொத் தம் ஐந்து வேளையாக உட்கொள்வது நல்லது.




# நோய்களை காட்டிக்கொடுக்கும் முக்கியமான உறுப்பு நகங்கள்

உடலில் காணப்படும் நகங்கள் அழகு படுத்த மட்டும்தான் இருக்கின்றன என்று பலர் நினைக்கின்றனர். ஆனால், உண் மையில் இது மிகவும் முக்கியமான உறுப்பு. சிலர் நகங்களில் அதிகமாக அடிக்கடி அழுக்குகள் நுழைந்து நக ங்களின் அழகைக் கெடுக்கிறது என்று வண்ணம் தீட்டுகின்றனர். மேலும் சில ரின் நகங்கள் நன்றாக பொலிவோடு இருக்கும். திடீரென்று நகங்களின் பழைய அழகு மாறி, நிறம் மாறி காணப்படும்.

இவ்வாறு ஏற்பட்டால் உடலில் ஏதோ பிரச்சினை என்று அர்த்தம். ஏனெனில், நாம் இந்த நகங்களை வைத்து உடலில் ஏற்படும் நோய்களை தெரிந்துகொள்ள முடியும்.

நகத்தின் அமைப்பு, நிறம் வைத்து மருத்துவர்கள் உடலில் உள்ள பிரச் சினைகளை எளிதில் கண்டறிவார்கள். அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பதுபோல உடலின் நலம் நகத்தில் தெரிந்துவிடும். பொதுவாக நகங்கள் இளஞ்சிவப்பு நிறத்தில் இருக்கும். இப் போது என்னென்ன நிறத்தில் இருந்தால் என்னென்ன பிரச்சினை என்று தெரிந்து கொள்ளுங்கள்.

**நோய் அறிகுறிகளை கண்டறிவதற்கு நகங்களின் நிறங்கள்**

நகங்கள் வெள்ளை நிறத்தில் இருந் தால் கல்லீரல் பாதிக்கப்பட்டிருக்கிறது. நகங்களின் வளர்ச்சி குறைந்து பாதி சிவப்பாக இருந்தால் சிறுநீரக செயலி ழப்பு ஏற்பட்டிருக்கிறது. நகங்கள் மஞ்சள் நிறத்தில் இருந்தால் உடலில் மஞ்சள் காமாலையால் பாதிக்கப்பட்டிருக்கிறீர்கள் என்று அர்த்தம். இதயநோயால் பாதிக் கப்பட்டிருந்தால் அழுத்தமான இளஞ் சிவப்பு நிறத்தில் நகங்களானது இருக் கும்.

நகங்கள் வெளுத்து குழியாக இருந் தால், இரத்தச் சோகை ஏற்பட்டு இரும் புச்சத்து குறைவாக இருக்கும். மேலும் நகங்கள் கிளிமூக்கு போல வளைந்து இருந்தால் நாட்பட்ட நுரையீரல், இதய நோயால் பாதிக்கப்பட்டவர்களாக இருக் கும். நகங்கள் நீல நிறத்தில் இருந்தால் இதயத்தில் ஓட்டை ஏற்பட்டு நல்ல இரத் தமும் கெட்ட இரத்தமும் ஒன்றாக கலந் திருக்கிறது.

மேலும் இரத்தத்தில் போதிய அளவு க்கு ஒட்சிசன் இல்லாவிட்டாலும் ஆர்ச னிக் என்ற நச்சுகளால் பாதிக்கப்பட்டிரு ந்தாலும் நகங்கள் நீல நிறத்தில் காண ப்படும். அவர்கள் அதிக அமிலத் தன் மையுள்ள சோப்பு மற்றும் புளிக் கரைசல் போன்றவற்றை பயன்படுத்தக்கூடாது. உடலில் சீனியின் அளவு அதிகமாகவும் புரதம் மற்றும் துத்தநாகச்சத்து குறை வாகவும் இருந்தால் நகத்தில் வெண் திட்டுக்கள் காணப்படும். ஆகவே, அவர் கள் இரத்தத்தில் சீனியின் அளவை குறை த்துக்கொள்ள வேண்டும்.

சின்ன சின்னக்குழிகள் நகத்தில் உண் டாகி அவற்றில் வெடிப்பு ஏற்பட்டு செதில் செதிலாக உதிர்ந்தால் அது சொரியாசிஸ் என்ற தோல் வியாதியின் அறிகுறியாகும்.


நகத்தில் மஞ்சள் கோடுகள் இருந்தால் அதிகமாக புகை பிடிப்பதனால் நிக் கோ டின் கறை படிந்து இருக்கலாம் அல்லது நகங்களுக்கு நெயில் பொலிஷ் தீட்டுவ தாலும் ஏற்பட்டு இருக்கலாம்.

**நகங்களில் எப்போதும் செய்யக் கூடா தவை...**

1. நகங்களை எப்போதும் நுனிப்பகுதி களை சுத்தமாக வெட்டக்கூடாது. அவ் வாறு வெட்டினால் நகத்தை சுற்றி சதை வளர்ந்து அதிக வலியினை ஏற்படுத்தும்.

2. நகங்களை பற்களால் கடிக்கக் கூடாது. நகம் வெட்டும் கருவியினால் மழுங்க வெட்ட வேண்டும்.

3. சாப்பாட்டின் முன், சாப்பாட்டின் பின் கைகளை கழுவும் போது நகங் களை சுத்தமாக கழுவ வேண்டும். இல்லையென்றால் நகங்களில் கிருமி கள் படிந்து வயிற்று வலி, வாந்தி, வயிற் றுப்போக்கு ஆகியவை உண்டாகும்.



4. இரவில் தூங்கும் முன் கை மற் றும் கால்களில் உள்ள நகங்களை சுத்தமாக கழுவி பின் தூங்க வேண்டும்.

5. நகங்கள் அழகாக இருக்க தின மும் காய் மற்றும் கனிகளை அதிகம் உண்ண வேண்டும். ஏனெனில், காய் கனிகளில் உள்ள சத்துக்கள் உடலில் எந்த நோயும் அண்டாமல் பாதுகாக்கும்.

ஆகவே, நகங்களானது எவ்வளவு சுத்தமாக இருக்கிறதோ அந்த அளவு நமது உடலும் சுத்தமாகவும் ஆரோக் கியமாகவும் இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரிவுரைகளை ஆரம்பிக்கக்கோரி பல்கலை.மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

## ஜனாதிபதிக்கும் மகஜர் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழக விரிவுரைகளை மீள ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்குமாறும் பல்கலைக்கழக மாணவர் உரிமைகள் பேணப்படல் வேண்டுமென வலியுறுத்தியும் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் நேற்றுக் காலை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இவ் ஆர்ப்பாட்டம் யாழ்.பல்கலைக்கழக வளாகத்தினுள் ஆரம்பிக்கப்பட்டு பின்னர் கல்விசாரா ஊழியர்களின் சம்பள முரண்பாட்டை உடன் நீக்கு, மகிந்த சிந்தனை ஒழிக, மாணவர் சக்தி மாபெரும் சக்தி என்ற கோசங்கள் ஆர்ப்பாட்டத்தில் ஓங்கியொலித்தன.

மேலும் இவ் ஆர்ப்பாட்டத்தில் 100 இற்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் கலந்து கொண்டதுடன் பொலிஸாரும் பல்கலைக்க

பல்வேறுபட்ட பணிப்புறக்கணிப்புக்களால் மூடப்பட்டு உள்ள நிலையில் மாணவர்களினது கல்விசார் நடவடிக்கைகள் முற்றாகப் பாதிக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றன. ஜூன்மாத இறுதிவரை கல்விசாரா ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

ஜூலை மாதத்தொடக்கத்திலிருந்து இன்று

ஓர்முறையான ஒழுங்குமுறையும் இலவச உயர்கல்வி தொடர்ந்து அதே தரத்தில் பேணப்படவும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும்.

✷பட்டதாரி மாணவர்களின் கல்வித்தகைமைக்கேற்ப தராதரமான வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படல்வேண்டும்.

✷பல்கலைக்கழக மாணவர் அனுமதியில் இசற்புள்ளி குளறுபடிகள் நீக்கப்பட்டு பல்க





பல்கலைக்கழக வீதியில் ஊர்வலமாகவும் நடைபெற்றது.

இதன்போது மாணவர்கள் கோஷங்களை எழுப்பியும் பதாகைகளினை ஏந்தியும் தமது எதிர்ப்பினை தெரிவித்தனர். அவற்றில், ஆசியர்வின் ஆச்சரியம் என்பது இலவசக் கல்வியை இல்லாமல் செய்வதா? அரசே கல்விக்காலத்தை வீணடிக்காது விரிவுரைகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடு, எமது எதிர்காலத்தினை இருளாக்காதே!, பாலர் பாடப்புத்தகத்திலும் அரசியலைப்புகுத்தாதே! போராடுவோம், போராடுவோம் கல்விக்காகப் போராடுவோம், உங்கள் அரசியலுக்கு மாணவர்களா பலிக்கடா, நாட்டின் வருங்காலத்தைச் சிதைக்காதே, பட்டதாரி நியமனத்தில் பாரபட்சம் காட்டாதே, விரிவுரையாளர்கள்

ழக முன்றலில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்ததோடு வீதிக்கிறங்கிய மாணவர்களினை உள்ளே செல்லுமாறும் வற்புறுத்தினர்.

எனினும் மாணவர்கள் தாம் திட்டமிட்டபடி வீதிப்போக்குவரத்துக்கு இடையூறு இன்றி தமது ஆர்ப்பாட்டத்தினை முன்னெடுத்தனர்.

ஜனாதிபதிக்கான
மகஜரும் கையளிப்பு

யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் ஊடாக தமது கோரிக்கை அடங்கிய மகஜர் ஒன்றினை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு அனுப்பி வைத்துள்ளனர். அவ்வறிக்கையில் தெரிவித்திருப்பதாவது,

கடந்த 3 மாதங்களுக்கும் மேலாக நாட்டிலுள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களும் வரை விரிவுரையாளர்களும் பல கோரிக்கைகளை முன்னிறுத்தி பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதன்காரணமாக மாணவர்களது பொன்னான கல்வி நேரம் வீணடிக்கப்பட்டு வருகிறது.

ஆகவே, மேதகு ஜனாதிபதி அவர்கள் இவ்விடயத்தில் தலையிட்டு எமது கீழ்க்கண்ட கோரிக்கைகளை நிறைவேற்றி பல்கலைக்கழக விரிவுரைகளை உடன் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

✷மொத்த உள்நாட்டு உற்பத்தியில் குறைந்த பட்சம் 6 வீதத்தினை இலவசக் கல்விக்காக ஒதுக்கி நிலைபேறான தரமான இலவசக்கல்வி தொடர்ந்து பேணப்பட வேண்டும்.

✷உயர்கல்வி தனியார்மயப்படுத்தலில் லைக்கழக அனுமதிகள் உரிய வேளையில் இடம்பெற நடவடிக்கை எடுக்கவேண்டும்.


✷ பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், கல்வி சார் ஊழியர்கள் ஆகியோரின் சம்பளப் பிரச்சினை உடனடியாகத் தீர்க்கப்பட்டு மாணவர்களின் கல்வி சுமுகமாகத் தொடர நடவடிக்கை எடுக்கப்படல்வேண்டும் என்ற கோரிக்கை அடங்கிய மகஜர் கையளிக்கப்பட்டது.

குறித்த மகஜர் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் வசந்தி அரசரட்ணத்தினூடாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவருக்கும் அனுப்பிவைக்கப்படவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் நேற்று இல்லாத காரணத்தினால் யாழ். பல்கலைக்கழகப் பதிவாளரிடம் மகஜர் கையளிக்கப்பட்டது. (அ-4)

## விற்பனை நட்சத்திர விருதுக்கு தெரிவு

(பருத்தித்துறை)



இலங்கைக் காப்புறுதி கூட்டுத்தாபனத்தினால் இலங்கை ரீதியாக 50ஆவது ஆண்டு நிறைவையொட்டி வருடாந்த விற்பனை விருதுகள் வழங்கும் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விருது வழங்கும் நிகழ்வில் 2011 ஆம் ஆண்டிற்குரிய விற்பனை நட்சத்திர விருதினை நெல்லியடிக்கிளை அலுவலர் மகாதேவன் சுமன் முதன்முறையாக பெற்றுக் கொள்ளவுள்ளார்.

இலங்கைக் காப்புறுதிக்கூட்டுத்தாபனத்தின் தலைவர் மற்றும் பணிப்பாளர் சபையினரால் இவ்விருது வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-9-10)

## உரமானிய பதிவுகள்

(தனங்கிளப்பு)

மறவன்புலோ கமக்கார அமைப்பின் எல்லைக்குட்பட்ட விவசாயிகள் இவ்வாண்டுக்கான உரமானியத்தை பெற்றுக் கொள்வதற்கான காணி மீளாய்வு தொடர்பான பதிவுகள் நாளை புதன்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் யாழ்.மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

அனைத்து கமக்காரர் களையும் தவறாது இப்பதிவுகளை மேற்கொள்ளும்படி கமக்கார அமைப்பின் தலைவர் ச.திருஞானசம்பந்தர் தெரிவித்துள்ளார். (அ-9-37)

## சிறுவர் துஷ்பிரயோகங்களை கட்டுப்படுத்த சிறுவர் கழகங்கள்

சிறுவர் பாதுகாப்பும் பெற்றோர் திறன் அபிவிருத்தி தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கின் போது சர்வோதய நிறுவனத்தின் கொழும்பு மாவட்ட இணைப்பாளர் மாலினி சிறுவர் கழகங்களைத் திறந்து வைத்தார். யாழ்.மாவட்டத்தில் அதிகரித்துவரும் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல் தொடர்பான கருத்தரங்கு சாவகச்சேரி கெற்பேலி மற்றும் சுழிபுரம் காட்டுப்புலப்பகுதியில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையும் சர்வோதயம் நிறுவனமும் இணைந்து சாவகச்சேரி மற்றும் சுழிபுரம் கிராம அபிவிருத்தி நிலையத்தில் நடத்திய சிறுவர் பாதுகாப்பும் பெற்றோர் திறன் விருத்தியும் விழிப்புணர்வுக்கருத்தரங்குகளில் அப்பகுதி பாடசாலை மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் பலர் கலந்து கொண்டு தமது கருத்துக்களையும் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான கருத்துக்களையும் கேட்டறிந்து கொண்டனர்.

பெற்றோர்கள் தமது பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பாது வேலைக்கு அமர்த்துதல் மற்றும் சிறுவர் பாதுகாப்பின்றி பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்படுகின்றமை தொடர்பாக சர்வோதய நிறுவனத்தின் கொழும்பு மாவட்ட அதிகாரி மாலினி மற்றும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் உளவள உத்தியோகத்தர்கள் மற்றும் சமூக சேவை அமைச்சின் கிளிநொச்சி மாவட்ட உளவள உத்தியோகத்தர்கள் பலர் தமது கருத்துக்களை முன்வைத்தனர். (அ-2)




## யாழ்.கல்வி வலயத்தில் அதிபர் பதவி வெற்றிடம்

(யாழ்ப்பாணம்)

வெற்றிடமாகவுள்ள வகை III ஐச் சேர்ந்த யா/ ஆனைப்பந்தி மெ.மி.த.க.பாடசாலை, யா/கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை ஆகிய பாடசாலை அதிபர் பதவிக்கு யாழ். கல்வி வலய பாடசாலைகளில் பணிபுரியும் அதிபர் சேவை உத்தியோகத்தரிடமிருந்தும் அதிபர் சேவை நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியவர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் படிவங்களை ஆசிரியர் நிர்வாகக்கிளையில் பெற்று எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன் சமர்ப்பிக்கு மாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் வி. செல்வராஜா அறிவித்துள்ளார். (அ)

## தவறவிட்டவர்கள் தொடர்பு கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி ஆலய மஹோற்சவ காலங்களில் தவறவிடப்பட்ட தங்கச் சங்கிலியொன்று கண்டெடுக்கப்பட்டு யாழ். மாநகர சபையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக யாழ்.மாநகர ஆணையாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய தங்கச் சங்கிலிக்கு உரித்துடையவர் யாழ்.மாநகர சபை பொதுசன தொடர்பு உத்தியோகத்தர் ச.லோகசிவத்துடன் 0718562025 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு ஆதாரங்காட்டி பெற்றுக் கொள்ள முடியும். (அ-9)

## உதயபுரம் கிராமத்திற்கு மின்சாரம் வழங்க ஏற்பாடு

(அரியாலை)

அரியாலை தென்கிழக்கு உதயபுரம் கிராமத்துக்கு வடக்கின் வசந்தம் திட்டத்தினூடாக மின்சாரம் வழங்குவதற்கான வேலைத் திட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

இலங்கை மின்சார சபையின் வடக்கின் வசந்தம் இணைப்பாளர் அச்சுதன் தலைமையில் நேற்று முன்தினம் ஈ.பி.டி.பி.யின் நல்லூர் பிரதேச எதிர்க்கட்சித் தலைவர் அம்பலம் ரவீந்திரதாசன் இணைந்து இம்மின்னிணைப்பு வேலைத்திட்டத்தை ஒழுங்குபடுத்தி வருவதுடன் மின்மாற்றி அமைப்பதற்கு இடம் தெரிவு செய்யப்பட்டு அதை அமைப்பதற்கு ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் மின் கம்பம் நடும் வேலைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தர்ப்பம் வரும் என்று நான் ஒப்புக்கொள்ள மாட்டேன். தங்களுக்குத் தேவையான சந்தர்ப்பங்களைத் தேடிப் பெறவேண்டும். *- பெர்னாட்ஷா*

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## போருக்குப் பின்பான தமிழர்களின் கட்டாயக் கடமை என்ன?

ஈழத் தமிழ் மக்களின் இன்றைய போக்கு எவ்வாறு உள்ளது என்ற கேள்வி எழுப்பப்படுவது போருக்குப் பின்பான சூழமைவில் அவசியமானதொன்றாகும்.

போருக்கு முன்னைய காலகட்டம், போர்ச் சூழல், போருக்குப் பின்பான காலகட்டம் என்றவாறு ஈழத் தமிழ் மக்களின் நிலைவரங்களை அறியவேண்டிய தேவை சமகாலத் திட்டமிடலுக்கும் செப்பனிடலுக்கும் அத்தியாவசியமாகின்றது.

எனினும் போருக்கு முன்பான காலம் என்பது 30 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பதாலும், போர்ச் சூழல் 30 ஆண்டுகள் என்ற நீண்டகாலப் பகுதியைக் கொண்டது என்பதாலும் அவை பற்றிய குறிப்புகளை இவ்விடத்தில் தவிர்த்துக் கொள்ளலாம்.

அதேநேரம் போருக்குப் பின்பான சமகாலப் போக்கு எப்படியாக மாறி வருகிறது என்பது பற்றி ஆராய்வதும், அவற்றில் இருக்கக்கூடிய பல்வேறு மாற்றங்களில் சிலவற்றையேனும் பிரஸ்தாபிப்பதும் காலத்தின் கட்டாயமாகும்.

அவ்வகையில் போருக்குப் பின்பான எங்கள் பண்பாட்டு,வாழ்வியல், வரலாற்று ஆதாரங்கள், பூர்வீக இருப்பிடங்கள் என அத்தனையும் ஆபத்தை எதிர்கொண்டுள்ளன என்ற உண்மையைக் கூறித்தான் ஆக வேண்டும்.

இவ்வாறானதொரு நிலையில் எங்கள் வாழ்வியலோடு - இருப்போடு சம்பந்தப்பட்ட அத்தனையும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளன என்ற உண்மையை நாம் உணர்ந்துள்ளோமா என்று கேட்டால், அதுதான் இல்லை.

நாங்கள் அறியாமலே, எங்களால் உணர முடியாமலே எங்கள் வாழ்விற்கும் எங்கள் இருப்பிற்கும் ஆபத்து நடந்துகொண்டிருக்கிறது என்பதை நினைக்கும்போதுதான் நெஞ்சம் நெருடிக் கொள்கிறது.

இந்த ஆபத்துக்கள் தமிழினத்தை அரசியல், பொருளியல், சமூகவியல், கல்வியியல் என பல தளங்களின் மூல வேர்களைத் தாக்கி அவற்றின் செழிப்பை அழிக்க முற்பட்டுள்ளன.

எனவே இத்தகைய மிக மோசமான சூழமைவில் எங்கள் தமிழ் இளைஞர்கள், பெரியவர்கள் என அனைவரும் சிந்தித்துச் செயலாற்ற வேண்டிய கட்டாயம் ஏற்படுகின்றது.

தமிழ் இளைஞர்கள் சிந்திக்க வேண்டும் என்று கூறினாலே அதற்கு வேறுவிதமான கற்பித அர்த்தங்களை சூட்டுகின்ற ஒரு அரசியல் சூழமைவில்,

எங்கள் இளைஞர்கள் தமிழ்ப் பண்பாட்டை, அதன் கலாசார விழுமியத்தை, கல்விப் பாரம்பரியத்தை கட்டிக்காப்பதுகூட மிகப் பெரிய தமிழ்ப் பணி என்ற உண்மையை உணர்ந்தாக வேண்டும்.

எங்கள் இருப்பை, எங்கள் உரிமைகளை, எங்களுக்கான சுதந்திரத்தை பறித்தல் என்பது நாங்கள் பிரிந்து நிற்கும்போதும், மௌனமாக இருக்கும்போதுமே சாத்தியமாகும்.

நாங்கள் ஒற்றுமைப்பட்டு விட்டால் -ஒன்றுபட்டுக் குரல் கொடுக்க முற்பட்டு விட்டால் ஆபத்துக்குள் அகற்று செல்லும் என்பது யதார்த்தம்.

எனவே தமிழினத்தின் அரசியல் தலைமைகள் வெவ்வேறு தளங்களில் இயங்கினாலும் தமிழினம் என்ற கட்டத்தில் ஒன்றுபட்டு ஒருமித்துக் குரல் கொடுக்க வேண்டும்.

இதுஒன்றே போருக்குப் பின்னான ஆபத்துக்களை தமிழர்கள் முறியடிப்பதற்கான ஒரே வழியாகும்.

# மனித உரிமை மீறப்பட்டுள்ளதா என்பதை சர்வதேசம் நேரில் வந்து பார்க்கட்டும்

## ஜனாதிபதி மஹிந்த அழைப்பு

(அநுராதபுரம்)

மறைப்பதற்கு எம்மிடம் ஒன்று மில்லை. மனித உரிமை மீறல் இடம்பெற்றுள்ளதா என்பதை சர்வதேச சமூகம் நேரில் வந்து பார்க்கட்டும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அநுராதபுரத்தில் அண்மையில் நடைபெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முதலாவது தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மனித உரிமை தொடர்பில் அரச சார்பற்ற நிறுவனங்கள் கூறும் பொய்களை சர்வதேச சமூகம் நம்பக்கூடாது. உண்மை நிலையை நேரில் வந்து கண்டறிய வேண்டும்.

துப்பாக்கி ஏந்தி போரிட்ட பயங்கரவாதிகளையும் மன்னித்து புனர்வாழ்வளித்துள்ள நாம் ஒருபோதும் பழிவாங்கும் நோக்கமுடையவர்களல்லர்.

அத்துடன் பொதுமக்களின் வாக்குகளைப் பெற புதிய வாக்குறுதிகளை வழங்கத் தேவையில்லை.

நாம் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றிய பின்பே மக்கள் முன் வந்துள்ளனர்.

அத்துடன் முப்பது வருட கால யுத்தத்தின்போது மக்கள் பட்ட கஷ்டங்கள், துன்பங்களை நாம் அறிவோம். அத்தகைய கொடூரமான யுத்தத்தை நாம் முடிவுக்குக் கொண்டு வந்து பாரிய அபிவிருத்தியில் நாட்டைக் கட்டியெழுப்பி இளைஞர்களுக்குத் தொழில் வாய்ப்புக்களை வழங்கியே மக்கள் முன் வந்துள்ளனர். மனித உரிமை தொடர்பாக உலகம் எம்மீது விரல் நீட்டுகிறது. நாம் அவர்களுக்குக் கூறுவதெல்லாம் இங்கு நேரில் வந்து பாருங்கள் என்பதே.

சில அரச சார்பற்ற நிறுவனங்கள் டொலர்களுக்காக கூறும் பொய்களை நம்ப வேண்டாம். எமக்கு ஒளிப்பதற்கு எதுவுமே இல்லையென நாம் அவர்களுக்குக் கூறுகின்றோம் என்றார். (அ-2)

# காணிப்பிரச்சினைக்கு தீர்வுகாண 13 ஆவது திருத்தச்சட்டம் அவசியம்

## த.தே.கூட்டமைப்பு தெரிவிப்பு

(கொழும்பு)

காணிப்பிரச்சினைக்கு தீர்வு காண 13 ஆம் திருத்தச் சட்டத்தை அமுல்படுத்த வேண் டுமென தமிழத் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிறேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,


வடக்கு, கிழக்கு காணி பகிர்வு தொடர்பான பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டுமாயின் 13 ஆம் திருத்தச் சட்ட மூலம் முழுமையாக அமுல்படுத்தப்பட வேண்டும். காணிப் பிரச்சினைக்கு தீர்பு காண புதிதாக காணி ஆணைக் குழுக்கள் அமைக்கப்பட வேண்டிய அவசிய மில்லை. காணிப்பிரச்சினைக்கு உரிய தீர்வுத் திட்டங்களை முன்வைப்பதற்கு 13 ஆம் திருத்தச் சட்டத்தில் போதியளவு சந்தர்ப்பம் காணப்படுகின்றது என்றார். (அ-2)

# கார்ட்போர்ட் வீரர்களிடம் மக்கள் ஏமாந்து விடக்கூடாது

## பொன்சேகா வேண்டுகோள்

கார்ட்போர்ட் வீரர்களிடம் மக்கள் ஏமாந்து விடக்கூடாது என முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

அம்பலாங்கொடையில் நடைபெற்ற கூட்டமொன்றில்கலந்து கொண்டு உரை



யாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.அவர் மேலும் தெரிவிக்கையில்,

கார்ட்போர்ட் வீரர்கள் தேசப்பற்றாளர்களாகத் தோன்றி மக்களை ஏமாற்றுகின்றனர்.

பயங்கரவாதிகளிடமிருந்து மீட்கப்பட்ட நாட்டை தற்போது ஒரு சிலர் சொந்தம் கொண்டாடி வருகின்றனர்.

நான் மக்களுக்கு சேவையாற்றுவதற்கும் உயிரைத் தியாகம் செய்யவும் மக்களுக்காக மீளவும் சிறைத்தண்டனை அனுபவிக்கவும் தயார் என்றார். (அ-2)

# புத்தளம் நகைத் திருடர்கள் பிணையில் செல்ல அனுமதி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் ஆலயத்தில் அடியார்களின் தங்க ஆபரணங்களை திருடிய புத்தளத்தினைச் சேர்ந்த ஏழு பேருக்கும் யாழ்.நீதிமன்றம் பிணை வழங்கியுள்ளது.

நல்லூர் ஆலயத் திருவிழா உற்சவ நாட்களின்போது புத்தளத்தில் இருந்து வந்த 4 பெண்கள் உட்பட ஏழு பேர் தங்க நகை திருட்டில் ஈடுபட்டு வந்துள்ளனர்.

குறித்த ஏழு பேரும் தமது திருட்டை முடித்துக் கொண்டு ஹயஸ் வானில் தப்பிச் சென்று கொண்டிருந்த போது ஏ9 வீதி பாதையில் வைத்து குறித்த கும்பலை யாழ்.பொலிஸார் மடக்கிப் பிடித்துள்ளனர்.

இவர்கள் ஏழு பேரும் யாழ்.நீதிமன்றின் உத்தரவிற்கு அமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டு குறித்த வழக்கு நேற்று மீண்டும் மன்றில் எடுத்துக் கொள்ளப்பட்[illegible]

இதன்[illegible]போது வழக்கின [illegible] விசாரணை செய்த யாழ்.நீதிவான் மா.கணேசராஜா, குறித்த ஏழு பேருக்கும் எதிராக பொலிஸாரினால் பதிவு செய்யப்பட்டுள்ள 4 தனித் தனி வழக்குகளுக்கும் தனித் தனியாக பிணை அனுமதி வழங்கினார்.

இதில் முதலாம், 2-ம் வழக்கிற்கு 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியான 2 ஆட்பிணையும், 3வது வழக்கிற்கு 5 ஆயிரம் ரூபாய் காசுப் பிணையும், 2 ஆட் பிணையும் 4-ம் வழக்கிற்கு 50 ஆயிரம் ரூபாய் ஆட்பிணையிலும் செல்ல அனுமதித்தார். (ந-4)

## குளவிகள் கொட்டியதில் 20 பேர் வைத்தியசாலையில்

கொட்டகலை பகுதியில் தேயிலைத் தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்த தொழிலாளர்கள் மீது நேற்று மாலை குளவிகள் கொட்டியுள்ளன.

குளவி கொட்டலுக்குள்ளான 20 பேர் கொட்டகலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதோடு இவர்களில் 14 பேர் சிகிச்சை நிறைவு பெற்று வீடு திரும்பியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, கடந்த 2 தினங்களுக்கு முன்பு மஸ்கெலியா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட காட்டு மஸ்கெலியா தோட்டத்தில் குளவிகள் கொட்டுதலுக்கு இலக்கான 7 பேர் மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## மனச்சுத்தம் மிக அவசியம்



ஒரு செயலின் பயனில் கருத்து செலுத்துவது போல அதைச்செய்யும் முறையிலும் கருத்தைச் செலுத்துங்கள்.

உலகிற்கு நன்மை செய்யும் ஒவ்வொரு முறையும் நமக்கு நாமே நன்மை செய்து கொள்கிறோம் என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்.

மனத்தூய்மை இருப்பதும் மற்றவர்களுக்கு நன்மை செய்வதுமே வழிபாட்டின் சாரம்.

ஏழை, பலவீனர்கள், நோயாளிகளிடம் இறைவனைக் காண்பவனே உண்மையான பக்தன்.

எப்போதும் உற்சாகத்துடன் இருப்பது தான் ஆன்மீகவாழ்வில் ஈடுபடுவதற்கான முதல் அறிகுறி.

உயர்ந்த எண்ணத்தைச் சிந்திக்கும் மனிதனால் அற்பமான விடயங்களில் ஆர்வம் ஏற்படுவது இல்லை.

அறிவு, உள்ளம் ஆகிய இரண்டில் எதைப்பின்பற்றுவது என்ற போராட்டம் எழும்போதுஉள்ளம் சொல்வதையே பின்பற்றுங்கள்.

நல்லொழுக்கத்தால் தெய்வீக உணர்வும் தீயொழுக்கத்தால் மிருக உணர்வும் ஏற்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிய மட்ட உதை பந்தாட்ட சுற்றுப் போட்டிக்கு வடமாகாணத்தை சேர்ந்த இரு மாணவர்கள் தெரிவு


ஈரானில் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 14ஆம் திகதி தொடக்கம் 28ஆம் திகதி வரை நடைபெறவுள்ள 19 வயதிற்குட்பட்ட ஆசிய பாடசாலைகள் உதைப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் பங்குபற்றுவதற்கு வட மாகாணத்தைச் சேர்ந்த இருவர் தேர்ந் தெடுக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் கல்லூ ரியைச் சேர்ந்த கிறிஸ்திராஜ் அஜன்தன் மற்றும் மன்னார் சென்சேவியர் ஆண் கள் பாடசாலையை சேர்ந்த ஆர். கே. கில்மன் சொய்சா ஆகியோர்களே தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இம்மாணவர்கள் இருவரும் வடமா காண விளையாட்டுத்துறை திணை க்கள பணிப்பாளர் எஸ். அண்ணாதுரை ஊடாக வடமாகாண ஆளுநர் ஜி. ஏ. சந்திரசிறி யை பத்தரமுல்லையிலுள்ள வடமா காண ஆளுநர் உப அலுவலகத் தில் சந்தித்து ஆசிபெற்றுக் கொண்டனர். இவர்களை வடமாகாண ஆளுநர் பாரா ட்டியதுடன் தனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொண்டார்.


இவர்கள் இருவரதும் ஈரான் பயணத் திற்கான விமான பயணச்சீட்டை வடமா காண பிரதம செயலாளர் திருமதி விஜய லட்சுமி ரமேஷ், வடமாகாண ஆளுநர் ஜி. ஏ. சந்திரசிறி முன்னிலையில் மாணவன் கிறிஸ்திராஜ் அஜன்தன் மற்றும் மாணவன் ஆர். கே. கில்மன் கொய்சா ஆகியோர் களுக்கு வழங் கினார். வடமாகாண விளையாட்டுத்துறை பணிப் பாளர் எஸ். அண்ணாத்துரையும் இதில் கலந்து கொண்டார்.





## கொலின்ஸ் அணி வெற்றி

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் அல்வாய் மனோகரா சனசமூக நிலையத்தின் 85 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு மனோகரா விளை யாட்டுக் கழகம் நடத்தும் 11 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதை பந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடர் ஆட்டத்தில் கொலின்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வல்வை விளையாட்டு கழகம் மோதியது. இரு அணியும் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தின.



எனினும் இறுதியில் கொலின்ஸ் விளை யாட்டுக் கழகம் 2:1 என்ற கோல் கணக்கில் வல்வை விளையாட்டு கழக அணியை வெற்றிகொண்டது.

## இன்றைய ஆட்டங்கள்

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அனு மதியுடன் கற்கோவளம் ஐஸ் தொழிற் சாலை ஆதரவில் கற்கோவளம் உதய தாரகை விளையாட்டுக்கழகம் நடாத்தும் மாபெரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

இப் போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு உதயதாரகை விளையாட்டு கழக மைதானத்தில் ஆதி சக்தி விளையாட்டுக்கழக ஏ அணியை எதிர்த்து பருத்தித்துறை ஐக்கிய விளை யாட்டுக் கழக ஏ அணி மோத வுள்ளது. (9)

## விளையாட்டுச் செய்திகள்....

### தேசிய வீர வீராங்கனைக்கான பயிற்சிமுகாம்

வடமாகாண கல்வித்தி ணைக்கள த்தின் ஏற்பாட்டில் வடமாகாண பாடசாலை மெய்வல்லுநர் போட்டியில் வெற்றிபெற்று தேசியமட்டப்போட்டிக்கு தகுதிபெற்ற வீர வீராங்கனைகளுக்கான பயிற்சி முகாம் நேற்று திங்கட்கிழமை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் ஆரம் பமாகி யுள்ளது. தொடர்ந்து நான்கு தினங்கள் இப்பயிற்சிமுகாம் நடைபெறவுள்ளது. நான்கு நாட்கள் நடைபெறும் இவ் வதிவிடப்பயிற்சி முகாமில் கொழும் பிலி ருந்து வருகை தந்த மெய்வல்லுநர் பயிற் றுநர்கள் பயிற்சிகளை வழங்க வு ள்ளனர் என வடமாகாண உடற்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் சத்தியபாலன் தெரி வித்துள்ளார். இப்பயிற்சி முகாமில் யாழ்ப் பாணம், கிளிநொச்சி, வவுனியா, முல் லைத்தீவு, மன்னார் மாவட்டங்க ளைச் சேர்ந்த மெய்வல்லுநர் வீர வீராங் கனை கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

## மட்டுவில் வளர்மதி விளையாட்டு கழகம் சம்பியன்

கைதடி மேற்கு சனசமூக நிலையத்தின் 64ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு குமரன் வி.க நடாத்தும் தென்மராட்சி ரீதியிலான மாபெரும் மென்பந்து கிரிக்கெட் போட்டிகளின் இறுதி ஆட்டம் நேற்று முன்தினம் ஞாயிற்றுகிழமை பி.ப 3.30மணியளவில் கைதடி மத்தி வளர்மதி வி.க மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டியில் மட்டுவில் வளர்மதி வி.க சம்பியனாகியது.

நாணயசுழற்சியில் வெற்றி பெற்ற நியூபவர் வி.க முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. 15பந்து பரிமாற்றங்கள் நிறைவில் சகல விக்கெட்டினையும் இழந்து 69 ஓட்டங்களினை பெற்றனர். துடுப்பாட்டத்தில் நியூபவர். வி. க சார்பாக றொக்சன் - 34, சடகோபன் - 10 ஓட்ட ங்களினை தமது அணிக்காக பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் மட்டுவில் வளர்மதி வி.க சார்பாக பானுகோபன் - 28/4, கேதீஸ் - 10/3 கைப்பற்றினர், பதிலுக்கு 70 ஓட்டங் கள் பெற்றால் வெற்றி என்ற நிலையில் துடுப்பெடுத்தாடிய மட்டுவில் வளர்மதி வி.க அணியினர் 11.2 பந்து பரிமா ற்றங்கள் நிறைவில் 2 இலக்கினை மாத்திரமே இழ ந்து 70 ஓட்டங்களினை பெற்று 8 இலக்குகளினால் வெற்றி பெற்றனர். துடுப்பாட்டத்தில் மட்டுவில் வளர்மதி வி.க சார்பாக அமல் ராஜ் -36 ஓட்டத்தினையும் தனுசன் -12 ஓட்டங்களினையும் தமது அணிக்காக பெற்றுகொடுத்தனர்.

பந்துவீச்சில் நியூ பவர். வி.க சார்பாக நிர்மலன் -5/1, அனோ -19/1 இலக்குக ளினை கைப்ப ற்றினர். மட்டுவில் வளர் மதி வி.க இவ் வெற்றியின் மூலம் குமரன் சவால் கிண்ணத்தை தனதாக்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாய்னாவுக்கு கார் வழங்கினார் சச்சின்



இந்தியாவின் நட்சத்திர கிரிக்கெட் துடுப் பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர், பட்மின்டன் வீராங்கனை சாய்னா நேவாலை ஊக்கப் படுத்தும் விதமாக பி.எம்.டபிள்யூ காரினை பரிசாக வழங்கியுள்ளார்.

லண்டன் ஒலிம்பிக் பட்மின்டன் போட்டி யில் இந்திய வீராங்கனை சாய்னா நேவால் வெண்கலப் பதக்கம் பெற்றதன் காரணமாக சச்சின் டெண்டுல்கர், சாய்னாவுக்கு பி.எம். டபிள்யூ கார் வழங்க முடிபு செய்திருந்தார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் ஹைத ராபாத்தில் நடந்த நிகழ்ச்சியில் பி.எம். டபிள் யூ கார் சாய்னாவுக்கு பரிசாக வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியை சச்சினின் நெருங்கிய நண் பரும் ஆந்திர ரஞ்சி அணித் தலைவராக இருந்த சாமுண்டேஸ்வரன் நாத் ஏற்பாடு செய்திருந்தார்.

# விமர்சனங்கள் என்னை பாதிக்கின்றன -மலிங்க



இலங்கை சார்பாக போட்டிகளில் பங்கு பற்ற தான் எப்போதும் தயாராக இருப்ப தாகவும் இலங்கை சார்பாக போட்டிகளில் பங்குபற்றும்போது நூறு சதவீத அர்ப்பணிப் புடனேயே போட்டிகளில் பங்குபற்றுவதாக வும் இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்க தெரிவித்தார்.

தன்னுடைய அர்ப்பணிப்பு பற்றி கேள்வி எழுப்புபவர்கள், தான் நாட்டுக்காக செய்த வற்றை பார்வையிடவில்லை என தான் எண் ணுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஐ.பி.எல். போட்டிகளில் மாத்திரம் தான் விக்கெட்டுகளைக் கைப்பற்றுகின்றேன். இலங்கை சார்பாக போட்டிகளில் பங்குபற்றும் போது விக்கெட்டுகளை கைப்பற்றுவது இல் லையென பலர் தன் மீது குற்றம் சுமத்துவ தாகத் தெரிவித்த லசித் மலிங்க, கடந்த 2 வருடங்களில் உலகில் அதிக விக்கெட்டுகளை தானே கைப்பற்றியுள்ளதாகவும்,

அவ்வாறு இருந்தும் தன் மீது இவ்வாறு கற்றம் சுமத்தப்படுவதாக அவர் தெரிவித்தார்.

ஒரு வீரராக தன்னால் முடிந்தளவு இலங் கைக்கான கடமைகளை தான் ஆற்றியுள்ள தாகத் தெரிவித்த லசித் மலிங்க, தான் இது வரை செய்தவற்றைப் பற்றி கதைக்க விரும் பவில்லை எனவும் தெரிவித்தார்.

ஆனால் ஒரு போட்டியில் தான் விக்கெட் டுகளை கைப்பற்றாவிடில் பலர் வேறுவித மாக விடயங்களை தெரிவிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

2008-ம் ஆண்டு டெஸ்ட் போட்டிகளில் இருந்து முழங்கால் உபாதை காரணமாகவே தான் ஓய்வுபெற்றதாகத் தெரிவித்த லசித் மலிங்க,

அந்த உபாதையின் பின்னர் தனக்கு தேசிய ஒப்பந்தம் வழங்கப்படவில்லை என வும் அது தன்னை அதிகமாகப் பாதித்தது என வும் லசித் மலிங்க தெரிவித்தார்.

நாட்டுக்காக போட்டிகளில் பங்குபற்றும் போது தான் உபாதைகளுக்கு உள்ளானதா கவும் எனினும் தான் மோசமான விதத்தில் நடத்தப்பட்டதாகவும் தெரிவித்தார்.

இரண்டரை வருடங்களாக தான் டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றவில்லையெனத் தெரிவித்த லசித் மலிங்க, அதன் பின்னர் முரளி தனது இறுதி டெஸ்ட் போட்டியில் பங்கு பற்ற வருமாறு அழைத்ததன் காரணமாகவே காலி டெஸ்ட் போட்டி யில் பங்குபற்றச் சம்ம தித்ததாகவும், லசித் மலிங்க தெரிவித்தார்.

அப்போட்டியில் 7 விக்கெட்டுகளை கைப் பற்றி 67 ஓட்டங்களை பெற்றுக் கொண்ட பின்னரே அனைவ ரும் தன்னைப் பற்றி மீண்டும் அறியத் தொடங்கினர்.

அதுவரை தன்னைப்பற்றி யாரும் கணக்கெடுத் திருக்கவில்லை எனவும் லசித் மலிங்க தெரிவித்தார்.

# லக்ஸ்மன் ஓய்வு வருத்தமளிக்கிறது-முரளி

இந்திய அணியின் டெஸ்ட் துடுப்பாட்ட வீரர் வி.வி.எஸ்.லக்ஸ்மனின் ஓய்வு வருத்தமளிப்பதாகவும் ஆச்சரியமளிக்கிறது எனவும் இலங்கை அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளரும், உலக சாதனையாள ருமான முத்தையா முரளிதரன் தெரிவித்துள்ளார்.


இந்தியக் கிரிக்கெட் அணியின் டெஸ்ட் துடுப்பாட்ட வீரரும் 4-வது இன்னிங்ஸ் நாயகன் என்று அழைக்கப்படும் வி.வி.எஸ்.லக்ஸ்மன், நியூசிலாந்து தொடருக்கு முன்னதாக திடீர் ஓய்வை அறிவித்தது கிரிக் கெட் உலகில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

பல கிரிக்கெட் வீரர்களும் அவரது ஓய்வுக்கு வருத்தம் தெரிவித்து ள்ளனர். அந்த வகையில் முரளிதரனும் ஆச்சரியமளிக்கிறது எனத் தெரிவித் துள்ளார். இது குறித்து அவர் கூறுகையில், வி.வி.எஸ்.லக்ஸ்மன் இந் தியாவைச் சேர்ந்த மிகச் சிறந்த வீரர்களில் ஒருவர். சுழற்பந்து வீச்சை மிகச் சிறப்பாக ஆடும் வீரர்களில் லக்ஸ்மன் முக்கியமானவர்.

லக்ஸ்மனுக்கு எதிராக பல தடவை விளையாடியபோதும் பெரும்பாலான தருணங்களில் லக்ஸ்மனே தன்னை வெற்றி கொண்டதாகத் தெரிவித்தார்.

# சின்சினாட்டி ஓபன் டென்னிஸ்

# பெடரர், ஹெர்பர் சம்பியன்



சின்சினாட்டி ஓபன் டென்னிஸ் ஆடவர் ஒற்றையர் பிரிவில் யோகோவிச்சை வீழ்த்தி பெடரர் சம்பியன் பட்டத்தை வென்றார்.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில், அமெரிக்கா ஓபன் கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் ஓகஸ்ட் 27ஆம் திகதி - செப்ரெம்பர் 9-ம் திகதி தொடர் நடைபெறவுள்ளது. இதற்கான ஒத்திகைப் போட்டியாக சின்சினாட்டி ஓபன் டென்னிஸ் நடைபெற்று வருகின்றது.


ஆடவர் ஒற்றையர் பிரிவு அரையிறுதியில், உலகின் நம்பர் 1 வீரரான சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர், சக நாட்டைச் சேர்ந்த ஸ்டானிஸ்லாஸ் வாவ்ரின்காவைச் சந்தித்தார்.

இதில் பெடரர் 7-6, 6-3 என்ற நேர் செட்கணக்கில் வெற்றிபெற்று இறுதிச் சுற்றுக்கு முன்னேறினார்.

மற்றொரு அரையிறுதியில் சேர்பியாவின் நோவாக் ஜோகோவிச் 6-3, 6-2 என்ற நேர் செட் கணக்கில் ஆர்ஜென்டினாவின் யுவான் மார்டீன் டெல்பெட்ரோவை வீழ்த்தி இறுதிச் சுற்றுக்குத் தகுதி பெற்றார்.

இறுதிச் சுற்றில் பெடரர் -ஜோகோவிச் மோதினர்.

அதிரடியாக விளையாடிய பெடரர் 6-0,7-6(9-7) என்ற கணக்கில் வென்று சின்சினாட்டி சம்பியன் பட்டத்தை வென்றார்.



மகளிர் ஒற்றையர் பிரிவு அரையிறுதியில் சீனாவின் லீனா 7-5, 3-6,6-1 என்ற செட் கணக்கில் அமெரிக்காவின் வீனஸ் வில்லியம்ஸை தோற்கடித்து இறுதிச் சுற்றுக்கு முன்னேறினார்.

மற்றொரு அரையிறுதியில் ஜேர்மனியின் ஹெர்பர் 6-1,2-6,6-4 என்ற செட் கணக்கில் செக்.குடியரசின் பெட்ரா கிவிற்ரோவை வீழ்த்தி இறுதிச் சுற்றுக்குள் நுழைந்தார்.

இறுதிச் சுற்றில் லீனா -ஏஞ்சலிக் ஹெர்பர் மோதினர்.

இதில் முதல் சுற்றில் சற்றுத் தடுமாறிய ஹெர்பர் பின்னர் சுதாகரித்து அதிரடியாக விளையடி 1-6,6-3,6-1 என்ற கணக்கில் வென்று மகளிர் ஒற்றையர் பிரிவு சம்பியன் பட்டத்தை வென்றார்.

இதில் ஆடவருக்கான இரட்டையர் பிரிவு அரையிறுதியில் இந்தியாவின் பூபதி-போபண்ணா ஜோடி குரோஷியாவின் இவான் டோடிக் -பிரேசிலின் மார்சிலோ மிலோ ஜோடியைச் சந்தித்தது.

இதில் ஆரம்பம் முதலே அபாரமாக விளை யாடிய பூபதி -போபண்ணா ஜோடி 6-4;6-3 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்று இறுதிச் சுற்றுக்கு முன்னேறியது.

இறுதிச் சுற்றில் இந்திய ஜோடி சுவீடனின் றொபேர்ட் லிண்ட்ஸ்டட் ருமேனியாவின் ஹோரியா டெகாயூ ஜோடியை எதிர்கொள்கிறது.




சர்வதேச இந்துமத குருபீடம்



நடாத்தும்

ஆன்மீகப் பெருவிழா

1ம் நாள் : 24.08.2012 வெள்ளிக்கிழமை

இடம் : நல்லை ஆதீன குருமூர்த்த சிவன் ஆலயம்

நேரம் : காலை 8.00 மணிமுதல் 10.30 மணிவரை

சர்வதேச இந்துமத குருபீடாதிபதி ஆன்மீக அருள்ஜோதி

ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சார்யார்

அவர்கள் தலைமையில்



மஹா கணபதி ஹோமம்

நடைபெறும்

பகல் 11.00 மணிக்கு மதியபோசன விருந்து (அன்னதானம்)

கணபதி ஹோம உபயம்: திரு. நடராஜா லக்ஷ்மன் குடும்பம், சாஸ்தா பீடம்.

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

அன்னதான உபயம்: பிரம்மஸ்ரீ நித்திய. சுதானந்த சர்மா (IDM சங்கானை)

திரு. S. அருணாசலம் குடும்பம், சாஸ்தா பீடம், கொழும்பு.

சர்வதேச இந்துமத குருபீடம் யாழ். மாவட்ட செயலகம்.

(249)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜி.எஸ்.பி.வரிச்சலுகை...

பிய ஒன்றியத்தினால் வழங்கப்படுகின்ற ஜீ.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகை நீக்கப்பட்டது.

அத்துடன் பல்வேறு நிபந்தனைகளுட னான விளக்கங்களையும் ஐரோப்பிய ஒன்றி யம் கோரியிருந்தது.

எனினும் இதற்கு அரசாங்கம் இதுவரை யில் எந்தப்பதில்களையும் வழங்கவில்லை என சாவேஜ் தெரிவித்துள்ளார். இந்தநிலையில் வரிச்சலுகையை மீண்டும் நீடிக்க முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ந-11)

# வெற்றிக்களிப்பை...

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்ட லைபீரிய அமைதி மற்றும் மனிதவுரிமை செயற்பாட்டாளரான லேமா ராபர்ட்டா குவோ வீக்கு கடந்த 2012ஆம் ஆண்டில் அமைதிக் கான நோபல் பரிசு வழங்கப்பட்டது.

இலங்கை நிலைமைகள் தொடர்பாக கருத்து வெளியிட்ட அவர், இராணுவ வெற் றியைக் கொண்டாடுவதை இலங்கை நிறுத்த வேண்டிய நேரம் இது.

எல்லா வேறுபாடுகளையும், களையும் வகையிலான நல்லிணக்கச் செயற்பாடுகளை இப்போதே தொடங்கவேண்டும்.

பொதுவாக எல்லா நாடுகளிலும் போருக் குப்பிந்திய சூழலில் உள்நாட்டு வன்முறை களும், பெண்கள் மீதான பாலியல் வல்லுற வுகளும் அதிகரிப்பது வழக்கம்.

ஆனால் அந்த நிலைமைகள் நீடித்துச் செல்வது அந்த நாட்டின் இறைமைக்கும், அபிவிருத்திக்கும் பின்னடைவை ஏற்படுத் தும் எனவே இவ்வாறான சூழ்நிலைகளில் சிக்கி யுள்ள இலங்கை அரசு தன் நாட்டு மக்களிடம் இன நல்லிணக்கத்தையும், சமாதானத்தையும் நீடிக்கும் முயற்சியை மேற்கொள்ள வேண்டும்.

இதேபோன்ற நிலையை எமது நாடும் (லைபீரியா) எதிர்கொண்டது. இதனால் நாம் நல்லிணக்க முயற்சிகளுக்கு முன்னுரிமை அளித்தோம். போருக்குப் பின்னர் பாலியல் வல்லுறவு குற்றங்களை விசாரிக்க தனி நீதி மன்றங்களை அமைத்தோம் என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ந-11)

# மீண்டும் ஒரு யுத்தத்...

மாதாந்தம் இவர்களுக்கு கிடைக்கும். எனவே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பெற்றிருந்த நிம் மதியான அபிவிருத்தி மிகுந்த ஆட்சியினை பாதுகாக்க கிழக்குத் தமிழ்மக்கள் முன்வர வேண்டும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

மட்டக்களப்பு, வவுணதீவு பிரதேசத்தில் இடம்பெற்ற தேர்தல் பிரசார கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் மேற்கண்டவாறு தமிழில் உரை யாற்றினார்.

மேலும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தனது பதவியை பேணி பாது காப்பதனையே இலக்காகக் கொண்டு செயற் பட்டு வருவதாக விளையாட்டுத்துறை அமைச் சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள் ளார்.

கட்சியைவெற்றிபெறச்செய்வதனைவிடுத்து, தனது பதவியை பாதுகாத்துக்கொள்ள ரணில் முயற்சித்துள்ளார். தற்போது ஐக்கியத் தேசி யக்கட்சி என்று ஒன்று கிடையாது. கட்சி நான் காக பிளவடைந்துள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் கைகளி லேயே ரணில் இருக்கின்றார். ஒற்றைக் காலில் நிற்குமாறு பணித்தால் ரணில் ஒற்றைக் காலில் நிற்பார். குளிக்க வேண்டாம் என்றால் குளிக்க மாட்டார். ரணிலை இயக்கும் ரிமோட் கொன்றோல் ஜனாதிபதியிடம் இருக்கின்றது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ந-11)

# யசூசி அகாசி...

கண்காணிப்பை மேற்கொள்ள அகாசி இலங்கை விஜயம் செய்யவுள்ளார்.

இந்த வார இறுதி வரையில் அகாசி இலங்கையில் தங்கியிருப்பார் என தெரிவிக் கப்படுகிறது.

ஆளும் எதிர்க்கட்சி அரசாங்கப் பிரதி நிதிகள் மற்றும் சிவில் அமைப்பு பிரதிநிதிகள் ஆகியோருடன் அகாசி பேச்சுவார்த்தை நடத்துவார் என குறிப்பிடப்படுகிறது.

தேசிய நல்லிணக்கத்தின் மூலம் நிலை யான சமாதானத்தை ஏற்படுத்துவது குறித்து கவனம் செலுத்தப்படும் என எதிர்பார்க்கப் படுகிறது.

அகாசி வடமாகாணத்திற்கு விஜயம் செய்து நிலைமைகளை நேரில் பார்வையிட வுள்ளார்.

இலங்கைக்கான விசேட பிரதிநிதியாக நியமிக்கப்பட்டதன் பின்னர் அகாசி மேற் கொள்ளும் 22ஆவது விஜயம் இது என்பது குறிப்பிடத்தக்கது. (ந-11)

# காணாமல் போனோர்...

முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

2006ஆம் ஆண்டில் மாத்திரம் 468 பேர் காணாமல் போயுள்ளதாகவும் அதில் 128 பேர் மீண்டும் திரும்பி வந்துள்ளதாகவும் முறைப்பாடுகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் காணாமல் போன 196 பேரின் நிலைமை இன்று வரை என்னவென்று தெரியா மல் உள்ளது.

இந்த 196 பேரின் நிலை பற்றி ஆராய் வதற்கு இலங்கை மனிதவுரிமை ஆணைக் குழுவின்விசேடக்குழுவொன்றுயாழ்ப்பாணத்திற்கு வருகைதர வுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்தோடு யாழ்.மாவட்டத்தில் அண்மை யில் நடைபெற்ற சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டம் போன்று கிளிநொச்சி மாவட்டத்திலும் சிவில் பாதுகாப்புக் குழுக்கூட்டம் அடுத்த மாத முற்பகுதியில் நடைபெறவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ந-6)

# சரத்-இந்தியத் தூது...

இந்த சந்திப்பு கடந்த 17ஆம் திகதி இந் திய உயர்ஸ்தானிகராலயத்திலேயே இடம் பெற்றுள்ளது.

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா எதிர்க்கட்சியில் இணைந்து செயற்படுவது அதற்கு தேவையான நிதி உதவிகளை வழங்குதல் தொடர்பில் இந்தச் சந்திப்பில் ஆராயப்பட்டுள்ளது.

இது இவ்வாறு இருக்க, இந்த சந்திப்பின் பின்னர் தென்பகுதியிலுள்ள தனது பிறப்பிட மான அம்பலாங்கொடை பிரதேசத்தில் இடம் பெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றிய சரத் பொன்சேகா, வலுவான எதிர்க்கட்சி ஒன்றினை உருவாக்கி அதனூடாக மக்கள் போராட்டத்தை முன்னெடுத்து மகிந்த அரசினை வீட்டுக்கு அனுப்ப வேண்டும் என்ற கருத்தை வெளி யிட்டுள்ளார்.

இப்போதைய பொம்மை வீரர்களிடமிருந்து இந்த நாட்டைபாதுகாக்க வேண்டிய அவசி யம் தனக்கு ஏற்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள சரத் பொன்சேகா, இதற்காக சிறை செல்ல வும் தயார் எனவும் சூளுரைத்துள்ளார். (ந-11)

# இராணுவம் வேணும்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.கரவெட்டிப்பகுதியில் அகற்றப்பட்ட படை முகாமை மீண்டும் அந்த இடத்தில் அமைப்பதற்கு ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்றுக் காலை நடத்தப் பட்டிருந்தது.

கரவெட்டி கலிகைப் பகுதியில் அமைத்திருந்த படை முகாம் கடந்த 7ஆம் திகதி அகற்றப்பட்டி ருந்த நிலையில் அதனை அகற்றியதால் அப் பகுதியில் சமூக பிறழ்வு நடத்தைகள் அதிகரித்தி ருப்பதாக கூறப்படுகின்றது.

மேலும் இராணுவத்தினர் இந்தப்பகுதியில் இருந்தகாலத்தில் இவ்வாறான சம்பவங் கள் எவையும் இடம் பெறவில்லை எனவும் எனவே இவ்வாறான பிறழ்வு நடத்தைகளை கட்டுப்படுத்து வதற்கு மீண்டும் படைமுகாம் அமைக்கப்பட வேண்டும் எனவும் ஆர்ப்பாட்டத்தில் கூறப்பட்டது.

இந்நிலையில் குறித்த ஆர்ப்பாட்டம் மக் களை வற்புறுத்தி மேற்கொள்ளப்பட்டதென்று அப்பகுதி மக்கள் குறிப்பிட்டுள்ளனர். வேணும் வேணும் இராணுவம் வேணும்; இராணுவம் இருந் தால் விபச்சாரம் இல்லை போன்ற வாசகங்கள் இவ் ஆர்ப்பாட்டத்தில் காட்டப்பட்டிருந்தன. (8)

# திருக்கேதீஸ்வர திருப்பணி...

அமைக்கப்பட்டு இருக்கின்றன.

அத்துடன் அந்த ஆலயத்தின் மகாமண்ட பத்தையும் கருங் கல்லினால் அமைப்பதற் கான திருப்பணிக்கு 365 மில்லியன் ரூபாய் இந்திய பணத்தை வழங்க இந்திய அரசு முன் வந்துள்ளது என்று இந்திய அமைச்சரின் விஜ யம் குறித்து விபரம் தெரிவித்த திருக்கேதீஸ் வர ஆலயத் திருப் பணிச்சபையின் செயலாளர் புலவர் அம்பலவாணர் திருநாவுக்கரசு தெரி வித்தார்.

இதற்கிடையில் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டு நேற்றுமுன்தினம் ஜனாதி பதியி னால் பொறுப்பேற்கப்பட்டுள்ள புத்தபெரு மானின் புனித சின்னங்கள் தற்போது களனி பௌத்த விகாரையில் பொதுமக்களின் வழி பாட்டுக்காக வைக்கப்பட்டிருக்கின்றன.

இந்தப் புனித சின்னங்கள் நாடெங்கிலும் உள்ள பௌத்த விகாரைகளுக்கு பொதுமக் களின் வழிபாட்டுக்காகக் கொண்டு செல்லப் படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-11)

# ராதிகா சிற்சபேசனுக்கு...

வி.கே.கிருஷ்ண மேனனின் பேரில் கடந்த 2006ஆம் ஆண்டு இந்த விருது உருவாக் கப்பட்டது.

அரசியல், பொருளாதாரம், இலக்கியம், அறிவியல், மனிதவுரிமை போன்ற துறை களில் சிறப்பாக சேவையாற்றுபவர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் இந்த விருது வழங்கப் பட்டு வருகிறது.

இலங்கையில் பிறந்த ராதிகா சிற்சபேசன், தற்போது கனேடிய நாடாளுமன்ற உறுப்பின ராக இருக்கிறார். மனிதவுரிமைக்காக போராடி யதை பாராட்டும் வகையில், இவருக்கு இந்த ஆண்டுக்கான விருதைவி.கே.கிருஷ்ணமேனன் இன்ஸ்டிடியூட் அறிவித்துள்ளது. (ந-11)

# வடக்கில் படைகளை...

சந்தித்து கலந்துரையாடினார்கள். இதன் போதே ஆயரினால் மேற்கண்டவாறு சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

இந்த சந்திப்பு தொடர்பாக யாழ்.ஆயர் ஊடகவியலாளருக்கு கருத்துத் தெரிவிக்கை யில், யாழ்.குடாநாட்டில் தற்போதைய நிலை வரம் தொடர்பாக அறிந்து கொள்வதற்காக இலங்கைக்கான அமெரிக்கப் பிரதித் தூதுவர் உள்ளிட்ட குழுவினர் வருகை தந்திருந்தனர்.

என்னுடனான சந்திப்பின் போது அமெரிக் கத் தூதுவர் ரெயின் ஒரு கேள்வியைக் கேட் டிருந்தார். அதாவது, வடக்கிலிருந்து இராணு வப் படைகள் குறைக்கப்படுவதாக அரசாங் கம் கூறுகின்றது அது உண்மையில் தமிழ் மக்களுக்குதிருப்தியாக உள்ளதா எனக் கேட்டார்.

அதற்கு அரசாங்கம் படைத்தரப்பை குறைப் பதாக கூறிக்கொண்டா லும் படைத்தரப்புகுறைப் புத் தொடர்பில் தமிழ் மக் களுக்கு இன்னும் திருப் பதி ஏற்பட வில்லை என கூறினேன்.

அத்தோடு மீள்குடி யேற்றத்தில் ஏற்படும் தாமதம் தொடர்பிலும் வடக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்துவதில் காட்டும் தாமதம் தொடர் பிலும் கூறினேன்.

இதில்வடக்குமாகாண சபைத் தேர்தலை அர சாங்கம் நடத்தினால் தமிழ் மக்களுக்கு ஒரு நம்பிக்கை பிறக்கும். ஆனால்அரசாங்கம் தேர் தலைநடத்த இழுத்தடிப்பு செய்து வருகிறது.

அத்தோடு அரசியல் தீர்வு முன்வைக்கப்பட வில்லை. தமிழ்த் தேசி யக் கூட்டமைப்புடனான சந்திப்பில் தீர்வு தொடர் பான பேச்சு வார்த்தை கள் சரிவர நடைபெற வில்லை அத்தோடு அரசியல் தீர்வை முன்வைப் பதில் அரசாங்கம் ஆர்வம் இல்லாமல் உள் ளது என கூட்டமைப்பின் தலைவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

அத்தோடு கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக் கையில் உள்ள தீர்மானங்களை நிறைவேற்ற அரசாங்கம் முன்வர வேண்டும்.

அரசாங்கம் தான் எல்லா வற்றையும் திருப்தியாக செய்வதாக கூறுகின்றது. ஆனால் தமிழ் மக்களோ அதிருப்தியை தான் வெளியிடு கின்றனர் எனவும் அரசாங்கத்திற்கும் தமிழ் மக்களுக்கும் இடையில் இடைவெளியுள்ள தாகவும் அமெரிக்க தூதுவர் தன்னிடம் தெரி வித்ததாக ஆயர் கூறினார். (ந-6)


## ஆங்கிலம் மற்றும் இசை வகுப்புக்கள்
## Spoken with Grammer

மாணவர்கள், தொழில் புரிபவர்கள், வெளிநாடு செல்ல விரும்புவோர் மற்றும் ஆங்கிலம் பேச விரும்பும் அனைவருக்கும் பேச பழகவோ or இலக்கண கற்றலுடனோ மிகவும் இலகுவான முறையில் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும். UK செல்வோருக்கான KET, IELTS தேர்வுக்கு தோற்றும் வகையில் கற்பிக்கப்படும் மற்றும் இசை வகுப்புக்களான ஓகன், கிற்றார் ஆகியவையும் கற்பிக்கப்படும்.

குறிப்பு :- எமது நிலையத்தில் வந்தும் கற்றுக் கொள்ள முடியும்.

தொடர்பு: 0777110523
சுண்டுக்குளி சந்தி
(ஜெய்ப்பூர் அருகில்)

(246)



## உடனடி வேலைவாய்ப்புக்கள்

உயர்தர பரீட்சை முடித்த இருபாலருக்குமான அதி உயர் வேலைவாய்ப்புக்களை பெற்றுக் கொள்வதற்கான விசேட பயிற்சிப்பட்டறை. வெளிநாட்டு பல்கலைகழகங்களில் மேற்படிப்பு படிக்க விரும்புவோர்களும் கலந்துகொள்ளலாம்.

அனுமதி இலவசம்.

மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள் உள்வாங்கப்படுவதினால் அனுமதிக்கு முந்துங்கள்.

SMS ஊடாக பதிவுகளை மேற்கொள்ளவும்.

Name <Space> ID No <> Send
0710 920 920



## விற்பனைக்கு

84 சிறி சிவப்பு நிற CD 200 மோட்டார் சைக்கிள், 4500 Km ஓடிய கறுப்புநிற Pulsar 150, புத்தம் புதிய 2011 மொடல் wpxJ நம்பர் மோட்டார் சைக்கிள் ஆகிய இரண்டு மோட்டார் சைக்கிள் விற்பனைக் குண்டு.



தொடர்புகளுக்கு : 0774050936



பிரித்தானியாவைத் தளமாக கொண்டு இயங்கும் "லிட்டில் ஏய்ட்" நிறுவனம் நடாத்தும்

## விடுமுறைகால இலவச கணணி பயிற்சி

• பெண்கள் மட்டும் பங்குபற்றலாம் • இலவச புத்தகங்கள்
• பிரித்தானியாவிருந்து பெறுமதிவாய்ந்த சான்றிதழ்கள்

ஆரம்பம் - 24.08.2012, வெள்ளி காலை 10.00 மணி
இடம் - நவமங்கை நிவாசம் (கல்வியற் கல்லூரிக்கு அருகில்)

0755062806


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.08.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.